வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu வார மலர் ஈழநாடு

Email : news@eelanadu.lk | மலர் : 06 | 23.11.2025 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 327 | பக்கங்கள் : 16

## கடுகன்னாவ மண்சரிவு ஆறு பேர் உயிரிழப்பு!

கொழும்பு, நவ. 23
கண்டி, பஹல கடுகன்னாவ பகுதியில் பிரதான வீதியோரத்தில் இருந்த வியாபார நிலையமொன்று மீது பாரிய கற்பாறையுடன் மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் 6 பேர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

நேற்று காலை 8.45 மணியளவில் பாரிய பாறையொன்றுடன் மண் மேடு சரிந்தது. இதன்போது வீடும், உணவகமும் முற்றாகச் சேதமடைந்தன.

மண்ணுக்குள் சிக்குண்டவர்களில் ஒருவரின் சடலம் ஆரம்பத்தில்

15

# இனவாத வலைக்குள் நாடு சிக்குவதற்கு இடமளியேன்!

### தமிழ், முஸ்லிம் கட்சிகளிடம் கூறினார் ஜனாதிபதி அநுர



கொழும்பு, நவ. 23
அனைத்து மத மற்றும் கலாசார அடையாளங்களையும் மதித்து, இந்த நாட்டின் ஒவ்வொரு பிரஜைக்கும் சுதந்திரமாக வாழ வாய்ப்பைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்றும், நமது நாடு எந்தவொரு இனவாத வலையிலும் சிக்குவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது என்றும் வலியுறுத்திய ஜனாதிபதி, அதற்காக அரசாங்கம் முன்னெடுக்கும் வேலைத்திட்டத்திற்கு அனைவரும் ஆதரவளிக்குமாறு அழைப்பு விடுத்தார்.

இந்த ஆண்டு டிசெம்பரில் நடைபெறவிருக்கும் இலங்கை தினத்திற்காக தற்போது திட்டமிடப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் குறித்து எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகளின் தலை வர்கள், பிரதிநிதிகளுக்கு விளக்கமளித்தல் மற்றும் கருத்துகள், பரிந்துரைகளைப்

15

## யுத்தத்தில் உயிரிழந்த மக்களுக்கு அஞ்சலி செய்தல் ஜனநாயக உரிமை!

### அமைச்சர் பிமல் ரத்நாயக்க



கிளிநொச்சி, நவ. 23
யுத்தத்தில் உயிரிழந்த மக்களுக்கு அஞ்சலி செலுத்துவது மக்களின் ஜனநாயக உரிமை என போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நிகழ்வொன்றில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கம் வர முன்பே மக்கள் இறந்தவர்களை நினைவு கூர்ந்தனர். அது அவர்களின் ஜனநாயக உரிமையாகவே காணப்பட்டது.

எமது அரசாங்கம் ஆட்சிக்கு வந்து இரண்டு வருடங்கள் ஆகின்றது.இறந்த தங்களுடைய உறவினர்களை சுதந்திரமாக நினைவு கூர முடியும். பாதுகாப்பு படையினரும் அதற்கு தடையாக இருக்க மாட்டார்கள்-என்றார். (அ)

## மாவீரர்களின் மடிவுக்கு பலனாக இனத்துக்கு விடிவு கிட்டவேண்டும்!

### மாவீரர் பெற்றோர் மதிப்பளித்தல் நிகழ்வில் சுமந்திரன்



முல்லைத்தீவு, நவ. 23
இந்த நாட்டில் அனைவரும் சமன் என ஜனாதிபதி சொல்வது உண்மையாக இருக்குமாக இருந்தால் உங்கள் சகாக்களை வணங்குவது போல் எமது மாவீரர்களது கனவையும் நனவாக்குகின்ற வகையில் அரசியல் தீர்வை வழங்க வேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில்

15

## யாழ். பழைய பூங்காவில் புதிதாக முளைக்கும் விளையாட்டு அரங்கு!

### மூடத்தனமான செயல் என்கிறார் ஐங்கரநேசன்

யாழ்ப்பாணம், நவ. 23
யாழ். நகரில் அமைந்துள்ள பல நூறாண்டுகள் ஆயுளையும் தாண்டிய மரங்களைக்கொண்ட ஒரேயொரு பூங்காவாக விளங்கிய பழைய பூங்கா ஏற்கனவே, தொலைநோக்குச் சிந்தனையின்றி அமைக்கப்பட்ட கட்டடங்களால் குற்றுயிரும் குலையுயிருமாகச் சிதைந்து போயுள்ளது. இந் நிலையில், தற்போது புதிதாக உள்ளக விளையாட்டு அரங்கை அமைப்பது பழைய பூங்காவின் உயிரை ஒரேயடியாகப் பறிக்கும் ஓர் மூடத்தனமான செயல் என்று தமிழ்த்

15

## முதலில் போதைப்பொருள் எரியூட்டியது நானே தான்!

### கூறுகிறார் மைத்திரிபால சிறிசேன



கொழும்பு, நவ. 23
முதலில் போதைப் பொருளை எரித்தது நான் தான். ஜனாதிபதியாக இருந்த காலத்தில் நான்கு போதைப் பொருள் கடத்தல் காரர்களுக்கு மரண தண்டனை

02

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இறுதி அறிக்கை விரைவில்!

கொழும்பு, நவ. 23
ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையை விரைவில் வெளியிடுவதற்கு அரசாங்கம் உறுதியளித்துள்ளதாக, அருட்தந்தை சிறில் காமினி தெரிவித்துள்ளார்.

ஏப்ரல் 21 தாக்குதல்கள் விவகாரம் தொடர்பில் ஜனாதிபதிக்கும், துறைசார் அதிகாரிகளுக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த சந்திப்பின் பின்னர் அருட்தந்தை சிறில் காமினி ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டார்.

15

## இனவாதத்தை ஒழிப்பதற்கு முழு ஒத்துழைப்பு தருவோம்!

### ஜனாதிபதியிடம் கூறினார் மனோ எம்.பி.

கொழும்பு, நவ. 23
"இனவாதத்தை ஒழிக்க, நீங்கள் கோரும் ஒத்தாசைகளை முழுமையாக வழங்குவோம். நாட்டின் அனைத்து இன, மத, மொழி, தனித்துவங்கள் பேணி பாதுகாக்கப்பட வேண்டும். அதற்கு சமாந்திரமாக, 'இலங்கையர் அடையாளம்' பேணி வளர்க்கப்பட வேண்டும்."

-இவ்வாறு ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளார் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தமிழ் முஸ்லிம் கட்சிகளின் எம்.பிக்களை நேற்று

15

## கிளிநொச்சிக்கு சுத்தமான குடிதண்ணீர் வழங்குவதற்கு ஒரு சிறு குழுவினர் தடை!

### சந்திரகுமார் சுட்டிக்காட்டு

கிளிநொச்சி, நவ. 23
கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு சுத்தமான குடிநீரை வழங்குவதற்கு மாவட்டத்தில் சட்ட விரோத செயற்பாடுகளுக்கு துணை போகின்ற அரசியல் தரப்பு ஒன்றின் ஆதரவுள்ள சிறு குழுவினர் தடையாக உள்ளனர் இதனால் இம்மாவட்ட மக்கள் மிகவும் ஆபத்தான நோய் மற்றும் நெருக்கடிகளுக்கு முகம் கொடுப்பதோடு, மாவட்டத்தின் அபிவிருத்திக்கும் தடை ஏற்பட்டுள்ளது என முன்னாள்

02

## ஊடக அடக்குமுறைகளுக்கு உரிய நீதி வழங்கவேண்டும்

### ரவிகரன் எம்.பி. கோரிக்கை

கொழும்பு, நவ. 23
கடந்த போர்க்காலத்தில் இடம்பெற்ற ஊடக படுகொலைகள் உள்ளிட்ட ஊடக அடக்குமுறைகளுக்கு இந்த அரசு நீதியைப் பெறுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

இந்த நாட்டில் ஊடக சுதந்திரம் பாதுகாக்கப்பட

02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகர்கோவிலில் நேற்று திடீரென பழுதடைந்த இ. போ. ச. பேருந்து

## பரீட்சைக்கு சென்ற மாணவர்கள் அவதி

யாழ்ப்பாணம், நவ. 23

வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டில் இருந்து பருத்தித்துறை நோக்கி நேற்றுக் காலை 06.00 மணிக்கு புறப்பட்ட இ. போ. ச. பேருந்து நாகர்கோவில் பகுதியில் திடீரென பழுதடைந்தது.

உயர்தர பரீட்சை எழுதும் மாணவர்களுடன் சென்ற இந்த பேருந்து நாகர்கோவில் பகுதியில் பழுதடைந்தது.

பரீட்சைக்கு செல்லும் மாணவர்கள், ஏனைய தொழில் துறைகளுக்குச் செல்லும் அதிகாரிகள் உரிய நேரத்துக்கு செல்ல முடியாமல் இடை நடுவில் அவதிக்குள்ளாகினர்.

யாழ். வடமராட்சி கிழக்கு பகுதியில் பயன்பாட்டில் இருக்கும் இ. போ. ச. பேருந்துகள் அண்மைக்காலமாக தொடர்ச்சியாக பழுதடைந்து வருவதால் உடனடியாக புதிய பேருந்தை தருமாறு மக்கள் பலமுறை கோரிக்கை விடுத்த போதும் மக்களின் கோரிக்கைக்கு இதுவரை உரியவர்கள் செவி சாய்க்கவில்லை என்று மக்கள் குற்றஞ்சாட்டினர்.

உரிய பேருந்து வசதியின்றி அவதிப்படும் வடமராட்சி கிழக்கு மக்களின் அவசர கோரிக்கைகளை சம்பந்தப்பட்டவர்கள் உடன் நிறைவேற்ற வேண்டும் என்று மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (எ-05)

# யாழ். குருநகர் கடலில் சிறுவனின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், நவ. 23

குருநகர் கடற்பரப்பில் நேற்றுக் காலை சிறுவன் ஒருவன் சடலமாக மீட்கப்பட்டார்.

இவ்வாறு, உயிரிழந்தவர் குருநகர் பகுதியைச் சேர்ந்த 17 வயதுடைய ஜோர்ஜ் ஸ்ரிபன் மதிவாணன் என அடையாளம் காணப்பட்டார்.

குறித்த சிறுவன் நேற்று முன்தினம் இரவு, அப்பகுதியில் உள்ள கடலட்டைப் பண்ணையைப் பார்வையிடுவதற்காக கடலுக்குச் சென்றிருந்த நிலையில் காணாமல் போனார். இதனைத் தொடர்ந்து, அப்பகுதி மக்களால் முன்னெடுக்கப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போதே நேற்றுக் காலை சிறுவனின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

சிறுவன் படகிலிருந்து தவறி கடலில் விழுந்து உயிரிழந்திருக்கலாம் என முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை யாழ் ப்பாணம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.(எ)

# டிசெ. 01- 06 ஆம் திகதி வரை நுளம்பு கட்டுப்பாட்டு வாரம்

## யாழ். அரசாங்க அதிபர் அறிவிப்பு



யாழ்ப்பாணம், நவ. 23

யாழ். மாவட்டத்தில் டிசெம்பர் முதலாம் திகதி தொடக்கம் 06 ஆம் திகதி வரை நுளம்பு கட்டுப்பாட்டு வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் டெங்கு நோயை கட்டுப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் தலைமையுரையாற்றிய அரசாங்க அதிபர் கூறுகையில், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் டெங்கு நோய் கட்டுப்பாடு ஓரளவு சீராகவுள்ளதாகவும் ஆனால் இவ்வருடம் இற்றைவரை 1027 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தொடர்ச்சியான டெங்கு நோய் கட்டுப்பாட்டு கண்காணிப்பு அவசியம் எனவும் தெரிவித்தார்.

மேலும், திண்மக்கழிவகற்றல் தொடர்பாக கழிவுகளை தரம் பிரித்து வழங்குதல் குறித்தும் கழிவு முகாமைத்துவத்தின் அவசியம் குறித்தும் அரச திணைக்களங்களால் திண்மக் கழிவுகளை தரம் பிரித்து வழங்கப்படுவது குறித்தும் உறுதிப்படுத்தல்கள் அவசியம்-என்றார். பாடசாலையில் மாணவர்களுக்கு இது தொடர்பான பழக்க வழக்கம் தேவை எனவும் வலயக்கல்விப் பணிப்பாளர்கள் விழிப்புணர்வை மாணவர்களுக்கு வழங்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

மேலும், டிசெம்பர் முதலாம் திகதி தொடக்கம் 06 ஆம் திகதி வரை நுளம்பு கட்டுப்பாட்டு வாரமாக பிரகடனப்படுத்துவதாவும் பிரதேச செயலாளர்கள் தமது பிரிவுக்குரிய தவிசாளர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள் மற்றும் சமூகமட்ட அமைப்புக்களையும் ஒருங்கிணைத்து, கிராமங்களை கொத்தணி ரீதியாக பிரித்து அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உள்ளிட்டவர்களையும் ஈடுபடுத்தி வீடுகள், பாடசாலைகள், அரச தனியார் நிறுவனங்கள், வணக்கஸ்தலங்கள் மற்றும் பொது இடங்களில் களத்தரிசிப்புக்கள் மேற்கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டார்.

மேலும், திண்மக் கழிவகற்றலில் கழிவுகளை தரம் பிரித்து வழங்குவதை உறுதிப்படுத்துமாறும் கேட்டுக் கொண்டார். (எ)

### ஊடக...

வேண்டுமெனவும் இதன்போது அவர் தெரிவித் துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் மீதான குழுநிலை விவாதத்தில், பங்கேற்று கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் வெளியிடுகையில்,

கடந்த போர்க்காலப்பகுதியில் ஊடகவியலாளர்கள், ஊடகப்பணியாளர்கள் படுகொலைசெய்யப்பட்டமை, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமை, ஊடகநிறுவனங் கள் மீதான தாக்குதல் நடத்தியமைக்கு நீதி பெற்றுக் கொடுக்கப்படவேண்டும்.

இந்த நாட்டில் ஊடகங்களின் சுதந்திரமும், சுயாதீனத்தன்மையும் உறுதிப்படுத்தப்படவேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்-என்றார். (அ)

### முதலில்....

வழங்குவதற்கு கையெழுத்திட்டுள்ளேன் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித் துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த அரசாங்கத்தில் நல்ல மற்றும் தீய விடயங்கள் ஆகிய இரண்டும் உள்ளன.

உதாரணமாக போதைப்பொருளை ஒழிக்கும் நடவ டிக்கையை எடுத்துக்கொண்டால், முதலில் போதைப் பொருளை எரித்தது நான் தான்.

வேறு எந்த ஜனாதிபதியும் போதைப்பொருளை எரிக்கவில்லை.

நான் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் நான்கு போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு மரண தண்டனை வழங்குவதற்கு கையெழுத்திட்டுள்ளேன்

எனவே, போதைப்பொருளை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுப்பது மிகவும் நல்லது-என்றார். (அ)

### கிளிநொச்சிக்கு...

பாராளுமன்ற உறுப்பினரும், சமத்துவக்கட்சியின் பொதுச் செயலாளருமான மு.சந்திரகுமார் தெரிவித் துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று அவரது அலுவலகததில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துரைத்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கிளிநொச்சி மக்களுக்கு குடிதண்ணீரை வழங்கு வதற்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை கிளிநொச்சி குளத்திலிருந்து நீரை பெற்று சுத்திகரித்து வழங்கி வருகிறது.

ஆனால் கிளிநொச்சி குளமானது கிளிநொச்சி நகரின் அனைத்து கழிவுகளும் வந்து சேர்கின்ற குளமாக காணப் படுவதோடு, ஆறு வழியாக இரத்தினபுரம் பாலம் ஊடாக கிளிநொச்சி வைத்தியசாலை கழிவுகள் உட்பட மனித உடலுக்கு தீங்கு விளைவிக்கின்ற பல கழிவுகள் கிளிநொச்சி குளத்தை வந்தடைகின்றன.

அத்தோடு கிளிநொச்சி குளம் மற்றும் அதன் நீரேந்து பகுதிகளை ஆக்கிரமித்து குடியேறியுள்ளவர்களின் மலக்கழிவுகளும் கிளிநொச்சி குளத்திற்கு வருகின்றன.

இதன் காரணமாக கிளிநொச்சி குளம் கழிவுகள் நிறைந்த குளமாக காணப்படுகிறது. இந்த குளத்திலி ருந்தே நீர் பெறப்பட்டு சுத்திகரிக்கப்பட்டு குடிதண் ணீருக்கு விநியோகிப்படுகிறது. ஆனால் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினரிடம் காணப்படுகின்ற நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மூலம் இக் கழிவுகள் அனைத் தையும் முழுமையாக சுத்திகரிக்கும் இயலுமை காணப் படவில்லை.

அதனால் கடந்த சில வாரங்களாக கிளிநொச்சி மக்க ளுக்கு விநியோகிக்கப்பட்ட குடிதண்ணீரின் தரம் மிக வும் மோசமாக பாதிக்கப்பட்டிருந்தமை நாம் அனை வரும் அறிந்த விடயமாகும்.

மேலும் கிளிநொச்சி மாவட்டத்தின் பல பிரதேசங்க ளில் நிலத்தடி நீர் மாசுப்பட்டுள்ளது. அதிகளவு விவசாய நடவடிக்கைகளில் அதிகளவு இராசயனங் களின் பயன்பாட்டால் இவ்வாறு நிலத்தடி நீர் பாதிக்கப் பட்டுள்ளது.

இதன் காரணமாக அந் நீரை குடிதண்ணீராக பயன்படுத்துகின்ற மக்களில் பலர் நிரந்தர சிறுநீரக நோய் தாக்கத்திற்குள்ளாகியுள்ளனர். முக்கியமாக கண்டாவளை பிரதேசத்தில் மூன்று வீதமான மக்களுக்கு சிறுநீரக பாதிப்பு நோய் ஏற்பட்டுள்ளது. இதற்கு பிரதான காரணம் குடிதண்ணீரை எனக் கூறப்படுகிறது.

எனவே இந்த மக்களை பாதுகாப்பது நம் அனைவரினதும் கடமையாகும். இந்த பிரதேசங்களுக்கு சுத்தமான குடிதண்ணீரை வழங்கவேண்டிய பொறுப்பு மாவட்டத்தின் உள்ள பொறுப்பு வாய்ந்த அனை வருக்கும் உண்டு ஒரு சிலரின் தனிப்பட்ட நலன்களுக்காக ஆயிரக்கணக்கான பொது மக்களின் சிறுநீரகங்களை அடைவு வைக்க முடியாது.

எனவே கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது 24 வீதமான மக்களுக்கு குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆதனை சுத்தமான பாதுகாப்பான நீராக விநியோகிக்கவேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும்.

இதற்கு முன் எவர் தடை ஏற்படுத்தினால் அவர்களை கருத்தில் எடுக்காது மக்களுக்கு சுத்தமான குடிதண்ணீரை வழங்க பொறுப்பு வாய்ந்தவர்கள் முன்வரவேண்டும்.

அத்தோடு பரந்தன் முதலீட்டு ஊக்குவிப்பு வலயம் கௌதாரிமுனை சுற்றுலாத்தளம் என்பவற்றுக்கு நீர் வசதியை வழங்கின்றபோதே மாவட்டம் அபிவிருத்தியை நோக்கி செல்லும் அறிவியல் நகர் பல்லைக்கழகம், இரண்டு பெரிய ஆடைத்தொழிற் சாலைகள், ஆனையிறவு உப்பளம் போன்றவற்றுக்கும் தடையின்றிய நீர் விநியோகம் அவசியம். இவை மாவட்டத்தின் அபிவிருத்தி சார்ந்த விடயம்.

எனவே இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு கிளிநொச்சி மாவட்டத்தின் சுத்தமான குடிதண்ணீர் விநியோகத்தை சம்மந்தப்பட்டவர்கள் உறுதி செய்யவேண்டும்.

கிளிநொச்சி கழிவுகள் தேங்கி நிற்கின்ற குளமான கிளிநொச்சி குளத்திலிருந்து நீரை பெறுவதனை நிறுத்தி இரணைமடுகுளத்திலிருந்து நேரடியாக நீரை பெற்று சுத்திகரித்து கிளிநொச்சி மக்களுக்கு பாதுகாப்பான சுத்தமான குடிடண்ணீர் விநியோகத்தை உறுதிப்படுத்துமாறு கோருகின்றேன்.

இரணைமடுக் குளத்தை மாவட்டத்தில் உள்ள ஒரு சிறு குழுவினர் ஏக போக உரிமை கோர அனுமதிக்க முடியாது. அவர்களின் நலன்களுக்காக மாவட்ட மக்களின் நலன்களை பகடைக்காயாக்க முடியாது. இரணைமடு கமக்கார அமைப்புகளின் சம்மேளனம் என்பது சட்ட ரீதியான பதிவுக்குட்பட்ட ஒரு அமைப்பு அல்ல என்பது தகவல் அறியும் உரிமைச்சட்டம் ஊடாக ஊடகவியலாளர் ஒரு தகவலை பெற்று வெளிப்படுத்தியிருகின்றார்.

எனவே சட்ட ரீதியற்ற ஒரு அமைப்பின் கருத்துக்க ளுக்காக கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு பாதுகாப் பற்ற குடிதண்ணீரை விநியோகிக்க அனுமதிக்க முடியாது. எனவே இதற்கு விரைவில் உரிய தீர்வு காணப்படவில்லை எனின் பாதிக்கப்பட்ட மக்களுடன் வீதியில் இறங்க வேண்டி ஏற்படும்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்றொழிலாளர்கள் தொழில் துறைசார் வல்லுநர்களாக பரிணாமம்பெற வேண்டும்

## யாழ். சமுத்திரவியல் பல்கலை. உதவி பணிப்பாளர்

யாழ்ப்பாணம், நவ. 23

கடற்றொழிலாளர்கள் தொடர்ந்தும் மீன்பிடியாளர்களாகவே இருக்காது தொழில் துறைசார் வல்லுநர்களாகவும் பரிணாமம் பெற வேண்டும் என யாழ். சமுத்திரவியல் பல்கலைக் கழகத்தின் உதவிப் பணிப்பாளர் திருமதி சயந்தன் லிந்தா தெரிவித்தார். இதற்கான அனைத்து துறைசார் கல்வியூட்டல்களையும் வழங்க சமுத்திரவியல் பல்கலைக்கழகத்தை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

உலக கடற்றொழிலாளர் தினத்தை முன்னிட்டு மெசிடோ நிறுவனத்தின் அனுசரணையில் "நவீன தொழில் நுட்பத்தின் ஊடாக சமுத்திரத்தில் மாற்றத்தை ஏற்படுத்தல்: சிறிய அளவிலான மற்றும் நிலையான மீன்வளத்தை வலுப்படுத்தல்" என்னும் தொனிப்பொருளில் நடமாடும் சேவை முறையிலான பயிற்சிப் பட்டறை ஒன்று யாழ்ப்பாணத்தில் உள்ள சமுத்திரவியல் பல்கலைக்கழகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது

இந்த நிகழ்வின் பின்னர் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

கடற்றொழில் சமூகம் மட்டுமல்ல, அந்தத் துறைசார் முயற்சிகளை முன்னெடுப்பவர்களை அடுத்த கட்டத்தை நோக்கி முன்னகர்த்திச் செல்லும் வகையில் சட்டரீதியான பயிற்சிகள் மட்டுமல்லாது என். வி. கியூ. தொழில் தகைமை சான்றிதழ், பட்டப்படிப்புகள் என கடல் சார் கற்கை நெறிகளை வழங்குவதற்கு சமுத்திரவியல் பல்கலைக்கழகம் ஒரு திறவுகோலாக இருக்கின்றது.

ஆனால், இங்கு கல்வி கற்பதற்கு மாணவர்கள் வருகை மிகக் குறைவாகவே உள்ளது. இதற்கான காரணத்தை தேடியபோது கடற்றொழில் சமூகத்தில் மட்டுமல்லாது இளைஞர் மட்டத்திலும் இது தொடர்பில் போதிய விழிப்புணர்வுகள் சென்றடையவில்லை.

இதேநேரம் இங்கு சாதாரண கற்கை நெறிகள் தொடக்கம் படகு இயந்திரங்கள் திருத்தல், ஆழ்கடல் நீச்சல், கடலுணவு தயாரிப்புகள் ஜி. பி. எஸ். கண்காணிப்பு மற்றும் அளவீட்டு முறை என பலவகையான தொழில்துறை கற்கைகள் நடைபெறுகின்றன.

இந்த கற்பிதங்களை மக்கள் மத்தியில் கொண்டு செல்ல வேண்டும் என்ற உத்வேகத்துடன் இம்முறை உலக கடற்றொழிலாளர் தினத்தை முன்னிட்டு பல்வேறு பகுதிகளிலும் நடமாடும், பயிற்சி கருத்தரங்குகளை முன்னெடுத்து வருகின்றோம்.

இந்த வாய்ப்பை அனைவரும் சரியாக பயன்படுத்திக் கொள்வதனூடாக தொழில் சந்தையில் தங்களை நிலை நிறுத்திக் கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்தார். (எ-05)

# 1000 சிறைகளில் அடைத்தாலும் எமது பயணத்தை கைவிடோம்

## ஹரின் பெர்னாண்டோ உறுதி



கொழும்பு, நவ. 23

மக்களை ஏமாற்றிய பொய்க்காரர்களை ஆட்சியிலிருந்து விரட்டியடித்த பின்னரே எமது பயணம் முடிவுக்கு வரும். எம்மை ஆயிரம் சிறைகளில் அடைத்தாலும் இந்த பயணத்தை நாம் நிறுத்தப் போவதில்லை. நாமல் ராஜபக்ஷவை போன்று இரண்டாம் தலைமுறை தலைவர்களை இணைத்துக் கொண்டு அரசாங்கத்துக்கு எதிரான பயணம் தொடரும் என ஐக்கிய தேசிய கட்சியின் பிரதி பொதுச் செயலாளர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

நுகேகொடையில் நேற்று முன்தினம் நடைபெற்ற அரச எதிர்ப்பு பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

76 ஆண்டுகால சாபம் குறித்து பேசும் இந்த சாப ஆட்சியாளர்கள் தொடர்பில் பேசும் பணியே எனக்கு வழங்கப்பட்டிருக்கிறது. 1948 இல் இருந்து 17 ஆண்டுகள் இந்த நாட்டில் சாபம் காணப்படவில்லை. 1965 பிறகு சாபங்கள் ஆரம்பித்தன. ரோஹண விஜேவீரவுக்கு ஆட்சி கிடைக்கவில்லை என்பதற்காக இவர்களே நாட்டில் அழிவை ஆரம்பித்தனர்.

ஜே.வி.பினரே 76 ஆண்டு கால சாபத்துக்கு பிரதான காரணம். இந்த அரசாங்கத்துக்கு எதிராக சகல எதிர்க்கட்சிகளும் ஒன்று கூடியுள்ள முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும். அடுத்தடுத்த கூட்டத்தில் இணைவதற்கு எந்தவித நிபந்தனையும் இன்றி ஐக்கிய மக்கள் சக்திக்கும் அழைப்பு விடுக்கின்றோம்.

மக்களை ஏமாற்றிய பொய்க்காரர்களை ஆட்சியிலிருந்து விரட்டியடித்த பின்னரே எமது பயணம் முடிவுக்கு வரும். நாமல் ராஜபக்ஷவை போன்று ஏனைய சகல கட்சிகளிலும் இரண்டாம் தலைமுறை தலைவர்கள் இருக்கின்றனர். அவர்கள் அனைவரையும் நினைத்துக் கொண்டு இந்தப் போராட்டத்தை தொடருவோம்.- என்றார். (எ)

# ஓட்டோவுக்குள் காயங்களுடன் சடலம் மீட்பு

மஹரகம, நவ. 23

மஹரகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கம்மான வீதி, 4ஆவது ஒழுங்கைக்கு அருகில் நிறுத்தப்பட்டிருந்த ஓட்டோ ஒன்றினுள், காயங்களுடன் உயிரிழந்த நிலையில் நபர் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் இரவு பொலிஸாரால் மீட்கப்பட்டது.

மஹரகம பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போதே இந்தச் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

குருநாகல், கல்கமுவ பிரதேசத்தைச் சேர்ந்த 57 வயதுடைய நபர் என அடையாளம் காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் ஒரு கொலையா? அல்லது வேறு ஏதேனும் காரணமா? என்பது தொடர்பில் மஹரகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# தொழில்முனைவோருக்கு வழங்கிய வாக்குறுதிகளை மீறிய அரசாங்கம்

## சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு



கொழும்பு, நவ. 23

தேர்தலுக்கு முன்பு நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முனைவோரை சிறப்பாக நடத்திய அரசாங்கம், இன்று அவர்களை மறந்து கைவிட்டுள்ளது. தேர்தல் காலத்தில் இவர்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் மீறப்பட்டுள்ளன. இதனால் இவர்களின் கடன்களை இப்போதாவது மறுசீரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நமது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 52 வீதம் பங்களித்து மற்றும் 45 இலட்சம் மக்களுக்கு வாழ்வாதாரத்தைப் பெற்றுத் தருபவர்களாக 11 இலட்சத்துக்கும் அதிகமான நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முனைவோர் காணப்படுகின்றனர். ஆனால், 2022 இல் இந்தத் தொழில்களில் 2 இலட்சத்து 60, 000 மூடப்பட்டுள்ளன. கடந்த 2 ஆண்டுகளில், மேலும் ஒரு இலட்சத்து 50,000 இற்கும் மேற்பட்ட முயற்சியாண்மைகள் மூடப்பட்டுள்ளன. அரசாங்கம் இந்த விடயத்தில் சாதகமான எந்த நடவடிக்கைகளையும் இதுவரை எடுக்கவில்லை. அரசியல் ஆதாயத்துக்காக வேண்டி, இரண்டு சந்தர்ப்பங்களில் பராட்டே சட்டம் இடைநிறுத்தப்பட்ட போதிலும், அவர்களின் கடன்களை மறுசீரமைப்பதற்கு எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.- என்றார். (எ)

# ஓ. ஐ. சி. உட்பட 25 பொலிஸ் அதிகாரிகள் இடமாற்றம்

கொழும்பு, நவ. 23

பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் உட்பட 25 பொலிஸ் அதிகாரிகள் பணி இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

தேசிய பொலிஸ் ஆணைக் குழுவின் அனுமதியுடன் பொலிஸ்மா அதிபரால் இந்த பணி இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதன்படி, வெள்ளிக்கிழமை முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த பணி இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (எ)

# அனைத்து நுண் கடன் நிதி நிறுவனங்களும் பிரதேச சபையில் அனுமதி பெற வேண்டும்

யாழ்ப்பாணம், நவ. 23

2026 ஆம் ஆண்டிலிருந்து வலி. மேற்கு பிரதேச சபைக்குள் செயல்படுகின்ற, நுண் கடன் நிதி நிறுவனங்கள் அனைத்தும் பிரதேச சபையில் அனுமதி பெற வேண்டும் என்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்று முன்தினம் தவிசாளர் சண்முகநாதன் ஜயந்தன் தலைமையில் நடைபெற்றது. இதன் போதே மேற்கண்டவாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இது தொடர்பான பிரேரணையை முன்மொழிந்த தவிசாளர் கூறுகையில்,

நிதி நிறுவனங்கள் ஏற்கனவே மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்டாலும் கூட எமது பிரிவான வலிகாமம் மேற்கு பகுதிக்குள் உள்ள நிதி நிறுவனங்களை கையாள வேண்டிய தேவை எங்களிடம் உள்ளது.

நுண்கடன் நிதி நிறுவனங்களால் ஏற்படும் பிரச்னைகள் அதிகரித்து செல்கின்றன. அவர்கள் எங்களிடம் அனுமதி எடுக்கின்றார்கள். இருந்தாலும் அதிகளவான வட்டி வீதங்களை அறவிடுவதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுகின்றன. இதற்கு எதிரான நடவடிக்கைகள் வெவ்வேறு பிரதேச சபைகளிலும் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன.

மத்திய வங்கியின் வட்டி வீதங்களை மீறாது செயல்படுமிடத்து அவர்கள் எமது பிரதேச சபை எல்லைக்குள் செயல்படுவதற்கான அனுமதியை 2026 ஆம் ஆண்டிலிருந்து கொடுப்பது என்றும், குடிபுகுதல் சான்றிதழை அந்த நிறுவனமானது கட்டாயம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற தீர்மானத்தையும் இந்த சபையில் எடுப்பதற்கு அனுமதி கோருகின்றேன்- என்றார்.

தவிசாளரின் குறித்த பிரேரணைக்கு அனைத்து உறுப்பினர்களும் ஏகமனதாக சம்மதம் தெரிவித்ததுடன், இவ்வாறான நிதி நிறுவனங்களால் சமூகத்தில் இடம்பெறும் தற்கொலை, மனவுளைச்சல் போன்ற பிரச்னைகளையும் சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.(எ-05)

# கட்டைக்காட்டில் காற்றால் வீடு ஒன்று பலத்த சேதம்

யாழ்ப்பாணம், நவ. 23

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு பகுதியில் நேற்று முன்தினம் இரவு வீசிய கடும் காற்றால் வீடு ஒன்று பலத்த சேதமடைந்துள்ளது

யாழ்ப்பாணத்தின் சில பகுதிகளில் கடும் மழை பெய்து வருகிறது. இந்த நிலையில் கட்டைக்காடு பகுதியில் காற்றுடன் பலத்த மழை பெய்தது.

அப்போது, கடும் காற்றில் சிக்கி வீடு ஒன்று சேதமடைந்துள்ளது. இவ்வாறு சேதமடைந்த வீடு பெண் தலைமைத்துவத்தை கொண்ட குடும்பத்தினருடையதென்று தெரிவிக்கப்படுகின்றது.

இராணுவத்தால் சில வருடங்களுக்கு முன்பு பெண் தலைமைத்துவம் கொண்ட இந்த குடும்பத்துக்கு வீடு அன்பளிப்பு செய்யப்பட்டது.(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திட்டமிட்ட குடியேற்றங்களை ஊக்குவித்த அநுர தரப்பினர்

## முன்னாள் எம். பி. கஜேந்திரன் சாடல்



மட்டக்களப்பு, நவ. 23

கடந்த காலங்களில் தமிழர் பகுதிகளில் முன்னெடுக்கப்பட்ட திட்டமிட்ட குடியேற்றங்கள் தொடர்பில் இந்த அநுர குமார திஸநாயக்க போன்றவர்கள் வாய்மூடிகளாகவேயிருந்தனர். இவ்வாறான திட்டமிட்ட குடியேற்றங்களை ஊக்குவிப்பவர்களாகவே கடந்த காலத்தில் இன்றைய தேசிய மக்கள் சக்தியினர் இருந்தனர் என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் தெரிவித் தார்.

1990 ஆண்டு பிரே மதாச பதவியேற்ற போது வடக்கிற்கு சுயாட்சி தருகின்றோம் கிழக்கினை விடுங்கள் என தமிழீழ தேசிய தலைவர் பிரபாகரனிடம் அவர் கோரியபோது இல்லை, வடக்கு - கிழக்கு தான் தமிழர்கள் தாயகம் என்று கூறி அதனை மறுத்த காரணத்தால் போர் மீண்டும் மூண்டது எனவும் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் கனடா வாழ் உறவுகளின் பேராதரவுடன் மாவீரர் பெற்றோர்கள், மாவீரர் குடும்ப உறவுகள் மதிப்பளித்தல் நிகழ்வு வெள்ளிக்கிழமை கொக்கட்டிச்சோலையில் நடைபெற்றது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மாவீரர்களின் பெற்றோர்களை கௌரவிக்கும் முகமாக அவர்களுக்கு விருந்தோம்பும் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டதுடன், பழமரக்கன்றுகளும் வழங்கப்பட்டன. (எ)

# கடல்வளம், நீரியல் வளங்களை பாதுகாக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும்

## உலக மீனவர் தினத்தில் அமைச்சர் சந்திரசேகர்

கொழும்பு, நவ. 23

"இலங்கையில் கடல்வளம் மற்றும் நீரியல் வளங்களை பாதுகாப்பதற்குரிய அத்தனை நடவடிக்கையும் முன்னெடுக்கப்படும். இதற்காக நவீன தொழில்நுட்பங்களும் பயன்படுத்தப்படும். இத்துறையில் நாம் அடுத்த கட்டத்தை நோக்கி செல்ல வேண்டும்."- என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

சர்வதேச மீனவர் தினத்தை முன்னிட்டு அக்வா பிளான்ட் இலங்கை - 2025 சர்வதேச மீன்வள கண்காட்சி நேற்று முன்தினம் கொழும்பு தாமரை கோபுர வளாகத்தில் ஆரம்பமானது.

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் தலைமையில் நடைபெற்ற ஆரம்ப விழாவில் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். கண்காட்சியையும் ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் தலைமை உரையாற்றிய அமைச்சர் மேலும் கூறுகையில்,

இப்பிராந்தியத்தில் நடக்கும் மிகப்பெரிய கண் காட்சி இதுவாகும். இதனை எமது நாட்டில் நடத்துவதற்கு கிடைத்த வாய்ப்பு பெருமையளிக்கின்றது. இதன்மூலம் உலகின் கவனத்தையும் ஈர்க்கலாம்.

எமது அமைச்சின் அதிகாரிகளின் அர்ப்பணிப்பு காரணமாகவே இவ்வளவு பெரிய கண்காட்சியை எம்மால் சிறப்பாக நடந்த முடிந்துள்ளது.

எமது நாட்டு கடல் மற்றும் நீரியல் வளங்களை பாதுகாப்பதே இந்த மாநாட்டின் முதன்மை நோக்கமாகும். இது விடயத்தில் ஜனாதிபதியின், ஏனைய அமைச்சர்களின்



அரசாங்கத்தின் முழு ஆதரவும் எமக்கு இருக்கின்றது.

இதேவேளை, சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கை மூலம் எமது நாட்டு கடல்வளத்தை நாசமாக்கும் நடவடிக்கையில் சிறு மீனக்குழுவொன்று ஈடுபட்டுள்ளது. இதனை தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

நாட்டில் கடற்படையினர் முன்னர் போல் அல்ல. தற்போது நாட்டை கட்டியெழுப்புவதற்கு சிறந்த பங்களிப்பை வழங்கி வருகின்றனர்- என்றார். (எ)

# "நாமலின் சட்டப்படிப்பு பற்றி விசாரிக்க 10 பொலிஸாரை லண்டன் அனுப்புங்கள்"



கொழும்பு, நவ. 23

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 160 இலட்சம் ரூபாய் செலவில் லண்டன் சென்றமை தொடர்பில் விசாரிப்பதற்காக, 320 இலட்சம் ரூபாய் செலவில் பொலிஸ் குழுவொன்று அங்கு சென்றுள்ளது. அது மாத்திரம் போதாது, நாமல் ராஜபக்ஷவின் சட்டப்படிப்பு தொடர்பில் விசாரிப்பதற்கு மேலும் 10 பொலிஸாரை லண்டனுக்கு அனுப்புங்கள் என்று பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தஸநாயக்க தெரிவித்தார்.

நுகேகொடையில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற அரச எதிர்ப்பு பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

இந்த அரசாங்கத்தின் அடக்குமுறை ஆட்சி மற்றும் ஊழலுக்கு எதிராகவே பல்வேறு பிரச்னைகளுக்கு மத்தியிலும் நூற்றுக்கணக்கான மக்கள் இங்கு கூடி இருக்கின்றனர். அவர்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். நாம் தலைவர்களை உருவாக்குவதற்காக இந்த கூட்டத்தை ஏற்பாடு செய்திருக்கின்றோம் என்று யாரும் நினைக்காதீர்கள். ஆனால், பொருத்தமான சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி கதிரையில் நாம் ஒரு சிறந்த தலைவரை அமர்த்துவோம். அதற்கு நபர்கள் யார் என்பதோ அல்லது என்ன கட்சி என்பதோ அவசியமல்ல.

வரவு- செலவுத் திட்ட உரையை ஒரு மணித்தியாலம் வாசித்த ஜனாதிபதி, மேலும் ஒரு மணித்தியாலயத்தை நாமல் ராஜபக்ஷவை தூற்றுவதற்காக எடுத்துக்கொண்டார். அன்று நாமலை சபையிலிருந்து வெளியேறுமாறு நான் கேட்டுக் கொண்டேன். அவ்வாறில்லை என்றால், அங்கிருந்த வெளிநாட்டு தூதுவர் மயங்கி விழுந்திருப்பர். ஜனாதிபதியின் உரை இரவு 10 மணி வரை தொடர்ந்திருக்கும்.

சிறையில் இருந்து நான் எனது பயணத்தை ஆரம்பித்தேன். அதனை இடை நடுவில் கை விட மாட்டோம். 2028 இல் நாமே ஆட்சி செய்வோம் என்று அன்று ஜனாதிபதி பாராளுமன்றத்தில் கூறினார். ஜனாதிபதியின் இந்த கனவு ஒருபோதும் நிறைவேறாது என்று இங்கு நான் உறுதியாக கூறுகின்றேன்.- என்றார். (எ)

### பண மோசடியில் ஈடுபட்ட

# வெளிநாட்டு வேலை வாய்ப்பு நிறுவனம் சுற்றிவளைப்பு

கொழும்பு, நவ. 23

வெளிநாட்டில் வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாக கூறி பண மோசடியில் ஈடுபடும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு நிறுவனம் ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் நான்கு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துக்கு கிடைத்த தகவலின் பேரில் கொழும்பு - மருதானை பிரதேசத்தில் உள்ள வெளிநாட்டு வேலை வாய்ப்பு நிறுவனம் ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பண மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் குறித்த வெளிநாட்டு வேலை வாய்ப்பு நிறுவனத்தின் அனுமதிப்பத்திரம் தற்காலிகமாக இரத்து செய்யப்பட்டுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

குறித்த வெளிநாட்டு வேலை வாய்ப்பு நிறுவனத்துக்கு எதிராக 85 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களில் நிறுவனத்தின் உரிமையாளரும் காணப்படுவதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

சந்தேக நபர்களிடமிருந்து 256 கடவுச்சீட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மேற்கொண்டு வருகிறது.(எ)

# மண்சரிவு அபாயம் காரணமாக கண்டி பிரதான வீதி மூடப்பட்டது

கண்டி, நவ. 23

மண்சரிவு அபாயம் காரணமாக கொழும்பு - கண்டி பிரதான வீதி கணேதென்ன பகுதியிலிருந்து மூடப்பட்டுள்ளது.

தொடர்ந்து பெய்துவரும் மழை காரணமாக, கொழும்பு - கண்டி பிரதான வீதியில், குறிப்பாக பஹல கடுகண்ணாவை பகுதியில், மண்சரிவு அபாயம் அதிகரித்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, வாகன சாரதிகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, கொழும்பு - கண்டி பிரதான வீதி, கணேதென்ன பகுதியிலிருந்து தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. (எ)

# கைத்தொழில் அபிவிருத்தி திட்டம் எதுவும் செயல்படுத்தப்படவில்லை



கொழும்பு, நவ. 23

தேசிய கடன் மறுசீரமைப் பால் பாதிக்கப்பட்ட சுமார் 11 இலட்சம் தொழில் முயற்சியா ளர்கள் மற்றும் கைத்தொழிலா ளர்களுக்கு எந்தவித தீர்வும் வரவு - செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்படவில்லை. நிறைவடைந்த ஒரு வருடத்தில் பாரியளவிலான கைத்தொழில் அபிவிருத்தி கருத்திட்டங்கள் ஏதும் செயல்படுத்தப்பட வில்லை. கடந்த அரசாங்கத்தின் திட்டங்களே முன்னெடுக்கப்ப டுகின்றன என ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விவாத த்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப் பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

போதைப்பொருள் மற்றும் பாதாளக் குழுக்களை முழுமை யாக ஒழிப்பதாக ஜனாதிபதி குறிப்பிடுகிறார். ஆனால், அவ்வாறு முழுமையாக இல்லாதொழிக்க முடியாது என்று ஆளும் தரப்பின் முக்கிய தலைவர்கள் கூறுகின்றனர். ஜனாதிபதியின் நிலைப்பாட்டுக்கும் அரசாங்கத்தின் முக்கிய தரப்பினரின் நிலைப் பாட்டுக்கும் இடையில் பரஸ்பர வேறுபாடுகள் காணப்படுகின்றன.

போதைப்பொருள் மற்றும் பாதாளக் குழுக்களுக்கு எதிராக கடும் நடவடிக்கைகளை அர சாங்கம் எடுக்க வேண்டும். இருப்பினும் அந்த நடவடிக்கைகள் அரசியல் இலாபத்தை அடிப்படையாகக் கொண்ட தாக அமைய கூடாது என்பதை குறிப்பிட்டுக் கொள்கிறோம். சிறந்த திட்டங்களுக்கு நாங்கள் நிபந்தனையற்ற வகையில் ஒத்துழைப்பு வழங்குவோம்.- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
23,11,2023 ஞாயிற்றுக்கிழமை
விசுவாவசு வருடம், கார்த்திகை 07

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# எதிர்க்கட்சிக்கான போட்டி?

நுகோகொடையில் இடம்பெற்ற அரசாங்க எதிர்ப்பு கூட்டத்தை தொடர்ந்து சில ஆயிரம் பேரைக் கூட திரட்ட முடியாதவர் என்று பரிகசிக்கப்பட்ட நாமால் ராஜபக்ஷ மீண்டும் தென்னிலங்கையில் ஒரு தலைவராக தன்னை முன்னிறுத்தியிருக்கின்றார். எதிர்க்கட்சித் தலைவராக தன்னை காண்பித்துவரும் சஜித் பிரேமதாச உண்மையிலேயே அரசாங்கத்தை எதிர்க்கும் விடயத்தில் ஒரு பிரதான சக்திதானா என்னும் கேள்வியையும் நுகேகொடை பேரணி ஒரு கேள்வியாக முன்னிறுத்தியிருக்கின்றது.

ஓர ஆட்சியாளரை எதிர்ப்பதற்கான அடிப்படையான பலம் என்பது முதலில் அரசாங்கத்திற்கான பிரதான எதிரணியாக ஒருவர் தன்னை நிரூபிக்க வேண்டும். அவ்வாறு நிரூபிக்கும் போதுதான் ஒரு வேளை அரசாங்கத்திற்கு எதிராக திரும்பும் மக்களுக்கு முன்னால் ஒரு தலைமையை முன்னிறுத்தி முடியும். இல்லாவிட்டால் மக்கள் நாலா புறமும் சிதறிச் செல்வார்களோ தவிர, ஒரு தலைமையை நோக்கி அணி திரள மாட்டார்கள். மக்களை ஒரு தலைமையை அல்லது ஒரு கட்சியை நோக்கி அணி திரளச் செய்வதில்தான் அதிகாரத்தை இடம்மாற்ற முடியும். மகிந்த ராஜபக்சவை தோற்கடிக்கும் அரசியல் ஆட்டத்தின் போது மைத்திரிபால சிறிசேன ஒரு தலைமையாக முன்னிறுத்தப்பட்டார்.

பெரும்பலான சிங்கள மக்கள் மைத்திரியை நோக்கி திரும்பாவிட்டாலும் கணிசமான சிங்கள மக்களும் அவர்களோடு தமிழ் முஸ்லிம் மக்களும் பெருவாரியாக அணிதிரண்ட போது மகிந்த ராஜபக்ச தேல்வி நிகழ்ந்தது. ஆனால் அந்தத் தோல்வி தன்னை ஒட்டுமொத்தமாக வீழ்த்தக் கூடிய ஒன்றல்ல என்பதை சரியாக கணித்துக் கொண்ட மகிந்த ராஜபக்ச, தான் வெளிநாட்டு சதியின் ஊடாக வீழ்த்தப்பட்டதான ஒரு அனுதாப அலையை ஏற்படுத்துவதில் ஆரம்பத்திலேயே வெற்றி பெற்றார்.

ரணில்-மைத்திரி ஆட்சியின் பலவீனத்தை துல்லியமாக மதிப்பிட்டுக் கொண்ட மகிந்த ராஜபக்ச ஆரம்பத்திலிருந்தே தன்னை ஒரு பிரதான எதிரணியாகப் பேணிக் கொள்வதில் வெற்றி பெற்றார். அந்த வெற்றிதான் பின்னர் கோட்டாபய ராஜபக்சவின் வெற்றியாக உரு மாறியது. மகிந்த ராஜபக்சவினால் ஏற்படுத்தப்பட்ட எதிரணிக்கான அடித்தளத்தையும் தன்னுடைய சொந்த வலையமைப்பையும் நன்கு திட்டமிட்டு ஒழுங்குபடுத்திக் கொண்ட கோட்டாபய ராஜபக்ச சிங்கள மக்கள் மத்தியில் கோட்டா அலையொன்றை ஏற்படுத்துவதில் வெற்றி பெற்றார்.

ஆனால் அதன் பின்னர் ஏற்பட்ட அரசியல் நெருக்கடிகள் முக்கியமாக பொருளாதார நெருக்கடியை கையாளுவதில் கோட்டாபய ராஜபக்ச தடுமாறிய போது, அதன் பின்னர் யார் என்னும் கேள்விக்கான பதிலாக ஜே.வி.பி தங்களை முன்னிறுத்தியது. அதுவே அநுரகுமார அலையாக மாறியது. அரகலயவிற்கு பின்னரான அரசியல் சூழலை ஜே.வி.பி மிகவும் கச்சிதமாக பயன்படுத்திக் கொண்டது. அதாவது, கோட்டாபயவின் வீழ்ச்சியை தொடர்ந்து அடுத்தது யார் என்னும் சிங்கள மக்களின் மத்தியிலான கேள்விக்கான பதிலாக தங்களை முன்னிறுத்துவதில் தேசிய மக்கள் சக்தி வெற்றி பெற்றது. அதுதான அவர்களது தேர்தல் அறுவடையானது.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால், ஒரு வேளை தேசிய மக்கள் சக்தியின் மீது அதிருப்தி உச்சமடையும் போது, அடுத்தது யார் என்னும் கேள்வி எழுந்தால், அப்போது யார் சிங்கள மக்களின் மனதில் தோன்றுவாரோ அவரே அடுத்த வெற்றியாளராக இருப்பார். இதனை நாமல் ராஜபக்ச துல்லியாக மதிப்பிட்டிருப்பது போன்றே தெரிகின்றது. ஆனால் சஜித் பிரேமதாச ஒரு எதிரணித் தலைவர் போன்று சிந்திப்பதாகத் தெரியவில்லை. ஒரு தலைமையை வழங்குவதற்கான தகுதியை இதுவரையில் சஜித் பிரேமதாச நிரூபித்தமைக்கான சான்றுகள் இல்லை. இந்தப் பின்புலத்தில் நோக்கினால் தென்னிலங்கையின் முதல் போட்டி அரசாங்கத்தை கைப்பற்றுவது அல்ல மாறாக எதிரணி என்னும் தகுதியை கைப்பற்றுவதுதான். யார் உண்மையான எதிரணித் தலைவர் - நாமால் ராஜபக்சவா அல்லது சஜித் பிரேமதாசவா? இந்தப் போட்டியில் வெற்றிபெறுவர்தான் சிங்கள மக்கள் மத்தியில் அடுத்த தெரிவாக இருப்பார். இடையில் ஒரு வேளை எதிர்பாராத மாற்றங்கள் ஏற்பட்டால் அன்றி, இதுதான் தென்னிலங்கையின் தற்போதைய நிலைமை.

## வட மாகாண மர நடுகை மாதம் கார்த்திகை - 2025



"நாகரிகத்தின்வேர் காடுகள்தான். கூட்டங்களில் இருந்து விலகியிருந்து மரங்களுடன், ஆறுகளுடன், ஏரிகளுடன் ஒன்றாய்க் கலந்திருந்த மனிதர்களிடம் இருந்துதான் தலைசிறந்த கருத்துகள் வந்துள்ளன. காடுகளின் அமைதி மனிதனின் அறிவாற்றல் பெருக உதவியுள்ளது."

- இரவீந்திரநாத் தாகூர் (வங்கக் கவிஞர்)

# சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வு



யாழ்ப்பாணம், நவ. 23

வடமராட்சி தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்தம் நடாத்தப்படும் நிகழ்வாக மகாபாரதம் தொடர்சொற்பொழிவு இடம் பெற்றது.

சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம் பெற்ற நிகழ்வில் ஆன்மீக உரையாக மகாபாரதம் என்ற தொடர் சொற்பொழிவினை ஆசிரியர் செஞ்சொற் செல்வர் .இரா.செல்வவடிவேல் நிகழ்த்தினார்.

இதெவேளை உதவிகளக சோந்தம்பை, கம்பர்மலையை சேர்ந்த விசேட தேவைக்குட்பட்ட குடும்பம் ஒன்றுக்கு மருத்துவ செலவிற்காக ரூபா 50,000 நிதியும், மாத்தறை பகுதியில் ஆலய மண்டப கட்டுமானப் பணிக்காக 1ஆம் கட்ட நிதயாக ரூபா 100,000 நிதியும்,

திருகோண மலை ஈச்சிலம்பற்று பிரதேசத்தில் அமைந்துள்ள எழுத்துக் கல்லுமலை முருகன் ஆலயத்திற்கான கும்பாபிஷேக நிகழ்வுக்காக ரூபா 150,000 திதியும் வழங்கிவைக்கப்பட்டதுடன்

முகத்தான்குளம் ஸ்ரீ சித்தி விக்னேஸ்வரர் ஆலயத்தில் செட்டிக்குளம் அறநெறி ஒன்றியமும், செட்டிக்குளம் பிரதேச செயலகமும் இணைந்து நடத்தும் "தெய்வீக கிராம நிகழ்வின் அன்னதான செலவுகளுக்காக ரூபா 50,000 நிதியும் வழங்கப் பட்டது.

இந்நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண் பாட்டு பேரவை நிர்வாகிகள், உறுப்பினர்கள், சந்நிதியான் ஆச்சிரம தொண்டர்கள், அடியவர்கள் நலன்விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டனர். (அ-02)

# நாகர்கோவிலில் பழுதடைந்தது பஸ் பரீட்சை எழுதும் மாணவர்கள் அவதி



யாழ்ப்பாணம், நவ. 23

வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டில் இருந்து நேற்று காலை பருத்தித்துறை நோக்கி காலை 6 மணிக்கு புறப்பட்ட அரசு பஸ் நாகர் கோவில் பகுதியில் பழுதடைந்தது.

உயர்தர பரீட்சை எழுதும் மாணவர்களுடன் சென்ற குறித்த பஸ் காலை ஏழு மணி அளவில் நாகர்கோவில் பகுதியில் பழுதடைந்தது.

இதனால் பரீட்சைக்கு செல்லும் மாணவர்கள்,அரச அதிகாரிகள், ஏனைய தொழில்துறைகளுக்குச் செல்லும் அதிகாரிகள் உரிய நேரத்துக்கு செல்ல முடியாமல் இடை நடுவில் நிர்க்கதியானார்கள்.

வடமராட்சி கிழக்கு பகுதியில் பயன்பாட்டில் இருக்கும் அரச பஸ்கள் அண்மைக்காலமாக தொடர்ச்சியாக பழுதடைந்து வருவதால் உடனடியாக புதிய பஸ்ஸை தருமாறு மக்கள் பலமுறை கோரிக்கை விடுத்த போதும் மக்களின் கோரிக்கைக்கு இதுவரை உரியவர்கள் செவி சாய்க்கவில்லை என்று குற்றம் சாட்டப்படுகிறது. (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌனம் பலவீனம் அல்ல!

அனந்தபத்மநாபன்

சில நேரங்களில், நாம் பேசாமல் இருந்திருக்க வேண்டிய ஒரு விஷயம் நாம் சொல்லக்கூடிய மிகவும் தேவையற்ற பேச்சாக இருக்கலாம்.

நம் வாழ்வில் வெற்றி, உறவு, மரியாதை என அனைத்தின் மதிப்பையும் தீர்மானிப்பது நாம் உச்சரிக்கும் வார்த்தைகள் மட்டுமல்ல, உள்ளிழுத்து நிறுத்திவைக்கும் வலிமையான வார்த்தைகளும்தான். ஏனெனில், உணர்ச்சிவசப்பட்டு வாய் தவறிச் சொல்லும் ஒரு நிமிஷ தகவல், பல ஆண்டுகளின் உழைப்பையும், நம்பிக்கையையும், ஏன், நம் எதிர்காலத்தின் பேரழிவு தரும் பெரும் செல்வத்தையும் கூட ஒரு விநாடியில் இழக்கச் செய்துவிடும் வல்லமை கொண்டது.

திருவள்ளுவர், பேச்சின் சக்தியையும், அதை அடக்க வேண்டிய அவசியத்தையும் மிக ஆழமாக வலியுறுத்தி,


"சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லும்சொல் இன்மை அறிந்து' (குறள் 645)

என்று கூறுகிறார்.

அதாவது, நாம் பேசும் வார்த்தையைவிடச் சிறந்த, அதை வெல்லக்கூடிய வேறொரு வார்த்தை இல்லை என்பதைத் தெளிவாக உணர்ந்த பின்னரே பேச வேண்டும். தேவையற்ற பேச்சுகளைத் தவிர்ப்போம்.

நாம் பேசும்போது, நம் திட்டங்கள், நிதி நிலைமை, பலவீனங்கள் போன்ற ரகசியமான விவரங்களை மற்றவர்களுக்கு இலவசமாகவே வழங்குகிறோம். இந்தத் தகவல்கள், நம்பிக்கைக்குப் பாத்திரமற்றவர்களின் காதுகளுக்குச் செல்லும்போது, நமக்கு எதிராகப் பயன்படுத்தப்படும் கூர்மையான ஆயுதமாக மாறலாம். மேலும், கோபம் உச்சத்தில் இருக்கும்போது வெளிப்படும் உணர்ச்சிமிகு வார்த்தைகள், மரண ஓசை போல ஆழமான வடுக்களை ஏற்படுத்தும். ஐந்து நிமிஷ ஆத்திரத்தில் பேசிய கடுமையான சொற்கள், பல ஆண்டு உறவின் அடித்தளத்தையே பிளந்துவிடும். அந்த சமயத்தில் காக்கும் மௌனம், இந்த இழப்புகளைத் தவிர்க்க உதவுகிறது.

மௌனம்தான் நமக்குத் தியானம் கட்டுப்பாடே வெற்றிக்கு ஆதாரம் உண்மையில் வெற்றி பெற்றவர்கள், தங்களுடைய ஒவ்வொரு சிந்தனையையும் உடனடியாக வார்த்தைகளாக மாற்றுவதில்லை. எப்போது, எங்கு, யாரிடம்



பேசுவது என்பதில் அவர்கள் கடுமையான கட்டுப்பாட்டோடும் நிதானத்தோடும் இருப்பார்கள்.

இந்த நிசப்தத்தின் அசைக்க முடியாத வலிமையை உணர்ந்து வென்ற சில மாமனிதர்களின் வாழ்க்கைப் பாடங்களைக் காண்போம். வாரன் பஃபெட், உலகின் மிகச் சிறந்த முதலீட்டாளராக இருந்தும், சந்தை நிலவரங்கள் குறித்து நாள்தோறும் கருத்து தெரிவிப்பதில்லை.

ஒரு நிறுவனத்தின் மதிப்பை ஆழமாகப் புரிந்துகொண்டால், விலைகள் ஏறுவதோ, இறங்குவதோ குறித்து அவர் கவலைப்படுவதில்லை. அவசரப் பேச்சையோ, பரபரப்பான வர்த்தகத்தையோ தவிர்த்து, நீண்ட கால நோக்குடன் அமைதியைக் கடைப்பிடிப்பதே அவரை உலகின் மாபெரும் செல்வந்தர்களில் ஒருவராக ஆக்கியது.

முன்னாள் இந்திய குடியரசுத் தலைவர் ஏ.பி.ஜே. அப்துல் கலாமின் வாழ்க்கையும் நிசப்தத்தின் வலிமையை உணர்த்துகிறது. இந்தியாவின் ஏவுகணைத் திட்டத்தை ஆரம்பித்தபோது, அது ரகசியமாக வைக்கப்பட வேண்டிய ஒரு சவாலான திட்டமாக இருந்தது. சர்வதேச அழுத்தம், உள்நாட்டுச் சந்தேகங்கள் நிறைந்தபோதும், அவர் பதிலளிக்காமல், தனது குழுவினருடன் பொதுவெளியில் பேசாமல், அமைதியாகப் பல ஆண்டுகள் உழைத்தார்.

இந்த நிசப்தமான, உறுதியான உழைப்புதான் அக்னி, பிரித்வி போன்ற ஏவுகணைகள் வெற்றிகரமாக ஏவப்பட முக்கியக் காரணமாக இருந்தது. "வெற்றி பேசும்போது, நாம் பேச வேண்டியதில்லை" என்பதற்கு இவரே சிறந்த உதாரணம். பேசுவதைவிடச் செயலாற்றுவதே சிறந்தது.

தாமஸ் ஆல்வா எடிசன் மின்விளக்கைக் கண்டுபிடிப்பதற்காக ஆயிரக்கணக்கான முறை தோல்வியைத் தழுவியபோதும், சோர்வடைந்து ஒருபோதும் வெளியே பேசவில்லை. தனது தோல்விகள் குறித்து தேவையற்ற பேச்சுகளைப் பேசாமல், அவர் ஆராய்ச்சி, பரிசோதனைக்கூடத்தின் அமைதியிலேயே கவனம் செலுத்தினார்.

இந்த மாமனிதர்களின் வாழ்க்கை நிரூபிப்பதுபோல, நாம் பேசாமல் இருந்த ஒவ்வொரு முறையும், ஒரு பெரிய சண்டையை, ஒரு தேவையற்ற வாக்குறுதியை அல்லது ஒரு பெரிய இழப்பைத் தவிர்த்திருக்கிறோம் என்பதை உறுதியாக நம்ப வேண்டும்.

எனவே, நம் வார்த்தைகளைச் செலவழிக்க வேண்டிய அரிய பொருளாகப் பார்க்க வேண்டும். தேவையற்ற பேச்சைத் தவிர்ப்போம். செலவழிக்கும்முன் அதன் மதிப்பை யோசிக்க வேண்டும்.

சில நேரங்களில் மௌனமே, நாம் சூட வேண்டிய விலைமதிப்பற்ற கிரீடமாக இருக்கும். நாம் நம் பேச்சைக் கட்டுப்படுத்த வேண்டும் நம் வாழ்க்கையின் முழுமையான கட்டுப்பாட்டையும் நாமே எடுத்துக் கொள்ள வேண்டும்!

மௌனமும் நிசப்தமும் ஆடம்பரம் அல்ல. அவை மனத் தெளிவுக்கான இன்றியமையாத கருவி. அவை முடிவெடுக்கும் முறையை, குழப்பமான, எதிர்வினை சார்ந்த செயல்பாட்டிலிருந்து, நிதானமான, திட்டமிட்ட, மற்றும் நுண்ணறிவுள்ள ஒன்றாக மாற்றுகின்றன.

நிசப்தம் என்பது பலவீனம் அல்ல. அதுவே அசைக்க முடியாத பலம். ●

## இந்தவார ராசிபலன் 23.11.2025 - 29.11.2025

ஞாயிற்றுக்கிழமை
விசுவாசவசு வருடம் - கார்த்திகை 07
நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : திரிதியை

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

ராசிநாதன் அஷ்டம ராசியில் இருந்தாலும் தன்னுடைய சொந்த ராசியில் ஆட்சி பலத்தோடு இருப்பது சிறப்பு. அதோடு இந்த வாரத்தில் சுக்கிரனுடைய பார்வையில் ராசி இருப்பதால் பொருளாதார நெருக்கடிகள் ஏற்படுவதற்கு வழி இல்லை. சனிராகு லாபஸ்தானத்தில் இருப்பதால் வருமானம் திருப்திகரமாக இருக்கும் குடும்பச் செலவுகள் அளவாக இருக்கும். ஐந்தாம் இடத்தில் உள்ள கேது தெய்வ திருத்தலங்களுக்குச் செல்லும் வாய்ப்பினை வழங்குவார்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

வார இறுதியில் ராசிநாதன் சுக்கிர பகவான் ஏழாம் இடத்தில் சூரியனோடு இணைந்து உங்கள் ராசியை வாய்ப்பு பொன்னான நேரமாக அமையும். அங்கே செவ்வாயும் இணைந்து இருப்பதால் சுக்கிர மங்கள யோகம் ஏற்படும். புதிய ஆடை அணிகலன்கள், ஆடம்பரப் பொருட்கள் என வாங்குவதில் கவனம் செல்லும். எச்சரிக்கையோடு இல்லாவிட்டால் பொருளாதாரத்தில் சிரமம் ஏற்படும். எல்லா காரியங்களிலும் ஒரு தடைக்குப் பின் தான் முயற்சிகள் முயற்சி பலிக்கும். குடும்பத்தில் மனைவியின் ஒத்துழைப்பும் பிரச்னைகளைத் தீர்க்கும்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

தன குடும்பஸ்தானத்தில் குருபகவான் உச்சத்தில் அமர்ந்து உங்கள் ஆறாவது மட்டும் அஷ்டம ராசியை பார்வையிடுவதால் கடன்கள் குறையும். எதிர்பாராத வருமானம் கிடைக்கும். இதுவரை பட்ட அலைச்சலுக்கு பலன் கிடைக்கும். மனதில் தெய்வச் சிந்தனை அதிகரிக்கும்.செவ்வாய் சுப பலத்தோடு இருப்பதால் சொந்த வீடு வேண்டும் என்று முயற்சி செய்தவர்களுக்கு பிரகாசமான வாய்ப்பு உண்டு. பதவி உயர்வு, சம்பள உயர்வு, இட மாற்றம் என எதிர்பார்ப்பவர்களுக்கு இப்பொழுது வாய்ப்பு நன்றாக இருக்கிறது.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் செவ்வாய் பலம் பெற்று இருக்கிறார். அவரோடு சூரியனும் இணைந்திருக்கிறார். பக்தி, தெய்வ தரிசனம் போன்ற விஷயங்களில் ஆர்வம் அதிகரிக்கும். கோயில் பயணங்கள் மேற்கொள்வீர்கள். ஜன்மத்தில் குரு இருந்தாலும் அவர் உங்கள் திரிகோண ராசிகளைப் பார்வையிடுவதால் கஷ்டங்களை சமாளிக்கும் அமைப்பு உண்டு. சிலருக்கு வெளியூர் அல்லது வெளிநாட்டுப் பயணம் செய்யும் வாய்ப்பு அமையும்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

ஆன்மிக விஷயங்களில் கவனம் செலுத்தும் வாய்ப்பு உண்டு. அதுவே இப்பொழுது உள்ள நிலையில் உங்களுக்கு பிரச்னைகளைத் தீர்க்கும் மருந்தாக அமையும். வாரத்தின் முதல் ஐந்து தினங்கள் சுக்கிரன் ஆட்சி வீட்டில் சஞ்சரிப்பதால் பணப்பிரச்னைகள் கட்டுக்குள் இருக்கும். பெரிய அளவில் பற்றாக்குறை ஏற்படாது. வீடு மனை முதலிய முதலீடுகள் ஓரளவு லாபத்தைத் தரும். பொறுப்புகள் கிடைக்கும். பயணங்கள் சாதகமாக இருக்கும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

பதினொன்றாம் இடத்தில் குரு பகவான் உச்சத்தில் சஞ்சரிக்கிறார். அவர் ஏழாம் பார்வையாக உங்கள் பூர்வ புண்ணிய ஸ்தானத்தைப் பார்ப்பது சிறப்பான பலன்களைத் தரும் குடும்பத்தில் உற்சாகமான சூழ்நிலை உருவாகும். சுப காரிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பழைய கடன்கள் அடைத்து நிம்மதிப் பெருமூச்சு விடுவீர்கள். வேலைக்காக முயற்சி செய்பவர்களுக்கு விரும்பிய வேலை கிடைக்கும். அதைப்போல பணி மாற்றம் விரும்பியவர்களுக்கும் பணி மாற்றம் கிடைக்கும் வாய்ப்பு உண்டு. நண்பர்கள் துணை புரிவார்கள்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

வாரத்தின் முதல் சில நாட்கள் ராசியில் உள்ள ராசிநாதன் சுக்கிரன், வாரக் கடைசியில் விருச்சிக ராசிக்கு நகர்கிறார். இந்த இரண்டு இடங்களிலும் அவர் சிறப்பான பலன்களைத் தருவார். குறிப்பாக பொருளாதாரத்தை மேம்படுத்துவார். ஆபரணச் சேர்க்கைகள் மற்றும் வாகன சேர்க்கைகள் முதலிய விஷயங்களைச் சாதகமாக நடத்தித் தருவார். குடும்பத்தில் அமைதி நிலவும். சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும். வருமானம் கிடைக்கும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

விரய ஸ்தானத்தில் சொந்த ராசியில் சுக்கிரன் சஞ்சரித்தாலும் வார இறுதியில் விருச்சிகத்துக்கு வருவது சிறப்பான பொருளாதாரப் பலனைத் தரும் அதோடு ராசிநாதனும் ராசியின் பலம் பெற்று இருக்கிறார். தொழிலில் புதுமையான மாற்றங்கள் ஏற்பட்டு உத்வேகத் தோடு செயல்படும். ஆற்றல் அதிகரிக்கும். பிரமுகர்களின் நட்பு கிடைக்கும். பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு சிறப்பான பதவிகள் கிடைக்கும். குடும்ப நிலைமை மேம்படும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

ராசிநாதன் உச்ச பலத்தோடு இருக்கிறார் அவர் அஷ்டமத்தில் இருக்கிறார் என்று கவலைப்பட வேண்டியது இல்லை. மறைமுகமான நற்பலன்களை அவர் தருவதோடு உங்கள் தன, குடும்ப ராசியையும் சுக ஸ்தானத்தையும் பார்வையிடுவதால் எத்தனைப் பிரச்னைகள் வந்தாலும் அவற்றையெல்லாம் கடைசியில் உங்களுக்கு சாதகமாகவே ஆக்கித் தருவார். ஆற்றலையும் முயற்சியையும் தந்து வெற்றிபெறச் செய்வார்கள்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இதுவரை பத்திலிருந்த சுக்கிரன் வாரக் கடைசியில் லாபஸ்தானத்தில் வந்து சூரியனோடு இணைகிறார். சுக லாபாதிபதி செவ்வாய் லாப ஸ்தானத்தில் ஆட்சி பலத்தில் இருந்து உங்கள் தன குடும்ப ஸ்தானத்தைப் பார்ப்பது சிறப்பு. கிட்டத்தட்ட ஏழரைச்சனி விலக, ஓரளவு சாதகமான பலன்களை உங்களுக்கு நடைபெறும். இனி புதிய செய்திகளாலும் சிந்தனையாலும் ஊக்கமும் உற்சாகமும் பெற்று புதிய முயற்சிகளில் ஈடுபடலாம்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

குரு ஆறாம் இடத்தில் உச்சம் பெற்று இருந்தாலும் உங்கள் விரயஸ்தானத்தையும் குடும்ப ஸ்தானத்தையும் பார்வை இடுவதால் செலவுகள் கட்டுக்குள் இருக்கும். அனாவசியமான செலவுகள் குறையும். யோசனை செய்து செலவு செய்தால் பொருளாதாரப் பிரச்னைகள் வராது. சுக்கிரன் பலமாக இருப்பதால் ஆடை ஆபரணச் சேர்க்கை ஏற்படும். பழைய வாகனங்களைக் கொடுத்துவிட்டு புதிய வாகனங்களை வாங்குவீர்கள். சிறிய மகிழ்ச்சிக்குரிய பிரயாணங்கள் ஏற்படும். வருமான வாய்ப்பு உண்டு.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

ஸ்தானமும் லாபஸ்தானமும் ராசிநாதன் பார்வையால் பலப்பட்டு இருப்பதால் ராசி பலம் பெறுகிறது. இரண்டுக்குரிய செவ்வாய் பாக்கியஸ்தானத்தில் ஆட்சிப்பலத்தோடு அமர்ந்திருக்கிறார். சூரியனோடு இணைந்து சூரிய மங்கள யோகத்தில் இருக்கிறார். வருகின்ற சிரமங்கள் எத்தகையதாக இருந்தாலும் சூரியனைக் கண்ட பனி போல விலகிவிடும். கூர்மையான சிந்தனையும் முன்யோசனையும் வழிநடத்தும். ஏழரைச் சனி ஒருபக்கம் இருந்தாலும் குருவின் பலம் அதிகரித்திருப்பதால் நன்மையே அதிகம் நடக்கும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. கலைத்துறை வாய்ப்புகள் அதிகரிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதத்தை அரசியலில் இருந்து பிரிக்காவிட்டால் இலங்கைக்கு எதிர்காலமே இல்லை!



♦ வீரகத்தி தனபாலசிங்கம்

திருகோணமலையில் கடந்த வாரம் புத்தர் சிலை தொடர்பாக மூண்ட சர்ச்சையை கையாளுவதற்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கடைப்பிடித்த அணுகுமுறையும் அதற்கு எதிரணி அரசியல் கட்சிகள் வெளிக்காட்டிய எதிர்வினையும் இதுகாலவரையில் இனவாத மற்றும் மதவாத அரசியலின் விளைவாக நாடும் மக்களும் அனுபவித்த அவலங்களில் இருந்து தென்னிலங்கை அரசியல் சமுதாயம் எந்தவிதமான படிப்பினையையும் பெறவில்லை என்பதை பிரகாசமாக வெளிக்காட்டியிருக்கிறது..

இலங்கையில் இனவாதமும் மதத்தீவிரவாதமும் மீண்டும் தலையெடுக்க ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை என்ற அரசாங்கத்தின் நிலைப்பாடு எதிர்நோக்கக்கூடிய சவால்களையும் அரசியலில் மீண்டெழுவதற்கு எதிரணி கட்சிகள் பெரும்பான்மை இனவாத அணிதிரட்டலை செய்வதற்கு கிடைக்கக்கூடிய எந்தவொரு சந்தர்ப்பத்தையும் பயன்படுத்தத் தவறப்போவதில்லை என்பதையும் திருகோணமலை சம்பவம் எமக்கு உணர்த்தியது.

திருகோணமலை கடற்கரையோரமாக அமைந்திருக்கும் ஸ்ரீ சம்புத்த போதி ரஜமகா விகாரை வளாகத்தில் நவம்பர் 16 ஞாயிற்றுக்கிழமை இரவோடிரவாக வைக்கப்பட்ட புத்தர்சிலையை பிக்குமாரின் எதிர்ப்புக்கு மத்தியில் பொலிசார் அகற்றினர் என்ற போதிலும், மறுநாள் திங்கட்கிழமை நண்பகல் அந்த சிலை அதே இடத்தில் பொலிசாரின் பாதுகாப்புடன் வைக்கப்பட்டு பௌத்த மத நிகழ்வுகள் இடம்பெற்றன.

இரவில் புத்தர் சிலைக்கு எவராவது சேதம் விழைவித்துவிடக்கூடும் என்ற காரணத்தினாலேயே பாதுகாப்பு கருதி அதை அகற்றியதாகவும் மீண்டும் அதே இடத்தில் அந்த சிலை வைக்கப்படும் என்றும் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால பாராளுமன்றத்தில் அன்றைய தினம் முன்கூட்டியே அறிவித்திருந்தார்.

புத்தர் சிலை அகற்றப்பட்ட வேளையில் விகாரை வளாகத்தில் இடம்பெற்ற குழப்பநிலையை பயன்படுத்தி இலங்கையில் பௌத்த மதத்துக்கு பேராபத்து ஏற்பட்டிருக்கிறது என்பதைப் போன்று எதிரணி கட்சிகள் பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் ஆவேசமாகக் குரலெழுப்பின. இந்து அல்லது கிறிஸ்துவ சிலை ஒன்று அது வைக்கப்பட்டிருந்த இடத்தில் இருந்து பொலிசாரினால் அகற்றப்பட்டிருந்தால் இத்தகைய அமர்க்களம் ஏற்பட்டிருக்குமா என்ற கேள்விக்கான பதிலை நாம் சொல்லித்தான் எவரும் தெரிந்துகொள்ள வேண்டியதில்லை.

பாராளுமன்றத்தில் நவம்பர் 18 ஆம் திகதி திருகோணமலை சம்பவங்கள் குறித்து பேசிய ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க மத வழிபாட்டுத் தலத்தை அமைப்பது தொடர்பிலானதாக இந்த சர்ச்சை தோன்றுகின்ற போதிலும், வேறு கதையும் அதற்குள் இருப்பதாக கூறினார். சம்பவங்கள் குறித்து பாதுகாப்பு செயலாளரிடம் அறிக்கை ஒன்றைக் கோரியிருப்பதாக தெரிவித்த ஜனாதிபதி அரசாங்கத்துக்கு எதிரான போராட்டத்தை நியாயப்படுத்துவதற்கு வேறு எந்த விவகாரமும் கிடைக்கவில்லை என்பதால் எதிரணியினர் இனவாதத்தை தூண்டிவிடுவதற்கு புத்தர் சிலை சர்ச்சையை பயன்படுத்துவதில் நாட்டம் காட்டுகிறார்கள் என்றும் அதற்கு ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை என்றும் குறிப்பிட்டார். அவரைப் பொறுத்தவரை, நீதிமன்றம் உத்தரவைப் பிறப்பித்திருக்கும் நிலையில், அந்த சர்ச்சை முடிவுக்கு வந்துவிட்டது.


வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் என்று தாங்கள் கருதுகின்ற இடங்களில் மாத்திரமல்ல, பௌத்தர்கள் வசிக்காத இடங்களிலும் கூட பிக்குமாரில் ஒரு பிரிவினர் புத்தர் சிலைகளை இரவோடிரவாக கொண்டுவந்து வைப்பதும் பிறகு படிப்படியாக அரசாங்கங்களின் அனுசரணையுடன் விகாரைகளை கட்டியெழுப்புவதும் புதிய ஒரு விடயம் அல்ல. சம்பந்தப்பட்ட பகுதிகளின் மக்களிடமிருந்து எதிர்ப்புகள் கிளம்புகின்ற வேளைகளில் அரச இயந்திரம் சட்டவிரோதமானது என்று அந்த மக்கள் குற்றஞ்சாட்டுகின்ற நடவடிக்கைகளுக்கு துணைபோவதே நடைமுறையாக இருந்துவருகிறது.

திருகோணமலையில் புத்தர் சிலை அகற்றப்பட்ட இடத்திலேயே மீண்டும் பொலிசாரின் உதவியுடன் அது கொண்டு வந்து வைக்கப்பட்ட சம்பவத்தையும் அதற்கு அரசாங்கத் தரப்பில் அளிக்கப்பட்ட விளக்கத்தையும் மேற்கூறிய வழமையான நடைமுறையே தொடருகின்றது என்பதற்கான சான்றாக ஏன் கருதமுடியாது என்பதற்கு ஜனாதிபதியும் அரசாங்க தலைவர்களும் மாத்திரமே பதில் கூற வேண்டும்.

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச உட்பட எதிரணி அரசியல்வாதிகள் புத்தர் சிலை சர்ச்சை தொடர்பாக கருத்து வெளியிட்டபோது இலங்கையின் அரசியலமைப்பில் பௌத்த மதத்துக்கு முதன்மையான முன்னுரிமை கொடுக்கப்பட்டிருப்பதை அடிக்கடி சுட்டிக்காட்டியதை காணக்கூடியதாக இருந்தது.

ஆனால், அந்த முன்னுரிமையை பிக்குமாரில் ஒரு பிரிவினர் அல்லது மதவாத அடிப்படையில் சமூகங்களுக்கு இடையில் குரோதங்களை ஏற்படுத்த முயற்சிக்கும் சக்திகள் தங்களின் சட்டவிரோதமான அல்லது பௌத்த தர்மத்துக்கு மாறான நடவடிக்கைகளை நியாயப்படுத்த தவறான முறையில் கேடயமாகப் பயன்படுத்துவதை எவ்வாறு அனுமதிக்க முடியும்? தாங்கள் எதைச் செய்தாலும் அரசாங்கம் தட்டிக்கேட்க முடியாது என்ற எண்ணத்தை மகாசங்கத்தின் ஒரு கணிசமான பிரிவினர் வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

பௌத்த மதத்துடன் தொடர்புடைய சகல பணிகளையும் முன்னெடுப்பதில் பிக்குமாருக்கு இருக்கும் சுதந்திரத்தில் தலையீடு செய்வதற்கு எவருக்கும் உரிமை கிடையாது என்று கூறும் பிரேமதாச, பௌத்த மதத்தின் அடிப்படைக் கோட்பாடுகளுக்கு முரணான அடாத்தான நடவடிக்கைகளில் பிக்குமாரில் சில பிரிவினர் ஈடுபட்ட எத்தனை சம்பவங்களை பகிரங்கமாக கண்டனம் செய்தார் என்ற கேள்வியை கேட்காமல் இருக்க முடியவில்லை.



> “சாந்தமே உருவான புத்தர் சிலையை ஆக்கிரமிப்பின் ஒரு கருவியாக சிறுபான்மைச் சமூகங்கள் நோக்குகின்ற துரதிர்ஷ்டவசமான நிலைவரத்தை மாற்றியமைக்க வேண்டியதும் அரசாங்கம் தீர்வுகாண வேண்டிய அந்த பிரத்தியேகமான பிரச்சினைகளில் ஒன்று.”

பௌத்த மதத்துக்கு அரசியலமைப்பு வழங்கியிருக்கும் முன்னுரிமையை சட்டத்தின் ஆட்சிக்கு சவால் விடுக்கக்கூடிய வகையிலான நடவடிக்கைகளுக்கு பிக்குமாரில் ஒரு பிரிவினர் பயன்படுத்துகிறார்கள் என்பது வெளிப்படையானது.

கடந்த காலத்தில் முஸ்லிம் சமூகத்துக்கு எதிரான வன்முறைகளுக்கு தலைமை தாங்கியவர் என்று அறியப்பட்ட பிரச்சினைக்குரிய பிக்கு ஒருவர் புத்தர் சிலை சர்ச்சைக்கு பிறகு கடந்த வாரம் திருகோணமலைக்கு சென்று சமூகங்களுக்கு இடையில் குரோதங்களை தூண்டும் வகையில் பேசியிருப்பதுடன் அரசாங்கத்துக்கு சாவாலும் விடுத்திருக்கிறார். இஸ்லாமிய மதத்தை நிந்தனை செய்யும் விதத்தில் பேசியதாக நீதிமன்றத்தினால் குற்றவாளியாகக் காணப்பட்ட அவர் திருகோணமலை சர்ச்சையில் தன்னை ஈடுபடுத்துவதில் வலிந்து நாட்டம் காட்டுகிறார்.

பெரும்பான்மையான சிங்கள பௌத்த மக்கள் இத்தகைய பிக்குமாரின் முறைகேடான செயற்பாடுகளை ஆதரிப்பதில்லை என்று கூறப்படுகிறது. ஆனால், அவற்றை அவர்கள் எதிர்ப்பதுமில்லை என்பது துரதிர்ஷ்டவசமானது. கெடுதி செய்பவர்களினால் அல்ல, அந்த கெடுதியை தடுக்க எதையும் செய்யாமல் இருப்பவர்களினாலேயே உலகம் ஆபத்தானதாக இருக்கிறது என்ற அறிவியல் மேதை அல்பேர்ட் அயன்ஸ்டீனின் கூற்று நினைவுக்கு வருகிறது. கெட்டவர்களின் வெறுப்பு பேச்சுக்களுக்கும் செயல்களுக்காகவும் மாத்திரமல்ல, நல்லவர்களின் மௌனத்துக்காகவும் இந்த தலைமுறையில் நாம் பச்சாதபப்பட வேண்டியவர்களாக இருக்கிறோம் என்று அமெரிக்க கறுப்பின தலைவர் மார்டின் லூதர் கிங் கூறினார்.

சிறுபான்மைச் சமூகங்களுக்கு எதிரான வெறுப்பு அரசியல் இலங்கைக்கு ஒன்றும் புதியதல்ல. அது இலங்கையின் பெரும்பான்மை இனவாத அரசியலுடன் சமாந்தரமாக வளர்ச்சி கண்ட அருவருக்கத்தக்க ஒரு போக்காகும். ஆனால், சகல சமூகங்களுக்கும் அழிவை ஏற்படுத்திய மூன்று தசாப்தகால உள்நாட்டுப் போருக்கு பின்னரும் கூட, தென்னிலங்கை அரசியல் சமுதாயம் சிறுபான்மைச் சமூகங்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளை ஏற்றுக் கொள்ளத் தவறுவதே பெரும் கவலைக்குரியதாக இருக்கிறது.

அரசியலில் பெரும் செல்வாக்கைச் செலுத்துவதற்கு பௌத்த மதகுருமார் நாட்டம் காட்டுவதே இலங்கையில் பல பிரச்சினைகளுக்கு தீர்வுகளைக் காணமுடியாமல் இருப்பதற்கான முக்கிய காரணங்களில் ஒன்றாகும். பிக்குமார் நேரடியாக அரசியலில் ஈடுபட்டு தேர்தல்களில் போட்டியிடுகிறார்கள். அவர்களின் செயல்கள் புத்தபெருமானின் அடிப்படைப் போதனைகளுக்கு முரணானதாக இருந்தாலும் கூட, நேரடி அரசியலில் ஈடுபடுவதில் இருந்து அவர்களை தடுக்க மகாநாயக்கர்களினால் கூட முடியாமல் இருக்கிறது. இலங்கையில் பௌத்தம் நடைமுறையில் ஒரு அரசியல் மதமாக மாற்றப்பட்டுவிட்டது.

தென்னிலங்கை அரசியல் வரலாற்றில் பௌத்த மத குருமாரின் செல்வாக்கு பெருமளவுக்கு எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்தியிருக்கிறது. இன்று தமிழர்களின் அரசியலிலும் முன்னென்றும் இல்லாத வகையில் மதவாதம் ஊடுருவுகின்ற போக்கை காணக்கூடியதாக இருக்கிறது. இந்தியாவின் 'இந்துத்வா' அரசியலின் செல்வாக்கே இதற்கு காரணம் எனலாம். சிங்களவர்களாக இருந்தாலென்ன, தமிழர்களாக இருந்தாலென்ன இலங்கைச் சமூகம் அரசியலில் இருந்து மதத்தைப் பிரிக்காவிட்டால் இலங்கைக்கு எதிர்காலம் இல்லை.

ஜனாதிபதி திசநாயக்கவும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் வெறுமனே சகல குடிமக்களையும் சமத்துவமாக நடத்துவதே தங்களின் கொள்கை என்று கூறிக்கொண்டிருந்தால் மாத்திரம் போதாது. கடந்த காலத்தில் அரசாங்கங்கள் கடைப்பிடித்த பாகுபாடான கொள்கைகள் மற்றும் அடக்குமுறைகளின் விளைவாக சிறுபான்மைச் சமூகங்கள் அனுபவிக்கின்ற பிரத்தியேகமான பிரச்சினைகளை போக்குவதற்கு நடவடிக்கைகளை எடுப்பதில் அக்கறை காட்டினால் மாத்திரமே சமத்துவமான குடிமக்கள் என்ற உணர்வை அந்த மக்கள் மத்தியில் படிப்படியாக ஏற்படுத்த முடியும்.

சாந்தமே உருவான புத்தர் சிலையை ஆக்கிரமிப்பின் ஒரு கருவியாக சிறுபான்மைச் சமூகங்கள் நோக்குகின்ற துரதிர்ஷ்டவசமான நிலைவரத்தை மாற்றியமைக்க வேண்டியதும் அரசாங்கம் தீர்வுகாண வேண்டிய அந்த பிரத்தியேகமான பிரச்சினைகளில் ஒன்று.

அரசாங்கத்துக்கு எதிரான பிரசாரங்களுக்கு இனவாதத்தையும் மதவாதத்தையும் பயன்படுத்துவதில் எதிரணி கட்சிகள் கொண்டிருக்கும் நாட்டத்தை திருகோணமலை புத்தர் சிலை சர்ச்சை வெளிக்காட்டியிருக்கிறது. தங்களது தவறான ஆட்சிமுறையையும் ஊழல் மற்றும் அதிகார துஷ்பிரயோகங்களையும் மறைப்பதற்காக பெரும்பான்மை இனவாத அணிதிரட்டலை தீவிரமாக முன்னெடுத்த முன்னைய ஆட்சியாளர்கள் பொருளாதார ரீதியில் நாட்டை வங்குரோத்து அடையச் செய்ததை நாட்டு மக்கள் மறந்துவிடக்கூடாது. மீணடும்

அத்தகைய அணிதிரட்டலை அனுமதித்தால் தொடர்ந்தும் அதே பிரச்சினைகளுடனேயே இலங்கையர்கள் வாழவேண்டியிருக்கும். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடைமுறையில் இன சமத்துவத்தை மெய்யானதாக்குதல்!



கலாநிதி ஜெகான் பெரேரா

மாகாணசபைகள் முறையை நிறுவுவதற்காக அரசியலமைப்புக்கு கொண்டுவரப்பட்ட 13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் அரசாங்கம் தொடர்ந்து தெளிவற்ற ஒரு போக்கையே வெளிக்காட்டி வருகின்றது. இனநெருக்கடிக்கு மாகாண சபைகள் ஒரு தீர்வு என்று ஏற்றுக் கொள்ளவில்லை என்று தேசிய மக்கள் சக்தி அதன் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியது. ஆனால், மாகாண சபைகள் முறை தங்களது நலன்களுக்கு உகந்தது என்று தமிழ், முஸ்லிம் சமூகங்கள் நம்புவதாக அது ஏற்றுக்கொண்டது.

அதனால், சிறந்த ஒரு ஏற்பாட்டின் மூலம் பதிலீடு செய்யப்படும் வரை மாகாணசபைகள் முறை தொடர்ந்து நடைமுறையில் இருக்கும் என்று தேசிய மக்கள் சக்தி உறுதியளித்தது. அதே நிலைப்பாட்டை அரசாங்க தலைவர்கள் அண்மைக்காலமாக அடிக்கடி கூறிவருகிறார்கள். மாகாணசபை தேர்தல்களை நடத்துவதற்கான காலப்பகுதி குறித்து தெளிவற்ற அறிவிப்புக்களையும் அவர்கள் செய்து வருகிறார்கள். தொகுதிகளின் எல்லைகளை நிர்ணயம் செய்த பிறகு தேர்தல்களை நடத்துவதே அரசாங்கத்தின் தற்போதைய நிலப்பாடு போன்று தெரிகிறது.

எல்லை நிர்ணயம் தொடர்பில் அரசியல் கட்சிகள் மத்தியில் கருத்தொருமிப்பு இல்லாத நிலையில், தேர்தல்களை தாமதிப்பதற்கு ஒரு சாட்டாக எல்லை நிர்ணயத்தை முன்னைய அரசாங்கங்கள் பயன்படுத்தின. எந்தவிதமான பாகுபாடுமின்றி சகல குடிமக்களையும் சமத்துவமானவர்களாக நடத்துவதே தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் விருப்புக்குரிய நிலைப்பாடாகும். அது இன, மத சிறுபான்மைச் சமூகங்களினால் வரவேற்கப்பட்டிருக்கிறது. அரசாங்கத்தின் பாதகமான நடவடிக்கைகளினால் இனிமேல் பாதிக்கப்படாமல் இருக்க முடியும் என்று அவர்கள் நம்பினார்கள்.

ஆனால், தனிநபர்களின் சமத்துவ உரிமைகள் மற்றும் பாகுபாடின்மை மீதான பற்றுறுதி முக்கியமானது என்பதுடன் குறுகிய காலத்துக்கு நம்பிக்கை அளிப்பதாகவும் இருக்கின்ற அதேவேளை, இலங்கையின் பன்முகத் தன்மைக்கு உயிரூட்டக்கூடிய ஆழமான அரசியல் அபிலாசைகளை கையாளுவதற்கு போதுமானதல்ல. இலங்கை ஒரு நகரம் அல்ல என்ற எளிமையான காரணத்தினால் (மத்தியில் இருந்து நிருவகிக்கப்படுகின்ற) சிங்கப்பூர் போன்று வந்துவிடமுடியாது. இலங்கை புராதன மதங்கள், மொழிகள், நினைவுகள் மற்றும் அடையாளங்களைக் கொண்ட ஒரு நாடாகும்.

பயனுறுதியுடைய ஒரு முறையில் அதிகாரத்தை பகிரக்கூடிய திருப்திகரமான ஒரு அதிகாரப்பகிர்வு கட்டமைப்பு ஒன்று இல்லாவிட்டால், கடந்த காலத்தில் போருக்கு வழிவகுத்த இனநெருக்கடிக்கு அடிப்படையாக அமைந்த பதற்றங்கள் மீண்டும் வெளிக்கிளம்பக்கூடிய ஆபத்து இருக்கிறது. மாகாணசபைகள் முறையின் தேவைக்கான காரணங்களை இலங்கையில் பலர் அறியாமல் இருப்பதே பிரச்சினையாகும். இலங்கை போன்ற சிறியதொரு நாட்டில் மாகாணசபைகள் செயற்திறனுடன் செயற்பட முடியாது என்றும் அநாவசியமானது என்றும் அவர்கள் கருதுகிறார்கள்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பிரிவினைவாதச் சிந்தனைக்கு மாகாணசபைகள் ஊக்கமளிக்கலாம் என்ற ஒரு கவலையும் இருக்கிறது. மாகாணசபை தேர்தல்களை நடத்துவதில் உள்ள தாமதமும் அந்த தேர்தல்களை நடத்துவதற்கான செயன்முறைகளை துரிதப்படுத்துவதற்கு அரசாங்கம் காட்டும் தயக்கமும் மாகாண சபைகள் முறையை எதிர்க்கின்ற குழுக்களுக்கு உற்சாகத்தை கொடுக்கின்றன. தேசிய கூட்டுக் கமிட்டி என்ற சிங்களத் தேசியவாதக் குழு ஒன்று 13 வது திருத்தம் ' பழமைப்பட்டுப் போன' ஒன்று என்ற நிலைப்பாட்டை எடுத்திருக்கிறது.

அதிகாரப்பரவலாக்கம் என்பது பழைமைப்பட்டுப் போன ஒன்று என்ற சிந்தனை உலகளாவிய சான்றுகளை அலட்சியம் செய்வதாக இருக்கிறது. அடையாளம் என்பது அபிவிருத்தியுடனோ அல்லது சுபிட்சத்துடனோ மறைந்துவிடுவதில்லை. தங்களது சொந்தத்தில் வரலாறுகளை, நிறுவனங்களை, நோக்குகளைக் கொண்டிருக்கும் தேசங்களான வேல்ஸ், ஸ்கொடலாந்து மற்றும் வட அயர்லாந்தின் கோரிக்கைகளுடன் ஐக்கிய இராச்சியம் தொடர்ந்தும் மல்லுக் கட்டிக்கொண்டிருக்கிறது. ஸ்கொட்லாந்து உயர்ந்த வாழ்க்கைத் தரத்தையும் ஐக்கிய இராச்சியத்தின் ஏனைய பாகங்களுடன் ஆழமான பொருளாதாரப் பிணைப்புக்களையும் கொண்டதாக இருக்கின்ற போதிலும், பிரிந்து சுதந்திர நாடாகச் செல்வதற்கு வாக்களிக்கின்ற அளவுக்கு நெருக்கமாகவும் கூட சென்றது.

பரந்தளவிலான சுயாட்சி, சொந்த மொழி உரிமைகள் மற்றும் அரசியல் நிறுவனங்களின் ஊடாக கியூபெக் மாகாணத்தை கனடா அரவணைத்துச் செல்கிறது. ஃபிளெமிஷ் மற்றும் வலூன் பிராந்தியஙகளுக்கு இடையில் கட்டமைக்கப்பட்ட அதிகாரப்பகிர்வு ஊடாக பெல்ஜியம் செயற்படுகிறது. பாஸ்க் பிராந்தியம் மற்றும் கற்றலோனியாவின் அபிலாசைகளை ஸ்பெயின் தொடர்ந்தும் சமாளித்துச் செல்கிறது.

இவையெல்லாம் உறுதிப்பாடில்லாத அல்லது ஒழுங்காக ஆட்சிசெய்யப்படாத அரசுகள் அல்ல. அவை வளர்ச்சியடைந்த ஜனநாயக நாடுகள். அத்தகைய பின்புலங்களில் அடையாளங்கள் உறுதியாக இருக்கின்றன என்றால் பிராந்தியங்கள், மொழி மற்றும் சொந்தம் கொண்டும் உரிமை பற்றிய நினைவுகள் மிகவும் பழமையானவையாகவும் ஆழமானவையாகவும் இருக்கின்ற இலங்கையிலும் அடையாளங்கள் நிச்சயமாக உறுதியானவையாக தொடர்ந்து இருக்கும்.

இலங்கை வரலாறு பூராவும் ஒரு அதிகாரத்தின் கீழ் பிளவுபடாத தனியொரு தேசமாக இருக்கவில்லை என்பதை மகாவம்சம் கூறுவதை வரலாற்றுப் பதிவுகளில் காணக்கூடியதாக இருக்கிறது. நீண்டகாலமாக தனித்தனியாக ஆட்சிசெய்யப்பட்ட பிராந்தியங்களை இலங்கை கொண்டிருந்தது. இது மக்களின் அரசியல் நினைவுகளின் ஒரு பகுதி. சொந்தம் கொண்டாடும் நவீன உணர்வையும் இது வடிவமைக்கிறது.

**சகல மக்களையும் சமத்துவமானவர்களாக நடத்துவதில் அரசாங்கத்துக்கு உண்மையான அக்கறை இருந்தால், அதேயளவு அக்கறையை அரசியல் அதிகாரப்பகிர்விலும் காண்பிக்க வேண்டும். அப்போது மாத்திரமே சமத்துவம் என்ற சிந்தனை நடைமுறையில் மெய்யானதாக இருக்க முடியும்.**




புராதன உலகுடன் தொடர்புடைய மிகவும் பழமை வாய்ந்த ஒரு நாகரிகத்துடன் ஆழமான வரலாற்றையும் வரலாற்றின் அடுக்குகளையும் கொண்ட ஒரு நாடு இலங்கை. எல்லாவற்றுக்கும் மேலாக, அதன் மண்ணில் ஆழமான வேர்களைக் கொண்ட ஒன்றுக்கும் மேற்பட்ட மக்கள் குழுமங்களின் தாயகமாக இலங்கை விளங்குகிறது. அதன் காரணத்தினால்தான் சமத்துவமான குடியுரிமை தானாகவே தேசியப் பிரச்சினையை தீர்த்துவிடப்போவதில்லை.

சமத்துவமான குடியுரிமை அவசியமானதே. ஆனால், தனித்துவமான பிராந்தியங்களையும் நீண்டகால அடையாளங்களையும் கொண்ட ஒரு நாட்டில் அது மாத்திரம் போதுமானதல்ல. இனத்துவ மற்றும் சமூக அடையாளங்கள் மிகவும் பலம்வாய்ந்தவை. அவற்றை அழித்துவிட முடியாது. அதன் காரணத்தினால்தான் பிராந்திய அடிப்படையிலான அதிகாரப் பகிர்வு தேவைப்படுகிறது.

இந்த உண்மையை கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்து ஒவ்வொரு அரசாங்கமும் ஏற்றுக்கொள்ள வேண்டியிருந்தது.1957 பண்டாரநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தம் பிராந்திய அடிப்டையிலான அதிகாரப்பகிர்வின் தேவையின் முதலாவது உத்தியோகபூர்வ அங்கீகாரமாகும். 1956 ஆம் ஆண்டில் தமிழ்பேசும் இனத்தவர்கள் மற்றும் மதச் சிறுபான்மையினர்கள் மீது சிங்கள மொழி திணிக்கப்பட்ட பிறகே அந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இந்திய அரசாங்கத்தின் தலையீட்டுக்கு அல்லது விடுதலை புலிகளின் தோற்றத்துக்கு வெகு முன்னதாகவே அது நடந்தது.

தீர்வு எந்த திசையில் இருக்கிறது என்பதை சகல அரசாங்கங்களும் தெரிந்திருந்தன. அதன் காரணத்தினால் தான் “13 பிளஸ்” பற்றி மகிந்த ராஜபக்ச பேசினார். ஆனால், நாட்டின் எதிர்காலத்தையும் சிறந்த நலன்களையும் மனதிற்கொண்டு அரசியல் மேதைகளாக முன்னோக்கிச் செல்வதற்கு அவர்கள் தயாராக இருக்கவில்லை. தேசியவாதமும் பழைய அச்சங்களும் குறுக்கே வந்தன. பிரச்சினையை தீர்த்து சமாதானத்தையும் அபிவிருத்தியையும் கொண்ட ஒரு புதிய கட்டத்துக்கு நாடு நகருவதற்கு வழிவகுக்கக்கூடிய தீர்மானங்களை அதிகாரத்தில் இருந்தவர்கள் எடுப்பதை அந்த தேசியவாதமும் பழைய அச்சங்களும் தடுத்தன.

முன்னைய அரசாங்கங்களினால் தீர்வுகாண இயலாமல்போன அல்லது அந்த அரசாங்கங்கள் தீர்வைக் காண விரும்பாத பிரச்சினைகளை கையாளுவதற்கு தயாராயிருப்பதை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வெளிக்காட்டுகிறது. பட்ஜெட்டில் தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள அதிகரிப்பு தொடர்பாக செய்யப்பட்ட அறிவிப்பு இதற்கு ஒரு உதாரணமாகும். பல தலைமுறைகளாக தோட்டத் தொழிலாளர்கள் எத்தகைய அவலமான சூழ்நிலைகளில் வாழ்ந்துவருகிறார்கள் என்பதை அது ஏற்றுக்கொள்கிறது. ஆனால், சம்பளப் பிரச்சினையை மாத்திரம் கையாளுவது போதுமானதில்லை.

தோட்டத் தொழிலாளர்கள் வறுமையினால் மாத்திரம் துன்பத்தை அனுபவிக்கவில்லை, தங்களது இனத்துவ அடையாளம் தொடர்பான மரபு மற்றும் நிலத்தைப் பெறுவதற்கான அவர்களின் உரிமையையும் அங்கீகாரத்தையும் மறுத்த அரசியல் தீர்மானங்களினாலும் அவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். சுதந்திரத்துக்கு பிறகு உடனடியாக அவர்களில் பத்து இலட்சம் பேர் நாடற்றவர்களாக்கப்பட்டார்கள். வாழ்வதற்கும் விவசாயம் செய்வதற்கும் நிலம் வேண்டும் என்ற தோட்டத் தொழிலாளர்களின் கோரிக்கை வெறுமனே பொருளாதார அடிப்படையிலானது மாத்திரமல்ல, கௌரவமான வாழ்க்கைக்கும் இந்த நாடு தங்களுக்கும் சொந்தமானது என்று உரிமை கொண்டாடுவதற்குமான கோரிக்கையுடனும் சம்பந்தப்பட்டதாகும். இந்த வரலாற்றை அரசாங்கம் ஏற்றுக் கொண்டு அவர்களது நிலப்பிரச்சினையையும் அரசியல் ரீதியில் ஓரங்கட்டப்படுகின்ற நிலைவரத்துக்கும் தீர்வுகளைக் காண வேண்டும்.

மலையக தமிழ்ச் சமூகத்தின் உரிமைகளை அங்கீகரிப்பது என்பது வடக்கு,கிழக்கில் பிராந்திய அடிப்படையில் அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்வதற்கு சமாந்தரமானதாகும். இரண்டு பிரச்சினைகளிலுமே அடையாளங்களும் இந்த நாடு தங்களுக்கும் சொந்தமானது என்று உரிமை கொண்டாடுவதற்கான அந்தஸ்து மற்றும் அவர்களின் எதிர்காலத்தை வடிவமைப்பதற்கு அவசியமான சமூக உரிமைகளும் சம்பந்தப்பட்டிருக்கின்றன.

வடக்கு, கிழக்கில் பிராந்திய அடிப்படையில் அதிகாரங்களைப் பகிர்வது நாட்டின் ஐக்கியத்துக்கு ஒருபோதும் அச்சுறுத்தலாக அமையமுடியாது. பதிலாக அதனால் ஐக்கியத்தை உத்தரவாதப்படுத்தக்கடியதாக இருக்கும். இலங்கை அதன் சகல மக்களுக்கும் சொந்தமானது என்ற சிந்தனையை அது பலப்படுத்தும். அரசியல் மற்றும் சமூக வாழ்வில் அதன் சகல சமூகங்களையும் உள்ளடக்கும் ஒரு நாடு, யதார்த்தமாக இருக்கின்ற பல்வகைமையை நிராகரிக்கின்ற நாட்டை விடவும் பலம்பொருந்தியதாக இருக்கும். அதிகாரப் பகிர்வின் மூலமாக சமத்துவமான குடிமக்கள் என்ற சிந்தனை பலவீனப்படுத்தப்பட்டுவிடாது.


முன்னர் எந்த அரசாங்கமுமே செய்யாதவற்றைச் செயவதற்கான சிறந்த வாய்ப்பு தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு இருக்கிறது. தேசிய அடையாளம் தொடர்பான விவகாரத்தில் அரசாங்கத்தின் நம்பகத்தன்மை மக்களின் பார்வையில் உறுதிவாய்ந்ததாக இருக்கிறது. அரசியல் ஆபத்துக்கள் ஏற்படக்கூடும் என்ற வழமையான கணிப்பீடுகளுக்கு அப்பால் சென்று தீர்மானங்களை எடுப்பதற்கு தேவைப்படும் பாராளுமன்ற பெரும்பான்மைப் பலம் அரசாங்கத்துக்கு இருக்கிறது. மாகாண சபைகள் முடங்கிப்போய்க் கிடக்கும் தற்போதைய நிலைவரம் ஜனநாயக மற்றும் அரசியலமைப்பு ரீதியிலான ஒரு தோல்வியாகும்.

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடு விரும்பிக் கேட்ட சந்திப்பு! அலட்டிக் கொள்ளாத அநுர! அடுத்த 'எபிசோட்' எப்போது?

பனங்காட்டான்



இலங்கையின் கடந்த வார அரசியல் நகர்வு திருகோணமலையில் ஞாயிற்றுக்கிழமை இரவு ஆரம்பமானது. இங்குள்ள கடற்கரைப் பகுதியில் புத்தர் சிலை ஒன்றை நாட்ட சில பிக்குகள் முயற்சி மேற்கொண்டதுடன் விவகாரம் தொடங்கியது.

ஆனால் அன்றிரவே காவற்துறையினர் அவ்விடம் சென்று புத்தர் சிலையை அகற்றிச் சென்றனர். உடனடியாக வெளிவந்த செய்திகள், புத்தர் சிலை வைப்பை தமிழரசுக் கட்சியினர் ஆட்சேபித்ததால் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரின் உத்தரவையடுத்து அது அகற்றப்பட்டது என்பதாக இருந்தது.

சிங்கள பௌத்த ஆட்சியில் அப்படியும் நடந்துள்ளதே என்ற அதிர்ச்சி மகிழ்ச்சியில் இரவைக் கழித்துவிட்டு எழுந்தபோது, மறுநாள் திங்கட்கிழமை எல்லாமே தலைகரணமாகியது. முதல் இரவு புத்தர் சிலையை தூக்கிச் சென்ற காவற்துறையினரே மீண்டும் அதனைக் கொண்டு சென்று அதேயிடத்தில் வைத்து காவல் புரிந்தனர்.

ஷபோன புத்தர் மீண்டு வந்தார்; என்பதற்கு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஒரு புதுக்கதையைச் சொன்னார். பாதுகாப்புக் காரணங்களுக்காகவே முதல் இரவு சிலை அகற்றப்பட்டதாகவும், அதற்குரிய பாதுகாப்பு இப்போது வழங்கப்பட்டுள்ளதாகவும், அதனால் மீள அதனை வைப்பதற்கு உத்தரவிட்டதாகவும் இவரது அறிவிப்பு இருந்தது. ஒரு புத்தர் சிலையை வைத்து இடம்பெற்ற ஒரு குறுநாடகம் பல கேள்விகளை எழுப்புகிறது.

நாட்டில் பாதுகாப்புக்கு அச்சமில்லை, எல்லா நடவடிக்கைகளும் கண்காணிப்பில் உள்ளன, சகல செயற்பாடுகளும் சட்டப்படியே இடம்பெறுகிறது என்று ஜனாதிபதியிலிருந்து கட்சியின் பின்வரிசை உறுப்பினர் வரை அனைவரும் கூறிக்கொண்டேயிருக்கிறார்கள். அப்படியென்றால் புத்தர் சிலையை அனுமதியின்றி நாட்ட எடுத்த முயற்சியை பாதுகாப்புக்கு பொறுப்பான எவரும் அறிந்திருக்கவில்லையா? திருமலை என்பது கடற்படையின் கட்டுப்பாட்டில் உள்ளது. இவர்களுக்கும் தெரியாமலா இரவோடிரவாக இங்கே புத்தர் வந்தார்?

அமைச்சரின் உத்தரவின்பேரில் காவற்துறையினர் சிலையை அகற்ற முற்பட்டபோது பிக்கு ஒருவர் பொலிஸ் அதிகாரியின் கன்னத்தில் ஓங்கி அறைந்தார். இதற்காக அவர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாதது ஏன்? ஆனால், இரண்டு பிக்குகள் சிறு காயமடைந்ததாகக் கூறி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதற்கு அதீத முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. ரணில் விக்கிரமசிங்க கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டவேளை சுகவீனமடைந்து(?) மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டது போன்று இதுவும் ஒரு நாடகமா?

**என்னென்னவோ பேசலாமென்று பட்டியலிட்டுப்போன தமிழரசுக் கட்சியினர் சொன்னவைகளை மெல்லிய புன்னகையுடன் செவிமடுத்த ஜனாதிபதி அநுர குமர ஒன்றுக்குமே நம்பிக்கையான பதில் வழங்கவில்லை. மழுப்பலாக அமைந்த இவரது சளாப்பல் காமராஜரின் ஷஆகட்டும் பார்க்கலாம்' பாணியை விஞ்சியது.**

புத்தர் சிலை விவகாரம் என்பது திருமலையை முழுமையாக சிங்கள பௌத்த மாவட்டம் ஆக்கும் முயற்சியின் இன்னொரு கட்டம் என்பதை நினைவூட்டுகிறது 1968ம் ஆண்டுச் சம்பவம். அப்போது டட்லி சேனநாயக்கவின் தேசிய அரசாங்கத்தில் தமிழரசுக் கட்சி சார்பில் மு.திருச்செல்வம் உள்ளாட்சி அமைச்சராக இருந்தார். இவருக்கு எதையும் தெரிவிக்காது திருக்கோணேஸ் வரம் பகுதியை புனித நகரமாக பிரதமர் டட்லி சேனநாயக்க பிரகடனம் செய்தார். இதனால் அவமதிப்புக் குள்ளான அமைச்சர் திருச்செல்வம் தமது பதவியை விட்டு விலகினார். இது 1968 நவம்பரில் இடம்பெற்றது. இப்போது 57 ஆண்டுகளின் பின்னர் அதே நவம்பர் மாதத்திலேயே பாடல் பெற்ற திருக்கோணேஸ்வரத்துக்கு அருகாமையில் புத்தர் சிலையை முளைக்க வைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. நவம்பர் மாதம் என்பது திருமலையைப் பொறுத்தளவில் தமிழ் மக்களுக்கு ஒரு சோதனையான மாதம்போல் தெரிகிறது.

இப்போது புத்தர் சிலை நடுவதை தமிழரசுக் கட்சியினர் பார்த்துக் கொண்டிருக்கவில்லை. தேசிய மக்கள் சக்தியின் தமிழ் எம்.பிக்கள் அனைவரையும் (எண்மர்) பதவிகளைத் துறக்குமாறு கட்சியின் பதில் செயலாளர் சுமந்திரன் அறிவிப்பு விடுத்தார். மட்டக்களப்பு எம்.பி. சாணக்கியன் ஒருபடி மேலேறி அநுர அரசாங்கத்தின் தமிழ் எம்.பிக்கள் அங்கிருந்து விலகி தமிழரசுக் கட்சியில் இணைய வேண்டுமென அழைப்பு விடுத்தார். இருவரது வேண்டுகோளுக்கும் இடையிலான வேறுபாடு மிக நீளமானது. அந்த எட்டு எம்.பி.க்களும் இதனை செவிசாய்க்க மாட்டார்கள் என்பதைத் தெரிந்து கொண்டும் விடுக்கப்பட்ட அர்த்தமற்ற கோரிக்கையுடன் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே. சிவஞானம் தாமும் சேர்ந்து கொள்ளாது தப்பியது புத்திசாலித்தனமானது.

புத்தர் சிலை விவகாரம் இடம்பெற்ற மூன்றாம் நாள் - கடந்த புதன்கிழமை ஜனாதிபதி அநுர குமரவுடன் தமிழரசுக் கட்சியினரின் முதலாவது சந்திப்பு இடம்பெற்றது. இதற்கான வேண்டுகோளை தமிழரசுக் கட்சியினரே எழுத்து மூலம் விடுத்திருந்தபோதும் பல மாதங்களாக பதில் கிடைக்கவில்லை. அண்மையில் சாணக்கியனின் குடும்ப உறவினரது இறுதிச் சடங்கில் ஜனாதிபதி பங்குபற்றியபோது அவருடன் உரையாடிய சுமந்திரன் தங்கள் கடித விவகாரத்தினை நினைவூட்டினார். அதன் பின்னரே சந்திப்புக்காக நேரம் ஒதுக்கப்பட்டது. கட்சியின் எட்டு எம்.பிக்களுடன் பதில் தலைவரும், பதில் செயலாளரும் இச்சந்திப்பில் பங்குபற்றினர்.

தமிழரசுக் கட்சயினர் என்னென்ன விடயங்களையிட்டு தம்முடன் உரையாடுவார்கள் என்பது அநுர குமரவுக்கு நன்கு தெரியும். அதற்காக அவர் தம்மை தயார்படுத்தியிருந்தார் என்பதை சந்திப்பின் போது அவர் கையாண்ட விதமும் முகபாவனையும் நன்றாகத் தெரியப்படுத்தியது.

காணாமலாக்கப்பட்டோர் விடயத்தில் புதிதாக ஓர் ஆணைக்குழுவை அமைக்கவுள்ள யோசனையை அவர் முன்வைத்தார். இந்த விடயத்தை இழுத்தடிக்கும் நோக்கம் இது என்பது நன்றாக விளங்கியது. தேர்தல் பரப்புரைக் காலத்தில் தமது குடும்பத்திலும் பலர் காணாமல்போனதால் இதன் பாதிப்பு தமக்குத் தெரியுமென்று கதை அளந்ததை அவர் ஒரு வருடத்தில் மறந்துவிட்டார் போலும்.

தனியார் காணிகளை ராணுவத்திடமிருந்து விடுவிப்பது தொடர்பில் மழுப்பல் பதிலை வழங்கினார். ஏற்கனவே விடுவிக்கப்பட்ட காணிகளில் உரியவர்கள் இன்னமும் அக்காணிகளில் குடியேறவில்லை என்று கூறி, பந்தை திருப்பியடிக்கும் முயற்சியில் அவர் ஈடுபட்டார். எனினும், தாம் சொன்னவாறு காணிகள் மீளளிக்கப்படும் எனச்சொல்லி சமாளித்துவிட்டார்.

அரசியல் கைதிகள் விடுதலைக்கு சரியான பதிலை அவரால் வழங்க முடியவில்லை. முன்னைய ஜனாதிபதிகள் பாணியில் வெவ்வேறு காரணங்களைக் கூறி விடயத்தைத் திசைதிருப்பிக் கொண்டிருந் தார். இதிலும் சமாளிப்புத்தான் இடம்பெற்றது.

மாகாண சபைகளுக்கான தேர்தல் இடம்பெற வேண்டுமென்பது இச்சந்திப்பின் மையப் புள்ளியாக இருந்தது. நிச்சயம் தேர்தல் நடைபெறுமென்று நம்பும் வகையில் பதிலளித்தார். ஆனால், எப்போது என்று கூற மறுத்துவிட்டார். வரவு செலவுத் திட்டத்தில் மாகாண சபைத் தேர்தலுக்கு பத்து பில்லியன் ரூபாவை ஒதுக்கிய இவரால் தேர்தல் எப்போது என்று கூற முடியவில்லை. 1965 - 1970 ஆண்டுகளின் ஐந்து ஆண்டுகளிலும் வரவு செலவுத் திட்டங்களிலும் தமிழருக்கு ஒரு பல்கலைக்கழகத்தை உருவாக்க அப்போதைய ஐக்கிய தேசிய கட்சி அரசு நிதி ஒதுக்கியதாயினும் அந்த ஐந்து ஆண்டுகளில் அதற்கு அத்திவாரம் கூட போடவில்லை என்பது இவ்வேளையில் நினைத்துப் பார்க்க வேண்டியதாக இருக்கிறது.

தேசிய மக்கள் சக்தியின் தாய்க்கட்சியான ஜே.வி.பி. மாகாண சபைத் தேர்தலை நடத்த பச்சைக்கொடி காட்டாத வரை இத்தேர்தல் நடப்பதற்கான சாத்தியமில்லை. அதுவரை அனைவரையும் ஏமாற்ற ஒவ்வொரு வருடமும் பத்து பில்லியன் ரூபாவை ஒதுக்கிக் கொண்டு போகலாம் என்ற நிலைப்பாட்டில் அநுர இருக்கிறார். தமிழரசுக் கட்சிக்கு வடமாகாண சபையையும், முதலமைச்சர் பதவியையும் வழங்குவதற்கு தேர்தலை எதற்காக நடத்த வேண்டுமென்ற சிந்தனை ஜே.வி.பி.யிடம் இருக்கிறது.

பேச்சுகளின் முக்கியமான அம்சமாக புதிய அரசியலமைப்பு இருந்தது. முன்னைய ஆட்சியில் தமிழரசுக் கட்சியின் பூரண ஆதரவுடன் தயாரிக்கப்பட்ட புதிய அரசியலமைப்பு ஆவணங்களின் அடிப்படையில் இதனை உருவாக்கி பிரச்சனைக்கு தீர்வு காணப்படுமென தேர்தல் பரப்புரை காலத்தில் அநுர குமர தெரிவித்திருந்தார். இதனை நம்ப வைக்கும் வகையில் யாழ்ப்பாணத்திலுள்ள தமிழரசுக் கட்சி அலுவலகத்துக்கு நேரடியாகச் சென்றபோது கட்சியின் முதியோர் கிளப் பிரமுகர்கள் முண்டியடித்து அநுரவுடன் சுமந்திரனையும் இணைத்து படமெடுத்துக் கொண்டாடினர்.

புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படும்போது சுமந்திரனின் ஆலோசனை பெறப்படும் என்று அவர் சொன்னது ஞாபகம் இருக்கிறது. அது சும்மா சொன்னது என்ற பாணியில் இச்சந்திப்பில் அநுர நடந்து கொண்டார். புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படுமென்பதை உறுதியாகக் கூறினார் - ஆனால் எப்போது என்று கூறவில்லை.

இதற்கென ஒரு பொறிமுறையை உருவாக்குவது, வல்லுனர்கள் மூலம் வரைபைத் தயாரிப்பது, கட்சித் தலைவர்கள் அல்லது நாடாளுமன்ற குழுவின் ஊடாக அதனை நிறைவேற்றுவது என்று விளக்கம் கொடுத்தார். ஏற்கனவே டான் தொலைக்காட்சியில் ஜே.வி.பி.யின் பொதுச்செயலாளர் ரில்வின் செல்வா தெரிவித்த விடயங்களை கிளிப்பிள்ளைபோல தமிழரசுக் கட்சியிடம் ஒப்புவித்தார். புதிய அரசியலமைப்பில் மாகாண சபை முறைமை இருக்காது என்று ரில்வின் சில்வா தெரிவித்திருந்ததை சாதுரியமாக மறைத்துவிட்டார்.

இதற்கு மேல் இச்சந்திப்பில் பேச ஒன்றுமில்லை. தமிழரசுக் கட்சியிடமும் அவரிடம் கேட்பதற்கு ஒன்றுமில்லை. இச்சந்திப்புக்கு மறுநாள் ஏற்கனவே நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த சாணக்கியனின் மாகாண சபைத் தேர்தல் தொடர்பான தனிநபர் பிரேரணை ரத்துச் செய்யப்பட்டது முக்கியமானதாக பார்க்கப்பட வேண்டியது.

திருமலை புத்தர் சிலை விவகாரம் நீதிமன்றத்தில் உள்ளது. தமிழரசுக் கட்சியின் எதிர்காலம் நீதிமன்றத்தில் தங்கியுள்ளது போலவே இதுவும். கஞ்சி ஆறும்போது சிங்கள பௌத்தம் புத்தர் சிலைக்கு சவாலாகாது போகும்.

இச்சந்திப்பின் இறுதியில் இடம் பெற்ற ஒரு சம்பவம் ருசிகரமானது. முல்லைத்தீவு மீனவர்கள் சட்டவிரோத மீன் பிடியால் சந்திக்கும் இடர்கள் பற்றி வன்னி எம்.பி. ரவிகரன் சுட்டிக்காட்டியபோது தாம் நேரில் வந்து அவர்களுடன் பேச விருப்பதாகப் பதிலளித்து ஒரேடியாக விடயத்தை மூடிவிட்டார் அநுர குமர. (அதனை நான் கவனிக்கிறேன், நீர் பேசாமல் இரும் என்ற பாணியில் இது அமைந்தது).

ஆவலோடு எதிர்பார்த்த முதல் சந்திப்பு முடிந்துவிட்டது. இது தொடர்பாக ஷவீடு;க்கு எடுத்துச் செ(ா)ல்ல ஒன்றுமேயில்லை. பத்துப்பேரை தனியனாக மடக்கிய அநுரவின் சாதுரியமான விடைகளுள் எல்லாமே முடக்கப்பட்டுவிட்டன. அடுத்த ஷஎபிசோட்; எப்போது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஜனாதிபதியுடனான தமிழரசுக்கட்சியின் சந்திப்பு தமிழ் மக்களுக்கு ஆரோக்கியமானதா?

கந்தையா அருந்தவபாலன்

இலங்கைத்தமிழரசுக்கட்சியினருக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பும் கலந்துரையாடலும் ஒருவாறு ஒப்பேறியுள்ளது. இச்சந்திப்புக்கான கோரிக்கைக் கடிதம் இலங்கைத் தமிழரசுக்கட்சியினால் கடந்த செப்ரம்பர் மாதம் 25 ஆம் திகதி அனுப்ப்பப்பட்டிருந்த போதிலும் அதற்கான பதிலேதும் கிடைக்காதலால் மேலதிகமாக நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்தும்கூட எவ்வித முன்னேற்றமும் கிடைக்காததால் இறுதியில் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியனின் தந்தையின் இறுதி நிகழ்வில் கலந்துகொண்ட ஜனாதிபதியை நேரடியாகக் கேட்டுக்கொண்டதற்கமைய சென்ற புதன்கிழமை பிற்பகல் இச்சந்திப்பு நடைபெற்றுள்ளது. இச்சந்திப்பில் அக்கட்சியின் எட்டுப் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் தலைவரும் செயலாளரும் பங்குகொண்டிருந்தனர். புதிய அரசியலமைப்பு, மாகாணசபைத் தேர்தல் போன்றவற்றுடன் வேறுபல விடயங்கள் பற்றியும் கலந்துரையாடியதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. அத்துடன் இச்சந்திப்பில் கலந்து கொண்ட உறுப்பினர்கள் பலரும் சந்திப்பு ஆரோக்கியமானதாக அமைந்திருந்தது என்று ஊடகங்களுக்குத் தெரிவித்தனர். எனினும் இச்சந்திப்புத் தொடர்பாக வேறு சில அரசியல் தலைவர்களால் எதிர்மறையான விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டு வருவதுடன் உண்மையில் இச்சந்திப்பு தமிழ் மக்கள் நலன்சார்ந்ததா அல்லது கட்சி மற்றும் தனிநபர்கள் சார்ந்த ஒன்றா என்ற கேள்வியும் அவர்களால் எழுப்பப்படுவதையும் அவதானிக்க முடிகிறது. இதனால் இச்சந்திப்பு தமிழ் மக்களைப் பொறுத்து உண்மையில் ஆரோக்கியமானாதா என்ற ஐயம் எழுகிறது.

ஆட்சியிலிருக்கும் அரசாங்கம் ஒன்றுடன் தமிழ்த்தரப்புகள் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவது வழக்கமானது என்பதற்கப்பால் அது வரவேற்கப்படவேண்டிய விடயமுமாகும். பிரச்சினைகளுக்கு அவற்றுடன் தொடர்புபட்டவர்களுடனான கலந்துரையாடல்கள் மூலமே தீர்வுகாண முடியும். அந்தவகையில் தமிழ்மக்கள் தமது பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக எடுக்கும் எத்தகைய முன்னெடுப்புகளும் இறுதியில் நாட்டில் ஆட்சியிலுள்ள அரசாங்கத்துடனும் நாட்டு மக்களுடனுமான கொடுக்கல் வாங்கல்கள் மூலமே தீர்க்கப்படவேண்டும். எனினும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் அதிலும் குறிப்பாக அரசியல் சார்ந்த பிரச்சினைகள் தொடர்பான அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தை என்பது கட்சியொன்றுடன் அல்லது தனிநபருடன் மட்டுப்படுத்தப்படும் விடயமில்லை. அது ஒட்டுமொத்த இனம் சார்ந்த ஒரு பிரச்சினையாகும். இப்பிரச்சினைகளை ஒரு கட்சியோ அல்லது ஒரு நபரோ கையாளமுனைவது ஒருபோதும் ஆரோக்கியமாக இருக்கப்போவதில்லை. அது சரியான தீர்வுகளை நோக்கி நகர்வதற்குப் பதிலாக மேலும் பிரச்சினைகளைச் சிக்கலாக்குவதுடன் மக்களுக்கிடையில் ஐயத்தையும் பிளவுகளையும் தோற்றுவிக்கவே வழிவகுக்கும். இவ்வாறான ஒரு நிலைமை தோன்றுவிக்கப்படுவது பேரம்பேசுவதில் தமிழர்தரப்பை பலவீனமான நிலைக்குத் தள்ளும் என்பதுடன் எதிர்த்தரப்பால் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணப்படாது தட்டிக்கழிப்பதற்கான சூழ்நிலைகளையும் அதிகம் உருவாக்கும். இந்த விடயங்கள் தமிழரசுக்கட்சித் தலைவர்களுக்குத் தெரியாதவையல்ல. அதிலும் நிறைந்த அரசியல் அனுபவம் பெற்றவர்களான தலைவர் சிவஞானமும் செயலர் சுமந்திரனும் அறியாதவர்கள் அல்லர். அவ்வாறிருந்தும் அவர்கள் இத்தகைய முயற்சிகளில் ஏன் இறங்குகின்றனர்?

இக்கேள்விக்குச் சரியான விடையைத் தேடவேண்டுமெனில் 2010 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தமிழரசுக்கட்சியை மட்டும் மையப்படுத்துவதற்கான அக்கட்சித்தலைவர்களால் மேற்கொள்ளப்பட்ட தன்னிச்சையான நடவடிக்கைகளை ஒருமுறை திரும்பிப் பார்க்க வேண்டும். விடுதலைப் புலிகளால் மக்களுக்குச் சுட்டிக்காட்டப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சின்னமாகத் தமிழரசுக்கட்சியின் வீடு சந்தர்ப்ப சூழ்நிலைகளால் கையாளப்பட்டதைத் தமக்குச் சாதகமாக்கி, அக்கட்சி கையாளத் தொடங்கிய பெரியண்ணன் தோரணையிலான அணுகுமுறைகளின் தொடர்ச்சியாகவே அதன் தற்போதைய நடவடிக்கைகளையும் நாம் நோக்கவேண்டும். உண்மையில் அந்நேரம் சம்பந்தனைப் போல ஆனந்தசங்கரி நடித்திருந்தால் இன்று தமிழரசுக்கட்சியோ அதன் சின்னமான வீடோ யாருக்கும் தெரியாதிருந்திருக்கும் என்பதே உண்மை. பதிலாக உதய சூரியனே சின்னமாக இருந்திருக்கும். ஏனெனில் எழுபதுகளின் இறுதிப்பகுதியிலிருந்தே தேர்தல் திணைக்களத்தின் ஏட்டில் மட்டும் பேணப்படும் நிலைக்கு அக்கட்சி தள்ளப்பட்டுவிட்டது. இதில் மிகக் கவலைக்குரிய விடயம் என்னவெனில் அக்காலத்திலிருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சின்னமாக மாறும்வரையில் கட்சியையும் சின்னத்தையும் காப்பாற்றி வைத்திருந்த அக்கட்சியின் மூத்த உறுப்பினர் பேராசிரியர் சிற்றம்பலம் 2010 இன் பின்னர் சம்பந்தனால் பலிக்கடா ஆக்கப்பட்டமைதான். 2010 இல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலுக்கு தமிழரசுக் கட்சியால் வழங்கப்பட்ட தேசியப்பட்டியலில் முதலாவது இடம் பேராசிரியர் சிற்றம்பலத்துக்கு வழங்கப்பட்டு இருந்தது. ஆனால் தேர்தலின் பின் அவர் தூக்கியெறியப்பட்டு பதிலாகச் சுமந்திரன் பாராளுமன்ற உறுப்பினராகப் புகுத்தப்படுகிறார். அது மட்டுமல்ல அத்தேர்தலின் போது முதலாவ்தாக அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்தே வெளியேறியது. அந்நேரத்தில யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே என்பது அக்கட்சியிலிருந்த பலருக்குத் தெரிந்திருக்கவில்லை.



"உறுதியான ஆட்சிப்பலம் மட்டுமல்ல வடக்கு கிழக்கில் கூடிய தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களையும் வைத்திருந்தும் கூட தமிழரசுக்கட்சிக்கு மதிப்பளித்த அனுரவின் பண்பைத் தமிழரசுக்கட்சியினர் தமது சக தமிழ்க்கட்சிகளுடன் கடைப்பிடிக்க முன்வரவேண்டும்."

தமிழ்த் தேசிய கூட்டமைப்பிலிருந்து காங்கிரஸ் வெளியேறுவதற்கான பிரதான காரணம் பதவித் தகராறு என்று தமிழரசுக் கட்சியினால் சொல்லப்பட்டாலும்கூட அதன்பின்னால் இரண்டு நோக்கங்கள் அக்கட்சியின் முக்கிய தலைவர்களுக்கு இருந்துள்ளன. ஒன்று புலிநீக்கம் செய்வது. இரண்டாவது தமிழ்த் தேசிய கூட்டமைப்பு என்ற எண்ணக்கருவை உடைத்து தமிழ் மக்களின் அரசியலை தமிழரசுக் கட்சி தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வருவது. பின்னர் இந்த நோக்கங்களுக்கு முட்டுக்கட்டையாக இருந்த கட்சியின் நீண்டகால உறுப்பினர்களும் பற்றாளர்களும் கட்சியிலிருந்து திட்டமிட்ட ரீதியில் வெளியேற்றப்பட்டார்கள் அல்லது அவர்கள் தாங்களாகவே வெளியேறுவதற்கான காய்நகர்த்தல்களை கட்சியினர் செய்தார்கள். தொடர்ந்து ஈ.பி.ஆர்.எல்.எவ்.கட்சியினரும், ரணில் காலத்தில் வேட்புமனு கோரப்பட்டு ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சித் தேர்தலின் முன் ரெலோவும் புளட்டும் வெளியேற்றப்பட்டன. பின்னைய இவ்விரு கட்சிகளின் பிரிப்புக்குத் தமிழரசுக்கட்சியினால் சொல்லப்பட்ட காரணம் அதன்மூலம் விகிதாசார முறையிலான உள்ளூராட்சித் தேர்தலில் அதிகமான ஆசனங்களைப் பெறுவதே என்பது. ஆனால் தேர்தலின் பின் அவர்களது குறைந்தபட்சக் கோரிக்கையைக்கூட நிராகரித்துவிட்டு ரீதர் தியேட்டர் வாசற்கதவைக் கட்சித் தலைவர் சிவஞானம் தட்டியதன் மூலம் அக்கட்சியின் நோக்கம் மீண்டும் ஒருமுறை உறுதிப்படுத்தப்பட்டது. இந்த செயற்பாடுகளுக்கு ஒருகட்டத்தில் உடைந்தையாக இருந்தவர்களும் கண்டும்காணாதவர்களாக இருந்தவர்களும் அடுத்தடுத்த கட்டங்களில் அதேபோல தூக்கிவீசப்பட்டனர் என்பதுதான் படிப்பினையான அனுபவம். இதற்கு மாவை சேனாதிராசாவும் சிவஞானம் சிறிதரனும் சிறந்த எடுத்துக்காட்டு.

இவையெல்லாம் சம்பந்தனின் ஆசியுடனும் மாவை சேனாதிராசாவின் இயலாமையையும் பயன்படுத்தி சுமந்திரனால் செய்யப்பட்ட கைங்கரியங்கள் என்பதை எல்லாரும் அறிவர். ஒருவரையொருவர் சுட்டும், வெட்டியும் எதிரிகளாக இருந்தவர்களை இனத்தின் நலனுக்காக ஒன்றாக்கிய பெருமை பிரபாகரனைச் சேரும் என்றால் அதைச் சுயநலனுக்காக கொத்திக் கிழித்து கூறாக்கிய பெருமையில் பெரும்பங்கு சுமந்திரனையே சேரும். இந்தக் கைங்கரியங்களால்தான் தமிழ் மக்களின் அரசியல் பலம் இன்று சிதைந்து சின்னாபின்னமாக்கப்பட்டுள்ளது என்பது கசப்பான உண்மை. இந்நிலைக்குச் சுமந்திரனை மட்டும் குற்றச்சாட்ட முடியாது. எனெனில் இவற்றைச் சரியான முறையில் புரிந்து மக்களை வழிநடத்துவதற்கான தகைமையைப் பெற்றிராத ஏனைய தமிழ்த் தலைவர்களும் காரணமாவார்களே. இதில் கவலைப்படவேண்டிய விடயம் என்னவென்றால் தமிழ் மக்களின் அரசியல் பலத்தின் சிதைவுக்கான சூத்திரதாரியைப் பெரும்பாலான மக்கள் புரிந்துகொண்டு நிராகரித்த பின்னரும்கூட அவரைச் சாணக்கியன் என்றும் இராஜதந்திரி என்றும் கூறும் படித்த கூட்டம் ஒன்று இன்றும் இருந்து வருவதாகும்.

இந்த வரலாற்றுப் பின்புலத்தில் வைத்துத்தான் தமிழரசுக்கட்சியின் அனுரவுடனான சந்திப்பை மதிப்பிடவேண்டும். இச்சந்திப்புக்கான பிரதான நோக்கம் தேசிய மக்கள் சக்தி தனது தேர்தல் வாக்குறுதிகளில் கூறியவாறு அரசியலமைப்பு மாற்றம் மற்றும் மாகாணசபைத் தேர்தல் போன்றவற்றைச் செயற்படுத்துவது தொடர்பானது எனக் கூறப்பட்டது. அத்துடன் தமிழ் மக்களின் பிரதான கட்சி தாங்களே என்று அவர்களே அதற்கான தகுதியையும் வரையறுத்துக் கொண்டார்கள். இது தொடர்பாகப் பல கேள்விகள் எழுகின்றன. இவ்விடயங்கள் தொடர்பான மேலெழுந்தவாரியாகக் கதைப்பதானால் கட்சிரீதியாக பத்துபேர் கொண்ட குழுவொன்று அவசியாமா? இல்லை ஆழமான கலந்துரையாடல் என்றால் தமிழ் மக்கள் சார்பில் தனித்துக் கதைப்பதற்குத் தமிழரசுக்கட்சிக்கு உரிமை உள்ளதா? இவ்விடயத்தில் தமிழரசுக்கட்சி தனது நிலையை மீள் பரிசீலனை செய்யவேண்டும். ஒரு காலத்தில் தமிழ் மக்களின் பிரச்சினைகளைக் கதைப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பெற்றிருந்த மக்கள் அங்கீகாரம் தமிழரசுக்கட்சிக்கு இல்லை. ஆழமாகப்பார்த்தால் அதற்கான சட்ட உரிமை தமிழ்க்கட்சிகளுக்கே இல்லை.

ஏனெனில் இன்று வடக்கு கிழக்கில் மொத்தமாகப் பார்த்தாலும் சரி, தமிழர் என்று பார்த்தாலுஞ்சரி கூடியளவு பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட கட்சியாக ஆளுங்கட்சியே உள்ளது. ஒரு பேச்சுக்கு அது சிங்களக் கட்சி என்று அதை ஒதுக்கி வைத்தாலுங்கூட வடக்கு கிழக்கில் தமிரசுக்கட்சி பெற்றதைவிட அதற்கு எதிரான வாக்குகளே அதிகமானவை. வடக்கில் 355456 வாக்குகளும் (தேசிய மக்கள் சக்திக்குரியது நீங்கலாக) அதேபோல கிழக்கில் 447713 வாக்குகளும் பதிவாகியுள்ளன. இவற்றுள் 90மூ இலும் கூடுதலானவை தமிழ்க் கட்சிகள்

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரில் மிதக்கும் பனிக்கட்டி?



நிலாந்தன்

அரசியல் கைதி ஆனந்த சுதாகரனின் மாமியார், கடந்த புதன்கிழமை, கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் இயற்கை எய்தினார். ஆனந்த சுதாகரனின் பிரிவினால் நோயாளியாகிய அவருடைய மனைவி 2018ஆம் ஆண்டு இயற்கை எய்தினார். அவருடைய தாயார் கமலாதான் பேரப்பிள்ளைகளைப் பராமரித்து வந்தார். அவரும் இப்பொழுது இறந்து விட்டார். ஆனந்த சுதாகரன் 17 ஆண்டுகளாகச் சிறை வைக்கப்பட்டிருக்கிறார்.

ஆனால் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான திருமதி.லக்மாலி அண்மையில் கொழும்பில் நடந்த ஊடக விவாத நிகழ்ச்சியொன்றில் பின்வருமாறு வாதிட்டதை முகநூல் பதிவொன்றில் காண முடிந்தது. “சிறையில் இருப்பவர்கள் அரசியல் கைதிகள் அல்லர். நீதிமன்றினால் தண்டிக்கப்பட்ட குற்றவாளிகள். தலதா மாளிகை சம்பவம் உட்பட பாரிய குற்றச் சம்பவங்களுடன் தொடர்புபட்டவர்கள். தமிழ் மக்கள் இதனை விளங்கிக் கொண்டுதான் இப்போது எமது அரசாங்கத்தை ஆதரிக்கின்றனர்.”

சிறையில் இருப்பவர்கள் தண்டிக்கப்பட்ட கைதிகள் என்று கூறுவதன்மூலம் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் என்று லக்மாலி கூறுகிறார். அதாவது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் அவர்கள் குற்றவாளிகளாகக் காணப்பட்டு தண்டிக்கப்பட்டவர்கள் என்று பொருள்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கப் போவதாக கடந்த ஜெனிவா கூட்டத் தொடருக்கு முன்பாக அரசாங்கம் அறிவித்தது. ஆனால் இன்றுவரையிலும் அதை அவர்கள் செய்யவில்லை. இப்பொழுது அந்தச் சட்டத்தைத் திருத்தி ஒரு புதிய சட்டத்தைக் கொண்டு வரப் போவதாக அவர்கள் தெரிவிக்கிறார்கள்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் எனப்படுவது தமிழ் மக்களின் அரசியல் எதிர்ப்பை பயங்கரவாதமாக சட்ட வியாக்கியானம் செய்து சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்வதற்கான ஒரு சட்டச்சூழலை எப்பொழுதும் பேணுவது. அதாவது தமிழ் மக்களின் எதிர்ப்பை பயங்கரவாதமாகச் சித்தரிக்கக்கூடிய வாய்ப்புகளை எப்பொழுதும் பேணுவது. இந்தவிடயத்தில் கடந்த காலங்களில் இலங்கைத்தீவை ஆண்டு வந்த மேட்டுக்குடி அரசியல்வாதிகளின் அதே அணுகுமுறையைதான் தேசிய மக்கள் சக்தியும் கொண்டிருக்கிறது என்று எடுத்துக் கொள்ளலாமா?


அரசியல் கைதிகளின் விடயத்தில் மட்டுமல்ல, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அகற்றுவதில் மட்டுமல்ல, தொல்லியல் விவகாரங்களுக்கான ஆலோசனைக் குழுவை நியமித்தபோது மட்டுமல்ல, திடீரென்று முளைக்கும் புத்தர் சிலைகளைக் கையாளும் விடயத்திலும் என்.பி.பி அரசாங்கமானது முன்னைய மேட்டுக்குடி அரசியல்வாதிகளைப் போலவே சிந்திக்கிறது என்பதைத்தான் கடந்த வாரம் திருக்கோணமலையில் நடந்த புத்தர் சிலை விவகாரம் நமக்குக் காட்டுகிறதா?

திருகோணமலை புத்தர் சிலை விவகாரம் எனப்படுவது சிலையிலிருந்து தொடங்கவில்லை. அது அந்தச் சிலை வைக்கப்பட்ட காணிக்குள் ஏற்கனவே அமைக்கப்பட்டு இருந்த ஒரு ரெஸ்ரோரண்டில் இருந்து தொடங்குகிறது. அந்த ரெஸ்ரோரன்ட் சட்டவிரோதமாக கட்டப்பட்டிருக்கிறது என்று அதில் சம்பந்தப்பட்ட திணைக்களங்களும் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் தரப்புகளும் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க முயற்சித்த ஒரு பின்னணியில், கடந்த வாரத்துக்கு முதல் வாரம் அந்த ரெஸ்ரோரண்டின் மையப் பகுதியை வைத்துக்கொண்டு ஏனைய பகுதிகளை அகற்றுவதற்கு அங்கிருந்த பௌத்த மதகுரு ஒப்புக்கொண்டார்.

ஆனால் அவர் ஒப்புக்கொண்டபடி நடக்காமல் அந்த விடயத்தை உணர்ச்சிகரமான விதத்தில் திசைதிருப்பும் நோக்கத்தோடு புத்தர் சிலையை உள்ளே கொண்டு வந்திருக்கிறார். அதாவது சட்டவிரோதக் கட்டுமானம் ஒன்றை அகற்றுவதைத் தவிர்ப்பதற்கு புத்தர் சிலை ஒரு திசை திருப்பும் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அது சட்டவிரோதமானது என்பதனால்தான் போலீசார் முதலில் அதனை அகற்றினார்கள். ஆனால் அதே போலீசார் அந்த சிலையை மீண்டும் கொண்டு வந்து வைத்திருக்கிறார்கள். அப்படியென்றால் போலீசார் சட்டவிரோதமான ஒரு சிலையை சட்டபூர்வமானது ஆக்கியிருக்கிறார்களா?

புத்தர் சிலைக்கு ஒரு சட்டம் தமிழ் மக்களுக்கு இன்னொரு சட்டம். ஏற்கனவே திருமலை மறை மாவட்டத்தின் ஆயர் இதுபோன்ற விடையங்களை முன்வைத்துத்தான் இலங்கைத் தீவில் இரண்டு சட்டங்கள் இருக்கின்றனவா என்று கேட்டிருந்தார்.

> “திருகோணமலையில் இருந்து தெரிவு செய்யப்பட்ட தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரும் உதவி வெளிவிவகார அமைச்சருமாகிய அருண் ஹேமச்சந்திரவும் எல்லாத் தரப்புக்களையும் சமாளிக்க முயல்கிறார். அவர் பதவி விலக வேண்டும் என்று சுமந்திரன் கேட்கிறார். ஆனால் சிலையை வைத்து இனவாதத்தைக் கிளப்பும் சஜித் பிரேமதாசவுக்கு ஜனாதிபதி தேர்தலில் வாக்களிக்குமாறு தமிழ் மக்களைக் கேட்டவர் சுமந்திரன். அதற்குப் பிராயசித்தமாக அவரும் தன் பொறுப்புகளைத் துறக்க வேண்டும்.”



புத்தர் சிலை வைக்கப்பட்டிருக்கும் காணிக்குள் காணப்படும் ரெஸ்ரோரண்டை அகற்ற வேண்டும் என்று போராடி வருபவர்களில் இப்பொழுது தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் ரொஷான் அக்கீமனவும் ஒருவர். அந்த வளவிலிருந்து குறிப்பிட்ட கட்டுமானத்தை அகற்றக்கோரி போராடியவர்கள் மத்தியில் அவர் முன்பு காணப்பட்டார். ஆனால் இப்பொழுது எல்லாத் தரப்புக்களையும் சமாளிக்கப் பார்க்கிறார்.

அவர் பதவி விலக வேண்டும் என்று சுமந்திரன் கேட்கிறார். ஆனால் சிலையை வைத்து இனவாதத்தைக் கிளப்பும் சஜித் பிரேமதாசவுக்கு ஜனாதிபதி தேர்தலில் வாக்களிக்குமாறு தமிழ் மக்களைக் கேட்டவர் சுமந்திரன். அதற்குப் பிராயசித்தமாக அவரும் தன் பொறுப்புகளைத் துறக்க வேண்டும்.

2015இல் ஆட்சிக்கு வந்த ரணில் - மைத்திரி அரசாங்கத்தில் சஜித் பிரேமதாசவின் பொறுப்பின் கீழ்தான் புத்தசாசன அமைச்சு காணப்பட்டது. அக்காலகட்டத்தில்தான் தையிட்டியில் விகாரையைக் கட்டத் தொடங்கினார்கள். நாடு முழுவதும் ஆயிரம் விகாரைகளைக் கட்டுவதற்கு 500 மில்லியன் ரூபாயை ஒதுக்குவோம் என்று சிங்கள மக்களுக்கு வாக்குறுதி அளித்தவர்களில் சஜித்தும் ஒருவர். எனவே அப்படிப்பட்ட சஜித்தை ஜனாதிபதித் தேர்தலில் ஆதரிக்குமாறு கேட்ட சுமந்திரன் இப்பொழுது அருண் ஹேமச்சந்திர ராஜினாமாச் செய்ய வேண்டும் என்று கேட்கிறார்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தனக்கு முன்னிருந்த ஆட்சிகளில் இருந்து தன்னை வேறுபடுத்திக் காட்டும்போது சுட்டிக் காட்டும் வேறுபாடுகளில் ஒன்று, தாங்கள் இனவாதத்துக்கு தலைமை தாங்கவில்லை என்பது. ஆனால் இக்கட்டுரையில் ஏற்கனவே கூறப்பட்டதுபோல, அரசியல் கைதிகள், பயங்கரவாதத் தடைச் சட்டம், தொல்லியல் விவகார ஆலோசனைக் குழு, புத்தர் சிலைகள் போன்ற விடயங்களில் இந்த அரசாங்கத்துக்கும் முன்னைய அரசாங்கங்களுக்கும் இடையில் வித்தியாசங்கள் உண்டா?

புத்தர் சிலையை வைத்து எதிர்க்கட்சிகள் இனவாதத்தைக் கிளப்புகின்றன அதன் மூலம் நுகேகொடவில் நடந்த ஆர்ப்பாட்டத்திற்கு ஆட்களை திரட்டும் உணர்ச்சிகரமான அரசியல் சூழலை உருவாக்க முயற்சிக்கின்றன என்று அரசாங்கம் எதிர்க்கட்சிகளைக் குற்றம் சாட்டியது.

எதிர்க்கட்சிகளை இனவாதக் கட்சிகள் அல்லது இனவாதத்தை வைத்துப் பிழைத்த கட்சிகள் என்று குற்றச்சாட்டும் இந்த அரசாங்கமானது, தான் இனவாதி அல்ல என்பதனை நிரூபிப்பதற்கு கடந்த ஓராண்டுக்கு மேலான காலத்தில் என்ன செய்திருக்கிறது ?

தாங்கள் இனவாதிகள் அல்ல என்று கூறிக் கொண்டிருந்தால் மட்டும் போதாது. நடைமுறையில் தாங்கள் இனவாதத்திற்கு எதிரானவர்கள் என்பதை நிரூபிக்கத் தேவையான அர்ப்பணிப்பும் துணிச்சலும் அவர்களிடம் உண்டா என்பதுதான் இப்பொழுதுள்ள கேள்வி.

இனவாதிகள் தலையெடுக்கக்கூடாது என்றால் இந்த அரசாங்கத்தை எப்படியாவது பாதுகாக்கவேண்டும். இந்த அரசாங்கம் தோல்வியுற்றால் இனவாதிகள் மீண்டும் தலையெடுத்து விடுவார்கள் என்று அரசாங்கத்தை ஆதரிப்பவர்கள், குறிப்பாக யாழ்.பல்கலைக்கழகத்தில் உள்ள சில விரிவுரையாளர்கள் கூறுகிறார்கள்.

ஆனால் இது ஒன்றும் புதிய தர்க்கம் அல்ல. இந்த நாட்டை இதுவரையிலும் ஆண்ட இனவாதக் கட்சிகள் மத்தியில் ஒப்பீட்டளவில் லிபரல்களாகத் தோன்றும் பலரும் அப்படித்தான் கூறிவந்தார்கள். அதாவது இனவாதத்தை தோற்கடிப்பதற்கு குறிப்பிட்ட லிபரல் அரசாங்கத்தைப் பாதுகாக்க வேண்டும் என்று. ஆனால், யதார்த்தத்தில் என்ன நடந்தது என்றால், வெளிப்படையான இனவாதத்துக்கு எதிராக முகமூடி அணிந்த இனவாதம் தன்னைத் தற்காத்துக் கொள்ளும் ஒரு தந்திரமாகவே அது காணப்பட்டது. இதன் மூலம் முகமூடி அணிந்த இனவாதம் தமிழ், முஸ்லிம் வாக்குகளையும் கைப்பற்றிக் கொண்டது.

“அரகலய” போராட்டம் நடந்து கொண்டிருந்த காலப்பகுதியில் அந்தப் போராட்டத்தின் பின்னணியில் நின்ற அமைப்புகளில் ஒன்றாகிய முன்னிலை சோசிலிச கட்சியின் தலைவராகிய குமார் குணரட்ணத்தோடு உரையாடக் கிடைத்தது. சுமார் 5 மணித்தியால உரையாடல். அந்த உரையாடலின் ஒரு கட்டத்தில் அவர் சொன்னார், தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாக ஏற்றுக் கொள்ள முடியாது, சமஸ்டியை ஒரு வெளிப்படையான தீர்வாக முன்வைக்க முடியாது என்ற பொருள்பட. நாங்கள் இதை வெளிப்படையாக உங்களுக்குச் சொல்கிறோம். ஆனால் ஜேவிபி அதை வெளியில் சொல்லாமல் அரசியல் செய்கிறது. அவர்கள் அதை வெளிப்படையாகச் சொன்னால் தென்னிலங்கையில் அவர்கள் தோற்கடிக்கப்பட்டு விடுவார்கள் என்று.

இந்த விடையத்தில் முன்னைய லிபரல் அரசாங்கங்களைப் போலவே என்பிபியும் இனவாதத்தை எதிர்த்துத் தியாகம் செய்யத் தயாரில்லை என்பதைத்தான் கடந்த ஓராண்டுக்கு மேலான அவர்களுடைய ஆட்சிக் காலம் நிரூபித்திருக்கிறது. அதாவது இனவாதத்தை எதிர்த்து நின்று அழிய அவர்கள் தயாராக இல்லை. மாறாக இனவாதம் அருட்டப்பட்டுவிடும் என்று கூறி தமிழ் எதிர்ப்பைத் தணிக்கப் பார்ப்பார்கள். இதைத்தான் லிபரல் இனவாதிகளும் செய்கிறார்கள், சில வெளிநாட்டுத் தூதரகங்களும் செய்கின்றன.

சந்திரிகா “வெண்தாமரை” இயக்கத்தைத் தொடங்கி சமாதானத்துக்கு சிங்கள மக்களைத் தயார்படுத்தப் போவதாகக் கூறினார். ஆனால் அந்த இயக்கம் நடைமுறையில் படையினருக்கும் படையினரின் குடும்பங்களுக்கும் தொண்டு செய்யும் ஒரியக்கமாகவே மாறியது.

என்பிபியின் அடித்தளமாகக் காணப்படும் ஜேவிபியில் உறுப்பினராக இருந்து, பின்னர் விலகிச் சென்ற ஒருவர் கூறுவார், “மஹிந்த ராஜபக்ஷ வெளிப்படையான இனவாதி. ஆனால் ஜேவிபி சமூக நீதியின் பின் பதுங்கும் இனவாதி”என்று. இக்கூற்று பிழையானது என்பதை நிரூபிப்பதற்குக் கிடைத்த கடந்த ஓராண்டுக்கு மேலான காலத்தை ஜேவிபி பயன்படுத்தவில்லை. எனவே இதற்கு முன்பு ஆட்சிசெய்த லிபரல் முகமூடி அணிந்த, ஆனால் இனவாதத்துக்கே தலைமை தாங்கிய ஆட்சியாளர்களைப் போலவே என்பிபியும் அதே குட்டையில் ஊறிய மட்டைதானா?

எனது நண்பர் ஒருவர் யாழ்ப்பாணத்தின் சில புத்திஜீவிகளைப்பற்றிச் சொல்லும்போது ஓர் உதாரணத்தை எடுத்துக் காட்டுவார். “நீரில் மிதக்கும் பனிக்கட்டிகள்” என்று. அதாவது அவர்களும் யாழ்ப்பாணிகள்தான். ஆனால் தங்களை முற்போக்கானவர்களாகக் காட்டிக் கொண்டு கொஞ்சம் மேலே மிதப்பார்கள். நீரில் மிதக்கும் பனிக்கட்டியைப் போல. ஆனால் பனிக்கட்டியும் நீரும் அடிப்படையில் ஒரே பண்பிலிருந்து வந்தவைதான். இது இப்பொழுது என்பிபிக்கும் பொருந்துமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பீகார் தேர்தல் முடிவு எதைக் காட்டுகின்றது?



**வாக்காளர்பட்டியல் "சிறப்புத் தீவிரத் திருத்தம்" குறித்து காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கடுமையான விமர்சனத்தை முன்வைத்தன. ஆனால், பீகார் வாக்காளர்கள் அதனைப் பொருட்படுத் தவில்லை. பிரதமர் மோடியையே வெற்றியின் நாயகனாக்கியுள்ளனர்.**

- நியூசிலாந்து சிற்சபேசன் -

இந்தியாவின் பீகார் மாநிலச் சட்டமன்றத் தேர்தல் முடிவு இந்திய அரசியலிலே பரவலான கவனத்தை ஈர்த்திருக்கின்றது.

பீகார் மாநிலத்திலே சொல்லிக்கொள்ளக்கூடிய வளர்ச்சி கிடையாது. வேலை வாய்ப்புக்கள் குறைவு. அதனால் பீகாரி மக்கள் வேலைதேடி பிறமாநிலங்களுக்குச் செல்கின்றனர். அடிப்படைப் பிரச்னைகள் தீர்க்கப்படாமலேயே உள்ளன. ஆனாலும்கூட, 2015ல் ஆரம்பமாகிய நிதிஷ்குமார் ஆட்சியில் மக்களுக்கு கோபமோ வெறுப்போ ஏற்படவில்லை.

அதனாலேயே, முதலமைச்சர் நிதிஷ்குமாரின் ஐக்கிய ஜனதாதளம் மற்றும் பிரதமர் மோடியின் பாரதீய ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு பீகார் மாநிலத் தேர்தலிலே பிரமாண்டமான வெற்றி கிடைத்திருக்கின்றது.

மறுவளத்தில், முன்னாள் முதலமைச்சர் லாலுபிரசாத் யாதவின் மகன் தேஜஸ்வி யாதவின் ராஷ்ட்ரிய ஜனதாதளம் மற்றும் ராகுல்காந்தியின் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி படுதோல்வியைச் சந்தித்திருக்கின்றது.

இது சோஷல் மீடியாவின் யுகமாகும். சாமானியர்களின் வாழ்க்கையின் ஒரு பகுதியாகவே "ஸ்மார்ட்போன்" ஆகிவிட்டது. அதனால் பெருவாரியான தகவல்கள் பரிமாறப்படுகின்றன. அதனால் சிந்திப்பது குறைந்திருக்கின்றது. உணர்ச்சிவசப்படுவது அதிகரித்திருக்கின்றது. அஃது வலதுசார் அரசியல் செயற்பாடுகளுக்கு வரப்பிரசாதமாகும். கூர்ந்து அவதானித்தால், பீகார் முதல் வாஷிங்டன் வரை அதனைத் தெளிவாகவே காணலாம்.

அத்தோடு, மோடி - நிதிஷ்குமார் கூட்டணி வாக்காளர்களைத் தெளிவாக அடையாளப்படுத்திக் கொண்டது. நல்ல படியாகவே கவனித்துக்கொண்டது.

பீகார் சாதியக் கட்டமைப்பில் இயங்குவதாகும். அதனால், சாதி அடிப்படையிலேயே தேர்தல் உத்தி வகுக்கப்படுவதாகும். ஆனால், சமூகத்தின் ஒரு பிரிவான பெண்களை இலக்குவைக்கும் யுக்தி பீகாருக்குப் புதியதாகும்.

பீகாரிலிருந்து, அதிக எண்ணிக்கையிலான ஆண்கள் வேலைதேடி பிறமாநிலங்களுக்குச் சென்றுள்ளனர். அதனால், பெண்களே குடும்பங்களை நடாத்துகின்றனர். அந்தவகையிலே, பெண்களை இலக்குவைத்து நிதீஷ்குமார் - மோடி கூட்டணி தேர்தல் உத்தியை வகுத்துக்கொண்டது.

சுயதொழில் துவங்க உதவி என்ற கோதாவில் தேர்தலுக்கு முன்பு பத்தாயிரம் ரூபாய் பெண்களுக்கு வழங்கப்பட்டது.

பள்ளிக்கூடங்களுக்குச் செல்லும் பெண்களுக்கு மிதிவண்டிகள் வழங்கப்பட்டன. சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டன.

பெண் சிசுக் கொலைகளைத் தடுப்பதற்கான திட்டம், பெண்களின் ஆரம்பக் கல்வியிலிருந்து பல்கலைக்கழக கல்வி வரை படிப்புதவி வழங்கும் திட்டம், மது விலக்கு எனப் பெண்களை மையமாகக் கொண்டே அரசியல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

குறிப்பாகச் சொல்வதானால், அதிகமான ஆண்கள் வெளிமாநிலங்களுக்கு வேலைதேடிப்போயுள்ள சூழலிலே "மதுவிலக்கு" ஒருவகையான சமூகப் பாதுகாப்பை பெண்களிடையே ஏற்படுத்தியிருக்கின்றது.

இவ்வாறான பின்னணியிலேயே, மொத்தமுள்ள 243 ஆசனங்களிலே, மோடி - நிதிஷ்குமார் கூட்டணி 202 ஆசனங்களைக் கைப்பற்றி அறுதிப் பெரும்பான்மையுடன் பீகாரில் ஆட்சி அமைக்கின்றது.

2014ம் ஆண்டு முதல் மோடி தலைமையில் பாரதீய ஜனதாக் கட்சியே இந்திய ஒன்றியத்தை ஆட்சி செய்கின்றது. 2024ன் நடுப்பகுதியிலே நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் மூன்றாவது முறையாக ஆட்சிப் பீடமேறியது. ஆனாலும்கூட, முழுமையாகக் கொண்டாடக்கூடிய வெற்றி கிடைக்கவில்லை. 240 ஆசனங்களே கிடைத்தன. பீகாரின் நிதிஷ்குமார், ஆந்திராவின் சந்திரபாபு நாயுடு போன்ற மாநிலச் சக்திகளின் ஆதரவுடனேயே ஆட்சியமைக்க முடிந்தது. அதனால், பாரதீய ஜனதாவின் சரிவு ஆரம்பமாகிவிட்டது எனக் கருதப்பட்டது.

அதனை, பாரதீய ஜனதா பொய்யாக்கி வருகின்றது. அரசியல்களத்தில் கடுமையாக உழைக்கின்றது. தேர்தல் வியூகங்களைத் தொடர்ச்சியாக மீளாய்வு செய்கின்றது. மாநிலக் கட்சிகளிடையே புகுந்து விளையாடுகின்றது. "பூத் லெவலில்" (வாக்குச்சாவடி) இறங்கி வேலை செய்கின்றது.

அதனால், ஹரியாணா, மகாராஷ்டிரா, இராஜஸ்தான், உத்தரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம், சத்தீஸ்கர் மாநிலங்களிலே கிடைத்த வெற்றியின் தொடர்ச்சியாக பீகாரிலேயும் வெற்றி பெற்றிருக்கின்றது.

வாக்காளர்பட்டியல் "சிறப்புத் தீவிரத் திருத்தம்" குறித்து காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கடுமையான விமர்சனத்தை முன்வைத்தன. ஆனால், பீகார் வாக்காளர்கள் அதனைப் பொருட்படுத்தவில்லை. பிரதமர் மோடியையே வெற்றியின் நாயகனாக்கியுள்ளனர்.

இது, நியாயமாக நடைபெற்ற தேர்தலா அல்லது எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டுவதுபோன்று, "தில்லாலங்கடி" தேர்தலா என்பதே கேள்வியாகும்.

எதுஎப்படியாகிலும், அசாம் - தமிழ்நாடு - கேரளா மற்றும் மேற்கு வங்கம் போன்ற மாநிலங்கள் சட்டமன்றத் தேர்தலுக்கு தயாராகின்ற சூழலிலே, பிரதமர் மோடி தலைமையிலான கூட்டணியின் வீரியத்தையே பீகார் தேர்தல் முடிவு காட்டுகின்றது.

---

## பாகிஸ்தானில் இடம்பெற்றமறைமுகமான
# இராணுவச் சதிப்புரட்சி



பாகிஸ்தானில் நவம்பர் 13 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட 27வது அரசியலமைப்புத் திருத்தம் ஜனநாயகம் என்ற ஒரு புறத்தோற்றத்துக்கு பின்னால் இருந்துகொண்டு இராணுவத் தலைமைத்துவமே இரகசியமாகச் செல்வாக்குச் செலுத்தி 'ஆட்சி"நடத்திக்கொண்டிருக்கிறது என்ற நீண்டநாள் பகிரங்க இரகசியத்தை விதிமுறைப்படுத்தியிருக்கிறது. இராணுவத் தளபதி அசீம் முனீர் படிப்படியாகதனது அதிகாரத்தைவலுப்படுத்திவந்திருக்கிறார். பிரதமர் ஷெபாஸ் ஷரீபின் கூட்டணிஅரசாங்கம் அவரின் ஆசீர்வாதங்களுடன் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது.

இந்தியாவுடனான குறுகிய ஒரு மோதலுக்கு பிறகு கடந்த மேமாதத்தில் ஜெனரல் முனீரை அரசாங்கம் பீல்ட் மார்ஷலாகதர முயர்த்தியது. 1958 ஆம் ஆண்டில் அதிகாரத்தைக் கைப்பற்றிய ஜெனரல் அயூப் கானுக்கு பிறகு இரண்டாவதாக ஐந்து நட்சத்திர ஜெனரலாக முனீர் வந்திருக்கிறார்.

அரசியலமைப்புத் திருத்தம் இராணுவ கட்டளைப் பீடத்தையும் நீதித்துறையையும் மறுசீரமைத்திருக்கிறது. அதுபாகிஸ்தான் அரசியலமைப்பின் 243 வதுசரத்தை திருத்தி எழுதி பாதுகாப்புபடைகளின் பிரதானி என்ற பதவியை அறிமுகப்படுத்தியிருக்கிறது. அந்தப் பதவி இராணுவம், கடற்படைமற்றும் விமானப்படைமீது அதிகாரத்தைக் கொண்டிருக்கும். இராணுவத் தளபதியே பாதுகாப்பு படைகளின் பிரதானியாகவும் இருப்பார்.

அணுவாயுதங்கள் மற்றும் கேந்திரமுக்கியத்துவ சொத்துக்களைமேற்பார்வை செய்வதற்குதேசிய மூலோபாய கட்டளையகத்தின் தளபதி என்ற ஒரு பதவியையும் அரசியலமைப்பு திருத்தம் உருவாக்குகிறது. அந்ததளபதி இராணுவத் தளபதியின் சிபாரிசின் பேரில் பிரதமரினால் நியமிக்கப்படுவார்.

ஐந்துநட்சத்திரதரத்துக்குஉயர்த்தப்படும் எந்தவொரு அதிகாரிக்கும் (தற்போது ஜெனரல் முனீர்) எதிராக குற்றவியல் வழக்குகளைத் தொடுக்க முடியாதவாறு வாழ்நாள் பூராவும் தண்டனை விலக்கை அரசியலமைப்புத் திருத்தம் வழங்குவதுமிகவும் முக்கியமாககவனிக்கப்படவேண்டியதாகும். இந்த தண்டனை விலக்கு ஜனாதிபதிக்கும் உரியதாகும். ஐந்துநட்சத்திரஅதிகாரிகள் வாழ்நாள் பூராவும் சீருடையிலேயே இருப்பர். அவர்களைஅரசியலமைப்பின் 47 வதுசரத்தின் கீழ் உள்ளஏற்பாடுகளின் பிரகாரம் பதவிநீக்கச் செயன்முறை ஒன்றின் மூலம் மாத்திரமே அகற்றமுடியும்.

மெய்யாகவே ஜெனரல் முனீர் தான் ஆட்சிநிறுவனக் கட்டமைப்பில் புதிய மத்தியமயப்படுத்தப்பட்ட அதிகாரமையமாக விளங்கப்போகிறார்.

அரசியலமைப்பை வியாக்கியானம் செய்யும் அதிகாரத்தை உச்சநீதிமன்றத்திடம் இருந்துஅரசியலமைப்புத் திருத்தம் பறிக்கிறது. பதிலாக புதிய ஒரு அரசியலமைப்பு நீதிமன்றம் உருவாக்கப்படுகிறது. அதற்கான நீதிபதிகள் அரசாங்கத்தினால் நியமிக்கப்படுவர். இந்தபுதியஏற்பாட்டைஆட்சேபித்து சிரேஷ்ட நீதிபதிகள் பலர் பதவிகளை இராஜினாமாச் செய்துவிட்டனர்.

பாகிஸ்தானில் ஜனநாயகம் ஒருபோதுமே உறுதியானதாக இருந்ததில்லை. இருந்தாலும், நெருக்கடியான தருணங்களில் சிவில் சமூகமும் அரசியல் வர்க்கத்தின் பிரிவுகளும் பலம்பொருந்திய ஜெனரல்களை எதிர்த்து நின்று மட்டுப்படுத்தப்பட்ட அளவுக்கு ஜனநாயக இடப்பரப்பை மீட்டெடுத்தன.

ஆனால், இன்று ஜெனரல் முனீரை எதிர்த்துச் சவால் விடுக்கும் ஒரேயொரு பிரதான அரசியல்வாதியாக இம்ரான் கான் மாத்திரமே விளங்குகிறார். ஆனால் அவர் இரண்டு வருடங்களுக்கும் அதிகமான காலமாகசிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்.

பலவீனமான ஒரு அரசாங்கத்தையும் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் எதிர்க்கட்சி தலைமைத்துவத்தையும் கொண்ட ஒரு நாட்டில் அரசியலமைப்பின் முழுமையான பாதூகாப்பு வசதியுடன் ஜெனரல் முனீர் தனது அதிகாரத்தை விரிவுபடுத்திக் கொண்டிருக்கிறார். ஆனால், பாகிஸ்தானில் இராணுவப் பலவான்களின் எழுச்சிக் கதை இறுதியில் அவர்களின் வீழ்ச்சியுடன் முடிவடைவதே வழமையாகும்.

பாகிஸ்தான் பழங்குடிமக்கள் வாழும் பகுதிகளில் கிளச்ச்சிகளுக்கு எதிராகப் சண்டையிட வேண்டியிருக்கும் ஒருநேரத்தில் ஜெனரல் முனீர் அதிகாரத்தை அபகரித்திருக்கிறார். பாகிஸ்தானுக்கும் ஆப்கானிஸ்தானுக்கும் இடையிலான உறவுகள் தாழ்ந்த ஒரு மட்டத்தில் இருக்கின்றன. இம்ரான் கானின் பி.ரி.ஐ. கட்சி 'கலப்பு" சிவிலியன் - இராணுவ ஆட்சிக்கு எதிராக வீதிகளில் இறங்கிப் போராடிசவால் விடுத்துக் கொண்டிருக்கிறது. பொருளாதாரம் தொடர்ந்தும் இடர்பாட்டுக்கு உள்ளாகியிருக்கிறது.

இந்தசவால்களுக்கு ஜெனரல் முனீரின் எதிர்வினை பலவீனமான அரசியல் வாதிகளைப் பயன்படுத்தி மறைமுகமானசதிப் புரட்சியைச் செயவதாகவே இருந்திருக்கிறது. அது விரைவாகவே அவருக்கு எதிர்மாறான பின்வளைவுகளை ஏற்படுத்தக்கூடும்.

(தி இந்துஆசிரியதலையங்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐங்கரன் விக்கினேஸ்வரா

# காலநிலை பேரழிவுக்கு யார் பொறுப்பு?

# பிரேசில் 'கோப் 30' மாநாடு எதிர்வுகூறல் என்ன?

உலகளாவிய காலநிலை மாற்றத்திற்கான மூல காரணத்தை எவ்வாறு சமாளிப்பது மற்றும் தற்போதைய புவி வெப்பமடைதலுக்கு ஏற்ப நாடுகளுக்கு எவ்வாறு உதவுவது என்பது பற்றிய முக்கிய பிரச்னைகள் குறித்து பிரேசிலில் (COP30) கோப்30 உச்சிமாநாடு நடைபெறுகிறது.

ஐக்கிய நாடுகள் காலநிலை மாற்றக் கட்டமைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட நாடுகளின் 30வது மாநாடு தற்போது பிரேசிலின் அமேசான் பகுதியிலுள்ள பெலெம் நகரில் நவம்பர் 10 முதல் 21 வரை நடைபெற்று வருகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் ஆதரவில் ஆண்டுதோறும் நடக்கும் இம்மாநாட்டின் முதல் அதிகாரப்பூர்வ அமர்வு 1995-இல் பெர்லினில் நடைபெற்றது. தற்போது இந்த ஒப்பந்தத்தில் 198 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன.


1992-இல் கையெழுத்தான இந்த அதிகாரப்பூர்வ ஒப்பந்தம், 1990-இல் ஐக்கிய நாடுகள் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட அரசுகளுக்கு இடையேயான காலநிலை மாற்றக் குழு அறிக்கையை அடிப்படையாகக் கொண்டது. மனிதப் பொருளாதார நடவடிக்கைகளுக்கும் உலகளாவிய வெப்பமயமாதலுக்கும் இடையிலான தொடர்பையும், காலநிலை மாற்றத்தின் பேரழிவுத் தாக்கங்களையும் உறுதிப்படுத்திய பல்லாண்டு அறிவியல் ஆய்வுகளே இதற்கெல்லாம் அடித்தளம் அமைத்தன.

இந்த நிரூபிக்கப்பட்ட அறிவியல் உண்மைகளின் அடிப்படையில் காலநிலை மாற்றத்தைத் தணிக்கவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவளிக்கவும் உலக நாடுகள் பல ஒப்பந்தங்களை மேற்கொண்டன. இதில் முக்கியமானவை 1997-இல் கையெழுத்தான கியோட்டோ நெறிமுறையும், 2015-இல் எட்டப்பட்ட பாரிஸ் ஒப்பந்தமும் ஆகும்.

**உலகளாவிய முன்முயற்சி :**

காலநிலை மாற்றம் குறித்த தகவல் ஒருமைப்பாட்டிற்கான உலகளாவிய முன்முயற்சியால் தொடங்கப்பட்டதே இந்த அமைப்பாகும். இந்த மாநாட்டில் காலநிலை மாற்றம் குறித்த தகவல் ஒருமைப்பாடு குறித்த பிரகடனம் என்ற முயற்சியில் பத்து நாடுகள் கையெழுத்திட்டுள்ளன.

இதில் காலநிலை தவறான தகவல்களை நிவர்த்தி செய்வதற்கும், காலநிலை பிரச்சினைகள் குறித்த ஆதார அடிப்படையிலான தகவல்களை ஊக்குவிப்பதற்கும் சர்வதேச உறுதிமொழிகளை உருவாக்குவதை இந்த தீர்மானங்கள்



நோக்கமாகக் கொண்டுள்ளது.

ஒருங்கிணைந்த உலகளாவிய காலநிலை மாற்றப் பதிலிறுப்பைக் குறித்து நாடுகள் கூடி ஆலோசிக்கத் தொடங்கி இப்போது 30 ஆண்டுகளுக்கும் மேலாகிவிட்டது. இதன் விளைவாக ஆயிரக்கணக்கான காலநிலை-நேர்மறை நடவடிக்கைகள் தொடங்கப்பட்டாலும், உலகளாவிய வெப்பநிலை சீராக உயர்வதைத் தடுப்பதில் இவை இதுவரை குறைந்த தாக்கத்தையே ஏற்படுத்தியுள்ளன.

மேலும் வளரும் நாடுகளின் கவலைகள் போதுமான அளவில் கவனிக்கப்படாததால், குறிப்பாக நிதியுதவி மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான கவலைகள் குறித்து அவை மிகவும் அதிருப்தி அடைந்துள்ளன. இவற்றைக் கொடுக்க வளர்ச்சியடைந்த நாடுகள் கடமைப்பட்டிருக்கின்றன.

மேலும், வரலாற்றில் மிகப்பெரிய பசுமை இல்ல வாயுக்களை வெளியிட்ட நாடான அமெரிக்கா, எந்த விளைவுகளையும் சந்திக்காமல் மீண்டும் பாரிஸ் ஒப்பந்தத்திலிருந்து விலகியுள்ளது. இந்தச் செயல்முறையில் ஏமாற்றம் உள்ளது என்பதில் சந்தேகமில்லை. இதற்குக் காரணம், வளர்ச்சியடைந்த நாடுகள், குறிப்பாக அமெரிக்கா, போதுமானதைச் செய்யவில்லை, நிச்சயமாக அவர்கள் செய்ய வேண்டிய அளவுக்குச் செய்யவில்லை என்பதுதான் உண்மை ஆகும்.

இது உமிழ்வு குறைப்பில் மட்டுமல்ல, நிதி மற்றும் தொழில்நுட்பத்திலும் கூட. அமெரிக்கா இப்போது




**அமெரிக்கா ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் காலநிலை மாற்ற மாநாட்டை "ஒரு சூழ்ச்சி" என்று முத்திரை குத்தியுள்ளார். அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப்பின் வலதுசாரி ஆட்சி, காலநிலை மாற்றம் பற்றிய பேச்சையே அபத்தம் என்று நிராகரிக்கிறது.**

பாரிஸ் ஒப்பந்தத்திலிருந்தும் விலகியுள்ளது. இதனால் பேச்சுவார்த்தை செயல்முறை நெருக்கடியில் உள்ளது.

காலநிலை மாற்றத்திற்கான மூல காரணத்தை எவ்வாறு சமாளிப்பது மற்றும் தற்போதைய புவி வெப்பமடைதலுக்கு ஏற்ப நாடுகளுக்கு எவ்வாறு உதவுவது என்பது பற்றிய முக்கிய பிரச்சினைகள் குறித்து, பல வருட ஒப்பந்தங்கள் மற்றும் உறுதிமொழிகளை செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பேச்சுவார்த்தைகள் வழங்கும் என்று பிரேசில் மாநாடு உறுதியளித்துள்ளது.

**காலநிலை பேரழிவுக்கு யார் பொறுப்பு?**

கடந்த பல ஆண்டுகளாக, தற்போதைய பேரழிவுக்கு யார் பொறுப்பு, தணிப்புக்கு எவ்வளவு பங்களிக்க வேண்டும் என்பதில் வேறுபாடுகள் இருந்தபோதும், காலநிலை மாற்றம் உண்மையான, உடனடி அச்சுறுத்தல் என்றும் அதை முழு மனிதகுலமும் சேர்ந்து எதிர்கொள்ள வேண்டும் என்றும் பெரும்பாலான நாடுகள் ஒப்புக்கொண்டுள்ளன.


அதனால் புதை படிம எரிபொருள் பயன்பாட்டைக் குறைப்பது, கடல் மட்ட உயர்வால் மூழ்கும் அபாயத்தில் உள்ள தாழ்நில நாடுகளுக்கும் தீவுகளுக்கும் நிதி-தொழில்நுட்ப உதவி அளிப்பது, பல புதுமையான திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஆனாலும் இந்த பேச்சுவார்த்தைகளில் அமெரிக்கா பங்குபறாத நிலை இருந்தது. ஜனாதிபதி டொனால் ட்ரம்ப் காலநிலை மாற்றத்தை "ஒரு சூழ்ச்சி" என்று முத்திரை குத்திய பிறகு, இந்த பேச்சுவார்த்தைக்கு எந்த குழுவையும் அனுப்பவில்லை.

இந்த வார தொடக்கத்தில், உலகின் மூத்த காலநிலைத் தலைவர்கள் குழு ஒன்று, காலநிலை மாற்றம் குறித்த உண்மைகள் நிறுத்தப்படுவதை உறுதி செய்யுமாறு உச்சிமாநாட்டிற்கு அழைப்பு விடுத்தது.

**அமேசானை விடுவிப்போம்:**

பிரேசில் உச்சிமாநாட்டிற்கு வெளியே ஆயிரக்கணக்கானோர் மேற்குலக அரசுகளின் உடனடி நடவடிக்கைக்கு அழைப்பு விடுத்து பேரணி நடத்தினர். உலகம் முழுவதிலுமிருந்து பழங்குடி சமூகங்கள், பிரேசிலிய இளைஞர்




குழுக்கள் மற்றும் ஆர்வலர்கள் ஆயிரக்கணக்கானோர் இந்த பேரணியில் இணைந்து கொண்டனர்.

மேலும் ஆயிரக்கணக்கான காலநிலை எதிர்ப்பாளர்கள் பிரேசிலில் காலநிலை பேச்சுவார்த்தைகளின் வாயில்களுக்கு அருகே சென்று தங்கள் எதிர்ப்பை பகிர்ந்து கொண்டனர்.

இலத்தீன் அமெரிக்காவில் பல வருட காலநிலை ஒப்பந்தங்கள் மற்றும் உறுதிமொழிகளை செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பேச்சுவார்த்தைகள் வழங்கும் என்று பிரேசில் அரசு உறுதியளித்துள்ளது.

2021 க்குப் பிறகு ஐநா காலநிலை உச்சிமாநாடு பேச்சுவார்த்தைகளுக்கு வெளியே போராட்டக்காரர்கள் ஆர்ப்பாட்டம் செய்ய அனுமதிக்கப்பட்டது இதுவே முதல் முறை. கடைசி மூன்று ஆண்டுகளில் பொதுமக்கள் போராட்டத்தை அனுமதிக்கவில்லை.

**உலகம் முழுவதும் போராட்டங்கள்:**

இங்கிலாந்து உட்பட உலகம் முழுவதும் போராட்டங்கள் பல நடந்துள்ளன. இந்தப் பேச்சுவார்த்தைகளில் பழங்குடியினரின் குரல்களின் பிரதிநிதித்துவம் ஒரு முக்கிய அம்சமாக இருந்தது. இந்த மாநாடு பூர்வீக மக்களின் மாநாடு என்றும் அழைக்கப்பட்டது.

ஆனால் போராட்டத்தில் பங்கேற்ற பல குழுக்கள் தங்கள் நாடுகளில் காடழிப்பு, நிலப் பாதுகாப்பு மற்றும் வளங்களைப் பிரித்தெடுப்பது குறித்த தங்கள் கவலைகள் கேட்கப்படவில்லை என்றும் குற்றஞ்சாட்டினர்.

**அமெரிக்காவின் பொறுப்பற்ற செயல்:**

சமீபத்தில் உருவான கார்பன் வரவு முறை ஒரு நிறுவன நட்பு கருவி - அதாவது, அதிக உமிழ்வு கொண்ட




நாடு அல்லது நிறுவனம், குறைந்த உமிழ்வு கொண்ட நாடுகளிடமிருந்து கார்பன் வரவை வாங்கி தமது கார்பன் தடத்தை ஈடுகட்டிக்கொள்ளலாம். இவை மூலம் தொழிற்புரட்சிக்கு முந்தைய நிலையைவிட வெப்பமயமாதலை 2 வீதம் அல்லது 1.5 வீதத்துக்குள் வைத்திருக்கலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், இன்று அந்த நம்பிக்கைகள் பெரிதும் சிதைந்துவிட்டன. மிகுந்த நம்பிக்கையுள்ள விஞ்ஞானிகள் கூட 1.5 வீத இலக்கு சாத்தியமில்லை என்கின்றனர். 2 வீதத்துக்குள் வைப்பதுகூட கடினமாகி வருகிறது. தற்போதைய தணிப்பு முயற்சிகளுக்கு மிகப் பெரிய தடையாக இருப்பது அரசியல். அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப்பின் வலதுசாரி அமெரிக்க ஆட்சி, காலநிலை மாற்றம் பற்றிய பேச்சையே அபத்தம் என்று நிராகரிக்கிறது.

இதற்கும் மேலாக புதைபடிம எரிபொருள் குறைப்புக்கு எதிராகவும், நிலக்கரியிலிருந்து சூரிய-காற்று மின் சக்திக்கு மாறுவதற்கு எதிராகவும் பேசும் தற்போதைய அமெரிக்க அரசு, உலகின் மிகப் பெரிய கார்பன் தடம் கொண்ட நாடான அமெரிக்கா, உலகக் காலநிலை ஒப்பந்தங்களிலிருந்து ஒருதலைப்பட்சமாக விலகிக்கொண்டுள்ளது.

ட்ரம்ப் நிர்வாகத்தின் இந்தச் செயல் மிகவும் பொறுப்பற்றது. இது இன்றைய தலைமுறைக்கு மட்டுமல்ல, எதிர்கால சந்ததிகளுக்கும் பேரழிவை ஏற்படுத்தும். துரதிர்ஷ்டவசமாக, பணம் ஈட்டுவதிலேயே குறியாக உள்ள சக்திகள்தான் இன்றைய உலகின் முன்னணி நாட்டைக் கட்டுப்படுத்துகின்றன.

ஆனால் பணக்கார நாடுகள் உதவினாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, காலநிலை பாதிப்புகளால் துன்புறும் மக்களை ஆதரிக்க உலகம் முன்னேற வேண்டும். அதற்கு பெலெம் மாநாட்டின் வெற்றி மிக முக்கிய அளவுகோல் ஆகும். அந்த வெற்றி, ஆதிக்க உலகின் செயல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பெரும் ஆறுதலாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனாலும் வளர்ச்சியடைந்த நாடுகளின் போதிய நிதியுதவி இல்லாததால் வளரும் நாடுகள் அதிருப்தி அடைந்துள்ளன. ஐ.நா. காலநிலை மாற்றம் குறித்து ஆண்டுதோறும் நடைபெறும் காலநிலை பேச்சுவார்த்தையில் பலன்கள் முழுமையாக கிடைப்பதில்லை என்பதே உண்மையாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேலும் 200 மருந்துகளுக்கு கட்டுப்பாட்டு விலை நிர்ணயம்

கொழும்பு, நவ. 23

வரலாற்றில் முதல் முறையாக சுமார் 350 மருந்துகளுக்கான கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளதுடன், மேலும் 200 மருந்துகளுக்கான கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அரச மருந்து தயாரிப்பு கூட்டுத்தாபனத்தால் புதிதாக சந்தைக்கு அறிமுகப்படுத்தப்படும் மருந்து வகைகளை, அறிமுகப்படுத்தும் நிகழ்வு சுகாதார அமைச்சில் நடைபெற்றது. இதன்போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுமார் 350 மருந்து வகைகளுக்கான கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிக்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த நாட்டு மருந்து விநியோகத் துறையில் இது புதிய புரட்சியாகும். எதிர்வரும் நாட்களில் மேலும் 200 மருந்துகளுக்கு கட்டுப்பாட்டு விலை நிர்ணயிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபைக்கு மருந்துகளுக்கான விலையை நிர்ணயிக்கும் அதிகாரம் உள்ளது.

எனினும் 2023 ஆம் ஆண்டு தொடரப்பட்ட வழக்கு விசாரணை காரணமாக அவை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. இந்த சூழ்நிலையை தமக்கு சாதகமாக பயன்படுத்தி தனியார் மருந்தகங்களில், மருந்து வகைகளை அதிக விலைக்கு விற்பனை செய்கின்றனர். ஆகையால் மருந்துகளுக்கான விலையை நிர்ணயிப்பதற்கான புதிய வர்த்தமானி அறிவிப்பு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது- என்றார். (எ)

## மண்மேடு சரிந்து விழுந்து வீடொன்று பலத்த சேதம்!



நுவரெலியா, நவ. 23

திம்புலபத்தனை பகுதியில் மண்மேடு சரிந்து விழுந்ததில் வீடொன்று பலத்த சேதமடைந்துள்ளதாக நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

நுவரெலியா மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் மழை காரணமாக குறித்த மண்மேடு சரிந்து விழுந்துள்ளதாக நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

மண்மேடு சரிந்து விழுந்ததில் வீட்டின் ஒரு அறை முற்றாக சேதமடைந்துள்ளது.

மேலும் வீட்டின் மற்ற சுவர்கள் இடிந்து விழும் அபாயம் இருப்பதால், வீட்டில் வசிக்கும் 05 பேரை உறவினர் வீட்டில் தற்காலிகமாக தங்கவைக்க தோட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

மண்சரிவால் உயிராபத்துக்கள் ஏற்படாத போதிலும் உடமைகள் சேதமடைந்துள்ளன.

சம்பவம் குறித்து திம்புலபத்தனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## நடைமுறையில்...

2018 ஆம் ஆண்டுக்கு பிறகு மாகாண சபைகளுக்கு தேர்தல்கள் நடத்தப்படவில்லை. மத்திய அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட ஆளுநர்களே மாகாணங்களை நிருவகிக்கிறார்கள். நிதி அதிகாரம் மத்தியமயப்படுத்தப்பட்டதாகவே தொடர்ந்து இருக்கிறது. மத்திய அரசாங்கத்தின் அதிகாரிகளினாலேயே உள்ளூர்த் தேவைகள் கையாளப்படுகின்றன. அவர்களில் பெரும்பாலானவர்கள் பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள். அந்த பேசாத மொழிகளைப் பேசுகின்ற மக்களின் உணர்வுகளை அவர்களினால் புரிந்துகொள்ள முடியாமல் இருக்கலாம். இது உள்ளூார் மட்டத்தில் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைக் காண்பதற்கு வசதிசெய்யும் 13 வது அரசியலமைப்பு திருத்தத்தின் நோக்கத்தை மலினப்படுத்துகிறது.

சகல மக்களையும் சமத்துவமானவர்களாக நடத்துவதில் அரசாங்கத்துக்கு உண்மையான அக்கறை இருந்தால், அதேயளவு அக்கறையை அரசியல் அதிகாரப்பகிர்விலும் காண்பிக்க வேண்டும். அப்போது மாத்திரமே சமத்துவம் என்ற சிந்தனை நடைமுறையில் மெய்யானதாக இருக்க முடியும். (08ஆம் பக்கத் தொடர்ச்சி)

*கங்கைகளின் நீர்மட்டம் உயர்வு:*

## தாழ் நிலப்பகுதி மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை

கொழும்பு, நவ. 23

தொடரும் கனமழை காரணமாக நில்வலா மற்றும் கிங் கங்கையின் நீர்மட்டம் தொடர்ந்து அதிகரித்து வருவதால், ஆற்றுக்கு அருகிலுள்ள தாழ்வான பகுதிகளில் வாழும் பொதுமக்கள் அவதானத்துடன் இருக்குமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேநேரம், அடுத்த சில நாட்களில் நாடு முழுவதும் மழையுடன் கூடிய வானிலை அதிகரிக்கக் கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இதன்படி வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும். இதேநேரம் நாட்டின் ஏனைய பகுதிகளில் பிற்பகல் 01.00 மணிக்குப் பின்னர், பல இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடும்.

மேல், சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களிலும் கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் சில இடங்களில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும்.

சப்ரகமுவ, மத்திய, ஊவா, மேல் மற்றும் தெற்கு மாகாணங்களில் சில இடங்களில் அதிகாலை நேரங்களில் பனிமூட்டம் நிலவக்கூடிய வானிலை எதிர்பார்க்கப்படலாம்.

இடியுடன் கூடிய மழை பெய்யும் போது தற்காலிகமாக ஏற்படும் பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கத்தால் ஏற்படும் சேதங்களைக் குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை நாட்டின் கடற்பிராந்தியங்களில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக மீனவர்களுக்கு விசேட அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, தெற்கு அந்தமான் கடலில் குறைந்த காற்றழுத்தப் பகுதி உருவாகக்கூடிய வாய்ப்புள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அது மேல் - வடமேல் நோக்கி நகர்ந்து தென்கிழக்கு வங்காள விரிகுடாவில் நாளை 24 ஆம் திகதியளவில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக தீவிரமடைய வாய்ப்புள்ளது. இது தொடர்பில் அவதானமாக செயல்படுமாறு மீனவ சமூகங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேநேரம், பொத்துவில் முதல் திருகோணமலை, காங்கேசன்துறை மற்றும் மன்னார் ஊடாக சிலாபம் வரையிலான கடற்கரையோரக் கடல் பகுதிகளில் பல இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

மேலும், நாட்டை சூழவுள்ள ஏனைய கடற்பிராந்தியங்களில் பல இடங்களில் பிற்பகல் அல்லது இரவு வேளையில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

இதேவேளை, காற்றானது காங்கேசன் துறையிலிருந்து மன்னார் ஊடாக புத்தளம் வரையிலான கடற்கரையோரக் கடற்பிராந்தியங்களில் மணிக்கு 40 கிலோமீற்றர் வேகத்தில் வீசக்கூடும்.

காங்கேசன்துறையிலிருந்து மன்னார் ஊடாக புத்தளம் வரையிலான கடற்கரைக்கு அப்பால் உள்ள கடற்பிராந்தியங்களில் சில நேரங்களில் மிதமானதாக காற்று வீசக்கூடும். நாட்டை சூழவுள்ள ஏனைய கடற்பிராந்தியங்களில் மிதமான காற்று வீசக்கூடும்.

இடியுடன் கூடிய மழை பெய்யும் போது தற்காலிகமாக பலத்த காற்று வீசும் மற்றும் கடல் மிகவும் கொந்தளிப்பாக இருக்கும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இதேநேரம், நில்வலா கங்கையின் மேல் மற்றும் நடுப் பகுதிகளில் மழை காரணமாக நீர்மட்டம் அதிகரித்துள்ளது.

எனவே, நாளை 24 மணித்தியாலத்தில், பஸ்கொட, கொட்டபொல, பிடபெத்தர, அக்குரெஸ்ஸ, அதுரலிய, மாலிம்பட, கம்புருபிட்டிய மற்றும் திஹகொட டிஃஎஸ் பிரிவுகளில் அமைந்துள்ள நில்வலா நதிப் பள்ளத்தாக்கின் தாழ்வான பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட வாய்ப்புள்ளது.

இந்த பகுதியில் வசிப்பவர்கள் இதுகுறித்து அதிக கவனம் செலுத்துமாறும், அந்த பகுதிகள் வழியாக செல்லும் வாகன ஓட்டுநர்கள் போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் கேட்டுக்கொண்டுள்ளது.

இதேவேளை, பலத்த மழை காரணமாக ஜின் கங்கையின் நீர்மட்டமும் அதிகரித்துள்ளது. எனவே, அடுத்த 14 மணித்தியாலத்திற்குள் நெலுவ, தவலம, நாகொட, நியாகம, வெலிவிட்டிய-திவிதுர, எல்பிட்டிய மற்றும் அக்மீமன பிரதேச செயலாளர் பிரிவுகளில் அமைந்துள்ள ஜின் கங்கை பள்ளத்தாக்கின் தாழ்வான பகுதிகளில் சிறிய வெள்ளப்பெருக்கு ஏற்பட வாய்ப்புள்ளது.

இந்த பகுதிகளில் பயணிக்கும் குடியிருப்பாளர்கள் மற்றும் வாகன சாரதிகள் இது குறித்து அதிக கவனம் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுவதுடன், இது தொடர்பாக போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் கேட்டுக்கொண்டுள்ளது. (எ)

## போதைப்பொருள் விற்பனை: பெண் உட்பட இருவர் கைது!

மாத்தளை, நவ. 23

போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட பெண் உட்பட இருவர் மாத்தளை பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாத்தளை பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலின் பேரில் மாத்தளை - கிரிமெட்டியாவ பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மாத்தளை - கிரிமெட்டியாவ பிரதேசத்தில் வசிக்கும் 34 வயதுடைய ஆணும் 46 வயதுடைய பெண்ணும் ஆவர்.

சந்தேக நபர்களிடமிருந்து 5 கிராம் 567 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் போதைப்பொருள் விற்பனை மூலம் சம்பாதித்த பணத்தை பயன்படுத்தி 3 கோடி ரூபாய் பெறுமதியான வீடொன்றை கட்டியுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. (எ)

## ஜனாதிபதியுடனான தமிழரசுக்கட்சியின் சந்திப்பு...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் சுயேட்சைகளுக்கானவை. இவ் வாறான ஒரு நிலையில் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகள், தீர்வுகள் தொடர் பாக அரசுடனோ அன்றி வேறு இராஜ தந்திரிகளுடனோ கதைப்பதற்கான தனி யுரிமையைத் தமிழ் மக்கள் இலங்கைத் தமிழரசுக்கட்சிக்கு வழங்கவில்லை என் பதை அவர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். மக்களால் வழங்கப்படாத ஒன்றை வலிந்து எடுப்பதற்கு இதுவொன்றும் அவர்களது கட்சிப் பதவியல்ல. கட்சியின் அல்லது தனிநபர்களின் நிகழ்ச்சி நிரலுக் குள் தமிழ் மக்களின் உரிமைகள் தொடர் பான விடயங்களை ஒருபோதும் உள்ளடக் கக் கூடாது. இச்சந்திப்புத் தொடர்பாக இன்னொரு விடயமும் அதன் நோக்கத்தைப் புரியவைக்கும். தமிழரசுக்கட்சியி னரின் முன்னைய அரச மற்றும் இராஜதந் திரிகளுடனான சந்திப்புகள் பலவற்றில் கட்சியின் தலைவராக இருந்தும் பாராளு மன்ற உறுப்பினராக இல்லாத காரணத் தால் மாவை சேனாதிராசா இணைத்துக் கொள்ளப்பட்டதில்லை. அவர் தொடர் பான அணுகுமுறையில் மட்டுமன்றி எதிர்க் கட்சித் தலைவர்களைப் பார்த்தும் அதற் காக அந்நேரத்தில் சுமந்திரன் சொல்லும் ஒருவாக்கியம் அவர்கள் மக்களால் நிராகரிக்கப்பட்டவரென்பது. இன்று அவ்வாறு மக்களால் நிராகரிக்கபட்டவர்களின் தலைமையின்கீழ்தான் குறித்த சந்திப்பு நிகழ்ந்துள்ளது. சட்டவாளர்கள் தமக் கேற்றவாறு அவ்வப்போது நியாயங்களை மாற்றிக்கொள்வதுடன் அதனையும் நியா யப்படுத்த் தயங்கமாட்டார்கள். சமூக ஊடகங்களில் தற்போது வீறுநடைபோ டும் பாராளு மன்ற வாக்கெடுப்பில் தமிழ ரசுக்கட்சி நடுநிலை வகித்தமையும் அவ் வாறான நடுநிலை தொடர்பான சுமந்திரனின் முன்னைய கூற்றும் இதற்கான அண்மைய எடுத்துக்காட்டு.

இவ்விடயங்கள் எல்லாவற்றையும் கருத்திற்கொண்டால் இலங்கைத் தமிழர சுக் கட்சியினரின் ஜனாதிபதியுடனான சந்திப்பும் அதன் விளைவும் தமிழ் மக்க ளைப் பொறுத்து எவ்வகையிலும் ஆரோக் கியமானவையல்ல. இச்சந்திப்புகளுக்கு முன் தமிழ் அரசியல் தலைவர்கள் ஒன்று படவேண்டும். தமிழ் மக்களுக்கான அர சியல் தீர்வின் வடிவம் உட்பட பிரான பிரச்சினைகளுக்கான தீர்வு எவை என்பது வரையறுக்கப்படவேண்டும். இத் தீர்வு தொடர்பாகக் கட்சித் தலைவர்கள் வெவ் வேறு நிலைப்பாடுகளைக் கொண்டிருக்க லாம். அது பிரச்சினையன்று. அதற்காக ஒருவரையொருவர் வெட்டியோடுவதால் எந்தப்பயனும் விளையப்போவதில்லை. வேற்றுமைகளுக்கிடையே பெரும்பான் மையோர் ஏற்றுக் கொள்ளும் ஒரு தீர்வை கண்டறிவதுடன் அதற்கான அணுகுமு றைகளையும் வரையறுக்க வேண்டும். அதில் உறுதியுடன் தொடர்ந்து பயணிப் பதே பலமாகும். அது நிச்சயம் தமிழ் மக் களால் ஏற்றுக்கொள்ளப்படும். அதுவே மக்களுக்கான உண்மையான ஆரோக்கி யத்தைத் தரும். இந்தவிடயத்தில் ஜனாதி பதியின் அணுகுமுறையைத் தமிழரசுக் கட்சியினர் மனங்கொள்ள வேண்டும். உறுதியான ஆட்சிப்பலம் மட்டுமல்ல வடக்கு கிழக்கில் கூடிய தமிழ்ப் பாராளு மன்ற உறுப்பினர்களையும் வைத்திருந்தும் கூட தமிழரசுக்கட்சிக்கு மதிப்பளித்த அனு ரவின் பண்பைத் தமிழரசுக்கட்சியினர் தமது சக தமிழ்க்கட்சிகளுடன் கடைப் பிடிக்க முன்வரவேண்டும். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடுகன்னாவ...

மீட்கப்பட்டது. மேலும் நால்வர் காயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு மாவனல்லை வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டனர்.

மண்ணுக்குள் சிலர் புதையுண்டு இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்பட்ட நிலையில் 10 மணி நேர மீட்புப் பணியின்போது மேலும் ஐவர் சடலங்களாக மீட்கப்பட்டனர். அந்தப் பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வந்த தேடுதல் நடவடிக்கை நேற்று இரவு 7 மணியுடன் நிறுத்தப்பட்டது. இராணுவம், தீயணைப்புப் படையினர் மற்றும் பிரதேச மக்கள் இணைந்து மீட்புப் பணியில் ஈடுபட்டனர். கடும் மழை பெய்து வந்த நிலையிலேயே இந்த மண் சரிவு ஏற்பட்டுள்ளது. சம்பவத்தின் போது உணவகத்துக்குள் பலர் இருந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களில் பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவரும் உள்ளடங்குகின்றார் எனத் தெரியவருகின்றது. (அ)

## இனவாத...

பெற்றுக்கொள்வதற்காக நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பில் கலந்து கொண்ட போதே ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

சமூகங்களுக்கிடையில் புரிந்துணர்வை ஏற்படுத்துவதன் மூலம் நல்லிணக்கத்துடன் கூடிய இலங்கையை உருவாக்கும் தொலைநோக்குப் பார்வையுடன், அனைத்து சமூகங்களையும் ஒன்றிணைத்து "இலங்கை தினம்" கொண்டாடத் திட்டமிடப்பட்டுள்ளது.

அனைத்து இன மக்களையும் ஒன்றிணைத்து இலங்கை தினக் கொண்டாட்டம் ஏற்பாடு செய்யப்படுகின்றமை, இதில் கலந்துகொண்ட அனைத்துக் கட்சித் தலைவர்களாலும் பிரதிநிதிகளாலும் பாராட்டப்பட்டதுடன், இது தொடர்பாக தமது கருத்துக்களையும் பரிந்துரைகளையும் அவர்கள் முன்வைத்தனர்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் வழிகாட்டுதலின் கீழ், அரசாங்கத்தால் செயல்படுத்தப்படும் போதைப்பொருள் அச்சுறுத்தலைத் தோற்கடிப்பதற்கான 'முழு நாடுமே ஒன்றாக' தேசிய செயற்பாடு மற்றும் நாட்டில் தேசிய மற்றும் மத ஒற்றுமையைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்திற்கு நிபந்தனையின்றி தாம் ஆதரவளிப்பதாகவும் பிரதிநிதிகள் இதன்போது வலியுறுத்தினர்.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் தலைமையின் கீழ் ஏற்பாடு செய்யப்படும் இலங்கை தின தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் ஏற்பாடு குறித்து இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன், அரசியல், மத மற்றும் கலாசார பன்முகத்தன்மைக்கு அப்பால், அனைவரும் ஒரு பொதுவான தளத்தில் ஒன்றிணைந்து செயல்படக்கூடிய வகையில் இந்த நிகழ்ச்சிகளையும் செயற்திட்டங்களையும் உருவாக்குமாறு ஏற்பாட்டுக் குழுவிற்கு ஜனாதிபதி மேலும் அறிவுறுத்தினார்.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் ஹினிதும சுனில் செனவி, சமய மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர் முனீர் முழப்பர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பிரின்ஸ் சேனாதிர ஆகியோருடன் தமிழ் முற்போக்கு கூட்டணியை பிரதிநிதித்துவப்படுத்தி மனோ கணேசன் மற்றும் பழனி திகம்பரம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸை பிரதிநிதித்துவப்படுத்தி ரிஷாத் பதியுதீன், இலங்கை முஸ்லிம் காங்கிரஸை பிரதிநிதித்துவப்படுத்தி எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லா, இலங்கை தொழிலாளர் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி காதர் மஸ்தான், ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியைப் பிரதிநிதித்துவப்படுத்தி செல்வம் அடைக்கலநாதன், இலங்கை தமிழ் அரசுக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி இளையதம்பி சிறீநாத், கவிந்தரன் கோடீஸ்வரன், து.ரவிகரன் மற்றும் சுயாதீனக் குழுவின் இராமநாதன் அர்ச்சுனா உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர். (அ)

## மாவீரர்களின்...

பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் கோரிக்கை விடுத்தார். முல்லைத்தீவு, வள்ளிபுனத்தில் நடைபெற்ற மாவீரர் பெற்றோர், உரித்துடையோர் மதிப்பளித்தல் நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நவம்பர் மாதம் என்பது உலகலாவிய ரீதியில் தங்கள் தேசங்களுக்காகப் போரிட்டு மடிந்தவர்களை நினைவு கூருகின்ற மாதம். அதனால்தான் உலகெங்கும் இராணுவத்தினராக இருக்கலாம், போராடியவர்களாக இருக்கலாம் அவர்களைப் பொப்பி மலரால் நினைவு கூருவார்கள். இது உலகம் எங்கும் நடைபெறும் ஒரு நிகழ்வு.

இப்படியான கார்த்திகை மாதத்திலேதான் நாங்களும் தங்களுக்காக அன்றி எங்களுக்காகப் போராடி மடிந்தவர்களை நினைவு கூருகின்ற ஒரு வாரத்தை அனுஷ்டிக்கின்றோம்.

சில நாட்களுக்கு முன்னர் நவம்பர் 13 ஆம் திகதி நாட்டின் தற்போதைய ஜனாதிபதியும் விகாரமாதேவி பூங்காவிலே தன்னோடு தோள் நின்று ஆயுதம் ஏந்தி மடிந்தவர்களை நினைவு கூருகின்ற படங்களை நாங்கள் பார்த்தோம்.

தங்களின் அன்றைய தலைவரின் சீருடையோடு அவர் இருக்கின்ற படம் அதன் பின்னணியில் இருக்கின்றது, ஜனாதிபதி அந்த மேடையில் பேசுகின்றார். அன்றும் அதற்குப் பின்பும அவரின் தோளோடு தோள் நின்றவர்கள் இப்படியாக மலர் அஞ்சலி செலுத்தி அவர்கள் உணர்வுபூர்வமாக அனுஷ்டித்தமையை நாங்கள் பார்த்தோம். அதேபோன்று ஓர் இனத்தின் விடிவுகாகப் போராடி யர்கள் என்றும் எங்களின் மனங்களிலே நீங்கா இடம் பெற்றவர்கள். ஏனென்றால் எங்களுக்காகக் தங்கள் உயிர் களை அவர்கள் கொடுத்தவர்கள். இது நான் எப்போதுமே சொல்லுகின்ற விடயம். அவர்களுடைய அந்த அர்ப்பணிப்புக்கு ஈடாக நாம் எதையும் சொல்ல முடியாது.

ஏனென்றால் தங்களிடத்தில் இருக்கும் அனைத்தையும் அதாவது தமது உயிரையே எமக்காக அவர்கள் கொடுத்தவர்கள். இந்த அஞ்சலி செலுத்துகின்ற நிகழ்விலே பெற்றோர் வருகின்றபோது விசேடமாக தாய்மார், சகோதரிகள் வருகின்றபோது இன்னமும் அவ்கள் அழுது புலம்புவதைக் கண்டோம்.

இங்கே இன்னமும் என நான் கூறுவது இத்தனை வருடங்களாகியும் அவர்கள் அழுகின்றனர் என்றால் அதற்கு ஒரு காரணம் உண்டு. அந்தக் காரணம் இவர்கள் எம்மை விட்டுப் போய்விட்டனர் என்ற வருத்தம் மட்டும் அல்ல அதாவது நான் பெற்றவள் இருக்கப் பிள்ளை மடிந்து விட்டானே என்ற அங்கலாய்ப்பு மட்டுமல்ல அவர்களின் தியாகத்தினாலே இன்னமும் எமது இனம் ஒரு விடிவைக் காணவில்லையே, அது வீணாகப் போய்விடுமோ என்ற அங்கலாய்ப்பு அங்கே தென்படுகின்றது.

அவர்கள் மடிந்ததாலே இந்த இனம் விடிந்தது என்று தெரிந்தால் ஒரு பூரிப்பும் அதிலே கலந்து வரும். ஆனால் அப்படி இல்லாமல் போய்விடுமோ என்ற அங்கலாய்ப்போடு எங்களது இனம் காத்திருக்கின்றது.

தனியான ஓர் இறைமை மிக்க நாடுகாக அவர்கள் போராடினார்கள். ஆனால் சுயமாக ஆட்சி செய்கின்ற முறையிலாவது நாங்கள் எங்களை ஆளுகின்ற ஒரு முறைமையை ஏற்படுத்த வேண்டும் என்று நாங்கள் விளைகின்றோம். அவர்களுடைய அர்ப்பணிப்பும், தியாகமும் வீணாகப் போய்விடக் கூடாது. அவர்கன் பெற்றோர் இருக்கின்ற காலத்திலேயே ஒரு விடிவு ஏற்பட வேண்டும். சுயாட்சி முறையாவது எங்கள் கைகளில் கிடைக்க வேண்டும் என்று நாங்கள் பயணிக்கின்றோம். சில நாள்களுக்கு முன்னர் ஜனாதிபதியை எங்கள் கட்சி சந்தித்துப் பேசியபோதும் இந்த விடயம் குறித் துப் பேசினோம். அதில் ஒரு மணித்தியாலம் அரசியல் தீர்வு குறித்து பேசினோம். 70 வருடங்களாக வெவ்வேறு வடிவத்திலான போராட்டங்களை நடத்தி வருகின் றோம்.

உலகத்திலே எந்தச் சமூகமும், எந்த மக்களும் இரண்டாந்தரப் பிரஜைகளாக வாழ மாட்டார்கள். அதனை ஏற்கவும் மாட்டார்கள். அப்படியிருக்க ஒரு ஜனநாயகக் கட்டமைப்பிலே ஒரு மக்கள் எண்ணிக்கையில் 3 மடங்காக இருக்கின்றபோது எண்ணிக்கையில் குறைந்ததாகக் காணப்படும் சமூகம் எப்படி சம அந்தஸ்து உடையவர்களாக வாழ முடியும்? ஏனெனில் வாக்கெடுப்பு நடத்தினால் அது ஒரு பக்கமாக சாய்ந்துதான் நிற்கும்.

ஆனபடியால்தான் அதிகாரப் பகிர்வைக் கோருகின்றோம். நாட்டிலே நாங்கள் பெரும்பான்மையாக வாழா விட்டாலும் நாம் பெரும்பான்மையாக வாழுகின்ற பிரதேசங்களிலே எங்களுக்கான அரச அங்கீகாரங்களைப் பகிர்ந்து கொடுங்கள் எனக் கேட்பதன் தார்ப்பரியம், நியாயப்பாடு அதுதான். இது செய்யப்பட வேண்டும். எவர் நிமித்தம் செய்யப்படாது விட்டாலும் மடிந்துபோன எங்களுடைய மாவீரர்களது தியாகத்தின் நிமித்தமாக அது செய்யப்பட வேண்டும்.

மாவீரர்களது உறவுகள் விசேடமாக அவர்களது பெற்றார்கள் அதனைக் காண வேண்டும். என்னுடைய மகன், என்னுடைய மகள் இதற்காகத்தான் தன்னுடைய வாழ்வைக் கொடுத்தார், அதன் பெறுபேற்றை நானாவது காண்கின்றேன் என்று சொல்லக்கூடியதாக இருக்க வேண்டும்.

தனி நாடு என்ற இலக்கை விட்டு விலகி விட்டோம் எனத் துரோகிப் பட்டம் சூட்டுகின்றவர்கள் இன்றைக்கும் எவராவது தனிநாட்டைக் கோருகின்றார்களா எனக் கேட்டுப் பார்க்க வேண்டும்.

தங்களோடு கூடக் களமாடு மடிந்தவர்களுக்கு என்று அந்தக் காலங்களில் நாட்டின் பயங்கரவாதிகள் என முத்திரை குத்தப்பட்டு வீதி வீதியாக ரயர்கள் போட்டு எரிக்கப்பட்ட தங்களுடைய சகாக்களுக்காக நினைவு கூருகின்றபோது ஜனாதிபதியிடம் கேட்கின்றோம், அந்த நேரத்தில் அடக்குமுறையை மேற்கொண்டவர்களிடம் கேட்கவில்லை, அடக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டவர்களிடம் நாம் கேட்கின்றோம்.

எங்கள் மக்களிடமிருந்து எங்கள் பிள்ளைகள் மடிந்திருக்கின்றார்கள், ஒரு நியாயத்துக்காகப் போரிட்டு மடிந்திருக்கின்றார்கள், நீங்கள் உங்கள் சகாக்களை நினைவு கூருகின்றீர்கள், அதைப் போற்றுகின்றீர்கள். இந்த நாட்டில் அனைவரும் சமன் என நீங்கள் சொல்கின்றமை உண்மையாக இருக்குமாக இருந்தால் உங்கள் சகாக்களை வணங்குவதுபோள் இதோ இந்த மாவீரர்களது கனவையும் நனவாக்குகின்ற வகையில் அரசியல் தீர்வை ஜனாதிபதி கொடுக்க வேண்டும்- என்றார். (அ)

## யாழ்...

தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் எச்சரித்துள்ளார்.

பழைய பூங்காவில் புதிதாக உள்ளக விளையாட்டு அரங்கை அமைப்பதற்கான அத்திவாரப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில், இதுதொடர்பாக பொ. ஐங்கரநேசன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு எச்சரித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடுகையில்-

யாழ்ப்பாணப் பழைய பூங்கா யாழ்ப்பாணத்தின் ஓர் தொன்மைவாய்ந்த அடையாளம் மாத்திரம் அல்ல, வாகன நெரிசல் மிக்க யாழ். நகரின் கரிக்காற்றை உறிஞ்சிச் சுத்தம் செய்யும் ஓர் பிரம்மாண்டமான காபன் வடிகட்டியாகவும் செயற்பட்டு வந்துள்ளது.

ஆனால், தொலைநோக்கற்ற, நீடித்து நிலைக்கும் பண்பற்ற அபிவிருத்தித் திட்டங்களால் தற்போது பழைய பூங்கா கட்டிடக் காடாக மாறியுள்ளது. ஆளுநர் செயலகம், நிலஅளவைத் திணைக்களம், நீர்வழங்கல் வடிகால் சபை, தேர்தல் திணைக்களம், கூடைப்பந்தாட்டச் சம்மேளனம், தொல்லியல் திணைக்களம் மற்றும் யாழ்ப்பாணப் பிரதேச செயலகம் ஆகியனவற்றின் ஆக்கிரமிப்பில் பூங்கா ஏற்கனவே மூச்சுத்திணறிக் கொண்டிருக்கிறது.

ஆங்கிலேயர் காலத்தில் மீளப்பெற முடியாத அழியா நன்கொடையாக வழங்கப்பட்ட 9.67 ஹெக்ரேயர் நிலப்பரப்பைக் கொண்ட பழைய பூங்காவில் தற்போது எஞ்சியுள்ளது 5.19 ஹெக்ரேயர் நிலப்பரப்பு மட்டுமே ஆகும். மீதமாகவுள்ள இப்பகுதியில் கூடைப்பந்தாட்ட மைதானம், வலைப்பந்தாட்ட மைதானம் மற்றும் வாகனத்தரிப்பிடத்துக்கு ஒதுக்கப்பட்ட நிலம் ஆகியனவற்றை உள்ளடக்கி 12 பரப்பளவில் உள்ளக விளையாட்டரங்கு அமைக்கப்படவுள்ளது.

இது இயங்கத் தொடங்கும்போது பார்வையாளர்களின் வருகையின் பொருட்டு சூழ உள்ள பகுதியும் அபகரிக்கப்படும் அபாயமே உள்ளது. இந்த அழிப்பை அங்கே அமைக்கப்பட்டுள்ள சிறுவர் பூங்காவால் ஒருபோதும் சமம் செய்யமுடியாது.

பழைய பூங்காவில் விடுதலைப்புலிகளின் காவல்துறை நிலைகொண்டிருந்த காலப்பகுதியில் அவர்களால் பூங்காவின் மரங்கள் அழிக்கப்படவில்லை. நிரந்தரக் கட்டுமானப் பணிகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை. வடக்கின் தற்போதைய ஆளுநர் நா. வேதநாயகன் யாழ். மாவட்டச் செயலராகப் பதவி வகித்தபோது புதிய கட்டுமானப் பணிகள் எதனையும் பழைய பூங்காவில் அனுமதிப்பதில்லை என்ற தீர்க்கமான முடியவை எடுத்திருந்தார்.

இப்போது, அவர் ஆளுநராகப் பதவி வகிக்கும் போது புதிது புதிதாகக் கட்டடங்கள் முளைக்க ஆரம்பித்துள்ளன. ஆளுநர் உடனடியாக இதனைத் தடுத்து நிறுத்தி, உள்ளக விளையாட்டு அரங்குக்கு மாற்று நிலத்தை ஏற்பாடுசெய்ய முன்வரவேண்டும்-என்றார். (அ)

## இனவாதத்தை...

சந்தித்தார். நேற்று பிற்பகல் 1 மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் இச் சந்திப்பு இடம் பெற்றது.

இனவாதத்தை ஒழிக்க, இலங்கையர் தினத்தை நடத்த, ஜனாதிபதி அநுர, தமிழ் முஸ்லிம் கட்சி எம்.பிக்களை அழைத்து, ஒத்துழைப்புகளை கோரியுள்ளார்.

இதன்போது மனோ கணேசன் தெரிவிக்கையில்-

இனவாதத்தை ஒழிக்க, நீங்கள் கோரும் ஒத்தாசைகளை முழுமையாக வழங்குவோம். நாட்டின் அனைத்து இன, மத, மொழி, தனித்துவங்கள் பேணி பாதுகாக்கப்பட வேண்டும். அதற்கு சமாந்திரமாக, 'இலங்கையர் அடையாளம்' பேணி வளர்க்கப்பட வேண்டும்.

இலங்கையில், அனைத்து பிரிவினருக்கும் இடையில், 'உரிமைகளின் சமத்துவம்' இருக்க வேண்டும். இலங்கை தின கொண்டாட்டங்களின்போது, இலங்கையின் பல்வேறு இனங்களை பிரதிநிதித்துவப்படுத்தும், முகமாக கலாசார ஊர்வலம் நடத்துங்கள். இலங்கையின் பன்மைத்துவம் பற்றி, முதலில் இலங்கையர் அறிந்துகொள்ள வழி செய்யுங்கள்-என்றார். (அ)

## உயிர்த்த...

குறித்த கலந்துரையாடலின் போது, மூன்று பிரதான விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டதாக அருட்தந்தை சிறில் காமினி குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய, ஏப்ரல் 21 தாக்குதல் சம்பவம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணை மற்றும் அதற்கு பின்னரான நீதிமன்ற நடவடிக்கைகளின் அவசியத்தை தாம் வலியுறுத்தியிருந்ததாக அவர் குறிப்பிட்டார். அதன்படி, இரண்டு வாரங்களுக்குள் இந்த யோசனையை நடைமுறைப்படுத்த தேவையான நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி இதன்போது உறுதியளித்ததாக அருட்தந்தை கூறினார்.

அத்துடன், ஏப்ரல் 21 தாக்குதலுடன் தொடர்புடைய, ஜனாதிபதி ஆணைக்குழுவின் முழுமையான இறுதி அறிக்கை, குற்றப்புலனாய்வு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# தமிழ் அரசியல் கைதிகளை விடுவித்து நல்லிணக்க சைகையைக் காட்டுங்கள்!

## ரவிகரன் எம்.பி வலியுறுத்து

கொழும்பு, நவ. 23

"ஆரோக்கியமான சமூக மொன்றை நோக்கிய ஆரோக்கிய வாழ்வு" எனும் இலக்கோடு 2026 ஆம் ஆண்டுக்கான சுகாதாரத்துறை சார்பான திட்டங்கள் முன்னகர்த் தும் இந்த அரசு, நினைவு தெரிந்த நாள் முதல் சிறையிலே தந்தை இருக்க வளரும் காலத்தில் தாயை யும் இழந்து பின்னர் கடந்த மூன் றாம் நாள் வளர்த்த பாட்டியையும் இழந்து தனித்திருக்கும் தமிழ் அரசியல் கைதி ஆனந்தசுதாகரின் பிள்ளைகளின் ஆரோக்கியத்துக்கு இந்த அரசின் 2026இன் வரவு-செலவுத்திட்டம் என்ன ஆற்றுப்ப டுத்தலை வழங்கப்போகிறதென வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கேள்வி எழுப்பினார்.

அத்தோடு இலங்கைத் தீவின் நல்லிணக்கத்துக்கான முதற்படியே சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைதான் எனத் தெரிவித்த பாராளுமன்ற உறுப் பினர், தமிழ் அரசியல் கைதிகளை விடுதலைசெய்து நல்லிணக்கத் திற்கான சைகையை காட்டுமாறும் அரசாங்கத்தை வலியுறுத்தியுள் ளார்.

பாராளுமன்றில் நேற்று இடம் பெற்ற சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சின்மீதான குழு நிலை விவாதத்தில் பங்கேற்றுக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நினைவு தெரிந்த நாள் முதல் சிறையிலே தந்தை இருக்க வளரும் காலத்தில் தாயையும் இழந்து பின்னர் கடந்த மூன்றாம் நாள் வளர்த்த பாட்டியையும் இழந்து தனித்திருக்கும் இந்த ஈழத்தின் சிறு மியை, சிறுவனை தமிழ் அரசியல் கைதியாக 17 ஆண்டுகள் சிறைக்குள் வாடும் தம்பி ஆனந்தசுதாகரின் பிள்ளைகளின் ஆரோக்கியத்துக்கு இந்த அரசின் வரவு-செலவுத் திட்டம் என்ன ஆற்றுப்படுத்தலை வழங்கப்போகிறது?

அந்தப் பிள்ளைகள் இந்த இனவாத மண்ணில் பிறந்ததைவிட வேறென்ன தவறு செய்தனர். ஆரோக்கியமான சமூகமொன்றை நோக்கிய ஆரோக்கிய வாழ்வை உங்கள் அரசு இந்தத் தீவிலே வாழும் அந்தப்பிள்ளைக்கு வழங்குமா?

இந்தத் தீவிலே ஆயுதங்களை விரும்பி ஏற்ற இனமல்ல எங்கள் இனம். அரசியல் வழியில் போராடி த்தோற்று ஆயுதங்களை ஏந்த நிர்ப் பந்திக்கப்பட்டோம். 2009 உடன் ஆயுதமும் மௌனிக்கப்பட்டது. இனங்களுக்கு இடையில் நல்லிணக் கத்தை ஏற்படுத்தவே மாறிவரும்




அரசுகள் முயல்வதாக அறிக்கைகள் காட்டுகின்றன. செய்திகளில் அரசுக ளின் சார்பாளர்களாக நீங்கள் மாறி மாறி எங்களை ஏமாற்றுகிறீர்கள்.

எங்கள் அயல்வீட்டுப்பிள்ளை – தம்பி ஆனந்தசுதாகரின் மகன் மற்றும் மகளைப் போல பிறந்தது முதல் இறக்கும் வரை பிள்ளைக ளும், சகோதரர்களும், மனைவிக ளும், கணவர்மாரும், தந்தையரும் தாய்மாரும், பாட்டன், பாட்டி மாருமாக ஒட்டுமொத்த ஈழத்தமிழி னமும் இன்னமும் வடுக்களோடு தான் நகர்கிறோம். எங்களுக்கு ஆரோக்கியமான சமூக வாழ்வுக் கான கதவை உங்கள் அரசு எப்போது திறக்கப்போகிறது?

இந்தத்தீவின் நல்லிணக்கத்துக் கான முதற்படியே - எங்களுக்காக குரல்கொடுத்து இப்போதும் சிறை யில் வாடும் எங்களின் உறவுகளின் விடுதலைதான். தயவு செய்து எங் கள் உறவு களை விடுவித்து நல்லி ணக்கச் சைகையை காட்டுங்கள்- என்றார். (அ)

# மதுரை மீனாட்சி ஆலயத்தில் வழிபாட்டில் ஈடுபட்ட ரணில்!



சென்னை, நவ. 23

இந்தியா சென்றுள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் வழிபாடுகளில் ஈடுபட்டார்.

பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமானின் திருமணத்துக்காக ரணில் விக்கிரமசிங்கவும் அவரது பாரியார் மைத்திரி விக்ரமசிங்கவும் இந்தியா சென்றுள்ளனர்.

இந்நிலையில் தம்பதியினராக இருவரும் நேற்று மதுரை மீனாட்சியம்மன் கோயிலுக்குச் சென்றனர். (அ)

காலி, மாத்தறையில் வெள்ளப் பெருக்கு

# பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு விசேட போக்குவரத்து ஏற்பாடுகள்

காலி, நவ. 23

காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் பல பகுதிகள் கனமழை காரணமாக வெள்ளத்தில் மூழ்கியதை அடுத்து, 2025ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக் கான போக்குவரத்து வசதிகளை மேம்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக பரீட்சை கள் ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

இந்த மாவட்டங்களுக்குள் பல இடங்களில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக போக்கு வரத்துக்கு இடையூறுகள் ஏற்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதற்கு பதிலளிக்கும் விதமாக, அந்தந்த பரீட்சை நிலையங்களுக்கு செல்லும் மாணவர்களுக்கு உதவுவதற் காக படகு வசதிகளை ஏற்பாடு செய்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்ட மாணவர்கள் தங்கள் பரீட்சை நிலை யங்களுக்கு தாமதமின்றி சென்றடையக்கூடிய வகையில் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் தற்போது செயல்படுத்தப்பட்டு வருவதாக பரீட்சைகள் ஆணை யாளர் நாயகம் ஏ.கே.எஸ். இந்திகா குமாரி லியனகே தெரிவித்துள்ளார்.(எ)

# கரையோர ரயில் சேவை பாதிப்பு

கொழும்பு, நவ. 23

கரையோர ரயில் மார்க்கத்தி லான போக்குவரத்து நடவடிக்கை கள் வெலிகம வரை மட்டுப்படுத்தப் பட்டுள்ளதாக ரயில்வே திணைக் களம் அறிவித்துள்ளது.


மாத்தறையிலிருந்து மருதானை நோக்கி நேற்று முன் தினம் பிற்பகல் 02.05 அளவில் பயணித்த ரயில் ஒன்று, கம்புருகமுவ மற்றும் வெலி கம ரயில் நிலையங்களுக்கு இடை யில் தடம் புரண்டது.

குறித்த ரயிலை தடம் ஏற்றுவத ற்கு பணிக்குழாமினர் நடவடிக்கை எடுத்த போதிலும் மீண்டும் அந்த ரயில் தடம்புரண்டதாக தெரிவிக் கப்படுகின்றது.

இதனால் கரையோர மார்க்க த்திலான ரயில் போக்குவரத்துக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

தற்போது குறித்த ரயிலை தடம் ஏற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# ஜார்க்கண்ட் முதல் பெண்மணி சிறிதரன் எம்.பியுடன் சந்திப்பு



புதுடில்லி, நவ. 23

இந்தியாவின் ஜார்க்கண்ட் மாநில முதல் பெண்மணியும், ஜார்க்கண்ட் மாநில முதலமைச்சர் ஹேமந்த் சொரேனின் மனைவியும், ஜார்க்கண்ட் மாநில சட்டமன்ற உறுப்பினருமான கல்பனா சொரேனை ஜார்க்கண்ட் மாநில முதலமைச்சரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் பாராளுமன்ற உறுப்பி னரும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன் சந்தித்து கலந்துரையாடினார்.

ஜார்க்கண்டில் பெண்களுக்கு அதிகாரம் வழங்குதல், தாழ்த்தப் பட்டோரை மேம்படுத்துதல், மக்கள் மயப்பட்ட முதன்மை கொண்ட அரசியல் பாரம்பரி யத்தை தொடர்தல் ஆகியவற்றில் அர்ப்பணிப்புடன் செயல்படும் வலிமையான இரக்கமுள்ள பெண் மணியாக, தலைவியாக தன்னை அடையாளப்படுத்தும், கல்பனா சொரேன் தனது கணவரும் மரபுத் தலைவருமான முதல்வர் ஹேமந்த் சொரேனின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி சமூகநீதி, பழங்குடி மக்களின் உரிமைகளைப் பாதுகாப் பதுடன் நம்பிக்கையுடன் கூடிய மாற்றத்திற்காக குரல் கொடுக்கும் வலிமையும், இரக்கமும் உள்ள ஜார்க்கண்டின் இரும்புப் பெண் மணியாவார்.

இச் சந்திப்பில் இலங்கையின் கிழக்கு மாகாண முன்னாள் ஆளு நரும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான், மலேசியா இந்திய காங்கிரஸின் துணைத் தலைவரும் மலேசிய நாட்டின் மேநாள் அமைச்சரும் இந்நாள் பாராளுமன்ற உறுப்பினருமான டத்தோ சிரீசரவணன், இலங்கை பாராளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி பாராளுமன்றக் குழுத் தலைவரு மான சிவஞானம் சிறீதரன், ஜார்க்கண்ட் மாநிலத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இந்திய பாராளுமன்ற உறுப்பினர் திருமதி மஹீவா மாஜி ஆகியோர் கலந்துகொண்டனர். (அ)

# 5 பொலிஸ் அதிகாரிகள் உடனடியாக இடமாற்றம்

கொழும்பு, நவ. 23

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட 25 பொலிஸ் அதிகாரிகள் உடனடியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதியுடன் பொலிஸ் மா அதிபர் நேற்று முன் தினம் முதல் இந்த இடமாற்றங்களை வழங்கியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதனிடையே, போதைப்பொருள் கடத்தல்காரர்களுடன் தொடர்பு வைத்திருந்ததாக குற்றம் சாட்டப்பட்ட, நுரைச்சோலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக இருந்த ரவி பத்மகுமார, 19 ஆம் திகதி முதல் கம்பஹா பிரிவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் மா அதிபரின் உத்தரவின் பேரில் அவருக்கு எதிராக விசாரணை நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 23.11.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org